கற்பனாலயா வெளியீடு

மலர் 10
2007

# மண்வாசம்

பல்சுவை இலக்கிய மாத இதழ் MANNVAASAM

10






அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. குறள் –76

2.50

# BOBBIKA



## Bridal & Hair styling

Certified Hair Stylist, Over 14years Experience in SriLanka, India & Canada







திருமணம், பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு, ஒன்று கூடல்
வைபவங்களுக்கு பெண்களை
அழகுபடுத்த அழையுங்கள்

**Bobbika 905- 470 0337 , 416- 737 4807**

# RBC Insurance

RBC™

கனடாவின் மிகப்பெரிய வங்கி மூலம்
சேமிப்புடன் கூடிய காப்புறுதித் தேவைகளுக்கு



அழையுங்கள்

பொபி கனகரட்ணம்

*416-522 0971, 905-760 8060*


# மண்வாசம்

இலக்கிய மாத இதழ் MANNVAASAM



இது ஓர்
கற்பனாலயா வெளியீடு

கற்பனாலயா



விலை 2.50

மண் வாசம்
பல்சுவை இலக்கிய மாத இதழ் MANNVAASAM

*Mannvaasam Registration No: (Bin) 60226544*
*Registered as a Multi Literature Magazine in Canada*

## மண்வாசம் - நிர்வாகிகள்

| | |
|---|---|
| உரிமை | *சிவபவானி* |
| பிரதம ஆசிரியர் | *இரா.தணி* |
| நிர்வாக ஆசிரியர் | *சு.விவேகானந்தன்* |
| உதவி ஆசிரியர் | *ச.க.ஆறுமுகசாமி* |
| வெளியீடு, நிர்வாகம் | *கற்பனாலயா* |
| ஆலோசகர்கள் | *க.விவேக்*<br>*த.கண்ணம்மா*<br>*சிவபவானி* |
| வடிவமைப்பு | *புறோ ரச்*<br>*- யோகேஸ்* |
| விநியோகம் | *கோவி, சசி, வேதா*<br>*காண்டி, பவா* |

# பிரதம ஆசிரியர்
## சிந்தனையில் இருந்து....

வாழ்ககை பொய்யானது நிரந்தர மல்லாதது இப்படி மனித, மற்றைய உயிரினங் களுக்கும் கூறப்பட்டுள்ளதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். இதை அறிந்து நாம் வாழும் காலத்தில் என்னென்ன செய்தோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். வாழ்ந்த வாழ்க்கை வரலாறாக வேண்டும். இன்று அகிலத்தில் பற்பல துறைகளில் பலர் சிறந்து விளங்குகிறார்கள். நாம் அதைப்பார்த்து ஆகா, ஓகோ என்கின்றோம், விமர்சிக் கின்றோம். அவர்களைப் போல் ஏன் எம்மால் வரமுடியவில்லை என்று நாம் சிந்திப்பதில்லை. நாம் ஒரு குறுகிய வட்டத்துக்குள் வாழ்ந்து கொண்டு, எவரையும் மட்டம் தட்டி, ஏமாற்ற வழிதேடி, பொறாமை, தான்தோன்றித் தனம், ஏமாற்றுதல், துரோ கத்தன்மை போன்ற போர் வையை இழுத்து மூடிக் கொண்டு வாழ்கின்றோம். ஒருவன் உயிரோடு இருக்கும் வரை, அவனின் அயராத உழைப்பை பங்கிட்டு, அவனைப் புகழ்பாடி, தலையில் தூக்கிக் கொண்டாடி விட்டு, அவன் எதிர்பாராமல் திடீரென இறந்து விட்டால், அவனை நம்பி இருந்த மனைவி, மக்களுக்கு சொத்தில் உரிமை யில்லை. தமக்குத்தான் உரிமையென உரிமைக்குரல் எழுப்பும் சமுதாயம் எம்முள் உள்ளவரை எமக்கு உயர்வே இல்லை. இறக்கும் போது நாம் தேடிய அனைத்தையும் லொறியிலா ஏற்றிக் கொண்டு போகின்றோம். வாழ்க்கை நிரந்தரம் என்று நினைப்ப வர்கள், சுயநலக்காரர் இறக்கும் போது உயிர் போகாது ஊசலாடுவதை நாம் கண்டுள்ளோம். இவர்களின் கஸ்டத்தைப்பார்த்து, பால் வார்ப்பார்கள், காசை உரஞ்சி பருக்குவார்கள்ஏன் மண்ணைக் கூட உரைத்துப் பருக்கு வார்கள். ஏனய்யா இது வரும் போது நிர்வாணமாகப் பிறந்த நீ இறக்கும் போது அப்படியே

போகிறாய். உன்னோடு கூட எதுவும் வரப்போவதில்லை. இதைக் கண்ணதாசன் வீடு வரை உறவு, வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை என்றார். படித்தோம், பார்க்கிறோம் என்று கூறி எம்மையே ஏமாற்றுகின்றோம். ஒருவன் பக்கம் போட்டு எழுதுகின்றான் என்றால் அதில் என்ன உள்ளது இதில் என்ன நன்மையான விடயங்கள் உள்ளன என நாம் படிக்க வேண்டும். அதைக் குப்பை என்று எண்ணினால் உன் உள்ளம் தான் குப்பையானது. இன்று நாட்டில் எழுதுபவர்கள் எழுதியபடி இருக்கிறார்கள். படிக்கிறவர்கள் படிக்கிறார்கள். ஆனால் காலத்தையும் நேரத்தையும் வீணடிக்கும் மனிதர்கள் பூமியில் பாரமாக உள்ளவரே. இன்னமும் எமக்கு சந்தர்ப்பம் உண்டு. உள்ள வரை நல்லதை நினை, நல்லதைச் செய், நல்லதை எழுது, படி. வாழ்வின் பலனைப் பெறுவாய் என்பதை மண் வாசம் சொல்லி எல்லோரும் நல்லோரே பிறப்பால் எனக் கூறிக்கொள்கின்றது.

வணக்கம்

பிரதம ஆசிரியர்
-இரா-தணி

மண்வாசத்துடனான தொடர்புகட்கு:

**MANNVAASAM**
*18 Mondeo Drive #639*
*Scarborough, ON*
*M1P 5C8*
**Tel: 416-987-3167**
e-mail: Mannvaasam@yahoo.ca




வாங்கிப் படியுங்கள்
தொடர்புகட்கு
416-987-3167

இம்மாத சிறுகதை

# சின்னச் சின்ன ஆசை

--சிவபவானி--

பல கோணங்களைக் கொண்டது ஆசை. இது மனிதரை தூக்கியும் வைக்கும், வழுக்கி விழவும் வைக்கும். மனித உள்ளங்களில் இரண்டறக் கலந்தது. கேசவன் மனதில் இளமை முதல் ஏராளமான ஆசைகள். அப்போது கேசவன் ஓ.எல் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அச்சுவேலியில் இருந்து புத்தூரு க்குப் படிக்கப் போவான். மகனின் விருப்பப்படி தந்தையார் ஒரு புதுச்சயிக்கிள் வாங்கிக் கொடுத்தார். பாட சாலையில் அமைதியான மாணவன். படிப்பிலோ கெட்டிக் காரன். விஞ்ஞானத் துறையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று ஓ.எல் வகுப்புக்குப் போனபோது தான் மாலினியின் தொடர்பு அவனுக்கு கிட்டியது. அவளும் அவனின் வகுப்பு. நாளடைவில் இருவரும் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிட்டியது. அவள் பாடசாலை உடையில் டையும் கட்டி நடந்து போகும் அழகும் அவளின் தலை மயிர அழகும் அவனைக் கவர்ந்தது. அவளின் தலை மயிரைத் தன்கைகளால் கோதி விட வேண்டும் என்ற ஒரு சின்ன ஆசை மனதில் துளிர் விட்டது. இது எப்படிச் சாத்திய மாகும் என்பது தான் மனதில் பெரிய கேள்வி.மாலினி கேசவனுடன் நெருங்கிப் பழகினாள். அவளின் சிரிப்பில் தெத்துப் பல்லின் அழகைக் கண்டான். அவள் பாடம் சம்பந்த மாக ஏதும் கேட்டால் விளக்க மாகவும், ஆர்வமாகவும் விளங்கப்படுத்துவான். இப்படியே ஏ.எல் இறுதியாண்டுக்கு! இருவரும் சென்ற போது நாட்டுப் பிரச்சினை காரணமாக பாட சாலைக்குச் சயிக்கிளில் போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட போது, ஏழ்மையில் வாழும் சிலருக்கு சயிக்கிள் வசதி கிடைக்கவில்லை. அதில் மாலினியும் ஒருத்தியானாள். தன் காலே உதவி என நினைத்த மாலினி நடந்தே புத்தூருக்குப் படிக்கச் செல்லலானாள். இதை அவதானித்த கேசவன் சயிக்கிளை நிறுத்தி மாலினியை நோக்கி னான். அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் நிறைந்து இருந்தது. மூச்சு மேலும்கீழும் வந்து கொண்டிருந்தது. பாடப் புத்தகங்கள் ஒரு பழைய சீலைப் பையில் நிறைந்து இருந்தது. மனதை ஒரு நிலைக்குக்

கொண்டுவந்த கேசவன் மாலினி விருப்பம் என்றால் எனது சயிக்கிளில் பாடசாலைக்கு வரலாம் ஏறு என்றான்.

யோசனையுடன் கேசவனைப் பார்த்த மாலினி, தயக்கத்துடன் ஒருநாள் மட்டும் சயிக்கிளில் வரலாம், பிறகு நடக்கத்தானே வேண்டும் என்றாள், கேசவன் சிரித்தபடி எமது படிப்பு முடியும் வரை என்னுடன் நீ வரலாம் பயப்படாதே என்றான். அவள் சரியெனத் தலையாட்டினாள். சயிக்கிளின் பின்கரியரில் புத்தகங்களை கட்டிவைத்து அவளை முன்னால் ஏற்றினான் கேசவன். கேசவனின் சின்னச் சின்ன ஆசைகளில் ஒன்று நிறை வேறியது போன்ற மகிழ்ச்சியில் சயிக்கிளை லாவகமாக ஓட்டியபடி பாடசாலைக்குள் நுளைந்தனர். மாலினிக்குச் இது சற்று கிலேசமாக இருந்தாலும் நாளடைவில் மனதில் ஒருதெம்பு ஏற்பட்டது. அப்போது ஒருநாள் இருவரும் சயிக்கிளில் வந்து கொண்டிருக்கும் போது காத்து பலமாக வீசியது. மாலினி முழுகி இருந்தபடியால் தலை மயிர் காற்றில் மிதந்து கேசவனின் முகத்தில் அலை மோதியது. ஒரு கையில் காண்டிலைப் பிடித்தபடி தலை மயிரை விலத்தினான். எதை மனதுள் விரும்பினானோ அந்த ஆசை தானாகவே நிறை வேறியது போன்ற ஒரு ஆசை அவனுக்கு. இதை உணர்ந்த மாலினி , தலையை ஒழுங்காகக் கட்டி இருக்கலாம் உங்கள் முகத்தில் பறந்து அடிக்குது என்று வருத்தப்பட்டுக் கூறினாள். மாலினி உன் தலைமயிர் என் முகத்தை முத்தமிட நான் தான் கொடுத்து வைக்கவேண்டும் என்றான் நகைச்சுவையாக. மாலினி மௌனமானாள்.

ஒருவருடம் ஓடியது. மாலினியும் கேசவனும் அந்நியோன்யமாக பழகினார்கள். இறுதி ஆண்டுத்தேர்விலும் இருவரும் தேர்வாகினார்கள். யாழ் வளாகம் கிடைத்தது. ஆனால் மாலினியின் பொருளாதாரப் பிரச்சினையை முன்வைத்த பெற்றோர் அவளை வேலைக்குப்போகும் படி கூறினர். இதை கேசவனிடம் கூறிய போது அவனுக்கு கவலையாகப் போய்விட்டது. அன்று மாலினி யைச் சந்தித்த கேசவன் மாலினி இனி எம்மில் ஒழிவுமறைவு தேவையில்லை. நான் உன்னைக் காதலிக்கின்றேன் உன்னை நான் படிப்பிக்கின்றேன். இதை உன் வீட்டாருக்குக் கூறு என்றான். மாலினி மௌனமா இருந்தாள். என்னயோசனை. நானே உன் வீட்டுக்கு வந்து கதைக்கின்றேன் என்றான். மீண்டும் அவள் மௌனம் என்ன மாலினி உன் பதிலைக்கூறேன் பிளீஸ் என்றான் பரிதாபமாக கேசவனைப் பார்த்த மாலினி தொண்டையை எச்சில்

விட்டு நனைத்தபடி கேசவன் உண்மையில் உங்கள் பண்பு, அன்பு, இப்போது எனக்குப் புரிகிறது. நீங்கள் ஆண். உங்கள் மனதில் உள்ளதை அப்படியே கொட்டிவிட்டீர்கள். என்னால் அப்படி முடியாது. எனக்கு நான்கு தங்கைகள் என்னை நம்பி உள்ளனர். அப்பா அம்மாவுக்கு சிறு வருமானம். நாட்டு நிலைமையால் தோட் டங்கள் வருமானம் இல்லை. எமக்கு வேறு உதவிகளும் இல்லை. அப்பா இதை அடிக்கடி கூறி ஞாபகப்படுத்தி என் பொறுப் புக்களை நானே நிவர்த்தி செய்யும்படி கூறுவார். அவர் களின் ஆசைகள், தேவைகளை கட்டாயம் நான் நிறைவேற்ற வேண்டும் அதுவரை உங்களால் காத்திருக்க முடியுமானால் நான் அதிஷ்டசாலிதான் என்றாள். மாலினியின் உள் மனதை, பொறுப்பை அவள் வார்த்தை களில் இருந்து உணர்ந்தான் கேசவன் ஒரு திடமான முடிவுடன் மாலினி உன் மீது கொண்ட காதலை என்னால் அழிக்க முடியாது. எனக்கு நீதான் வேண்டும். அதுவரை காத்து இருப்பேன். என்ன உதவிகள் வேண்டுமோ செய்ய காத்தி ருக்கிறேன் என்றவனின் கண்கள் கலங்கியது. இதைக் கண்ட மாலினி என்ன இது. சின்னப் பிள்ளையைப் போல, எழுந்து அவன் கண்களைத் துடைத்து விட்டாள். இது போதும் மாலினி உனக்காக வாழ் நாளெல்லாம் காத்திருப்பேன் என்றவன் அவளை அணைத்து தலையிலும் கன்னத்திலும் முத்தம் கொடுத்தான். இருவரும் மனம் இன்றிப் பிரிந்தனர். யாழ் வளாகத்துக்குப் போய்வந்தான் கேசவன். மாலினிக்கும் வளாகத்தில் வாசிகசாலையில் வேலை கிடைத்தது. மீண்டும் பிரயாணப் பிரச்சனை. மாலினி யையும் சயிக்கிளில் ஏற்றியபடி வளாகம் வந்தான் கேசவன். மூன்று வருடங்கள் விரைவாக ஓடி மறைந்தது. காதல் காதலாகவும், படிப்பு, வேலை இப்படியே ஓடியது. வளாகத்தில் முதல் மாணவனாக தெரி வானான் கேசவன். எம்.எஸ்.ஸி படிக்க கொழும்புக்கு சென்ற கேசவன், பிரிவுத் துயருடன் கொழும்பு வந்தான். அடிக்கடி கடிதங்கள் மாலினிக்கும், கேசவனுக்கும் தொடர்பை ஏற்படுத்தியது. மனதில் உள்ள ஆசைகள், எதிர்காலம் பற்றிய தாக இருந்தது இருவரின் கடிதங்களும். ஆனால் அவர் களின் தூயமனங்களுக்கு மட்டும் சோதனை போல் சோதனை. எம்.எஸ்.ஸி முடித்த கேசவன் பீஎச்.டீ தெரிவானான். அவனுக்கு ஸ்கார்சிப்பும் லண்டனில் கிடைத்தது. மாலினியின் விருப்பப்படி லண்டனுக்குப் படிக்கப் புறப்பட்டான் கேசவன். பிரயாணப் பிரச்சினையால் வழியனுப்ப மாலினியால் வர

முடியவில்லை. மனச்சுமையுடன் லண்டன் பயணமானான் கேசவன். லண்டனில் கேசவனின் படிப்பு ஓகோ என்று ஓடிக் கொண்டிருந்த போது நாட்டில் பெரும் பிரச்சினைகள் உருவா கியது. வளாகங்கள் மூடப்பட்டன. மாலினி வேலையுடன் வெளிவாரி பட்டப்படிப்பை முடித்து கொழும்புக்கு இட மாற்றம் செய்யப்பட்டு வந்தவள் கூடவே தங்கைகள் பெற்றாரை யும் கொழும்புக்கு கூட்டிவந்து வாடகை வீட்டில் குடியேறினாள் வருடங்கள் ஐந்து ஓடியது. இட மாற்றங்களும் நாட்டுப்பிரச் சினைகளும் சேர்ந்து மாலினி கேசவன் தொடர்பைத் துண்டித் தது. மாலினியும் கேசவனும் மனத்தளவில், காலத்தின் கோலத்தின் பிரிவில் திண்டாடினர். இப்போது மாலினி கொழும்பு வளாகத்தில் விரிவுரையாளராகப் பதவி ஏற்றும் படிப்பைத் தொடர்ந்தாள். இப்போது அவளுக்கு குடும்பப் பொறுப் பில்லை. நாலு தங்கைகளும் கல்யாணம் செய்து வாழ்கி றார்கள். தாய் தந்தையாரும் பரலோகம் போய்விட்டனர். மாலினி மட்டும் தனிமரம். மனதில் கேசவனை சுமந்து அவளின் சின்னச்சின்ன ஆசை களை மீட்டபடி ஐம்பது வயதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். அவன் எழுதிய பழைய கடிதங் களை மீண்டும் வாசிப்பாள். அதில் ஒரு பெரிய இன்பம் அவளுக்கு. தன் வாழ்க்கைப் பாதையை ஒன்றன் பின் ஒன்றாக வரிசைப் படுத்திப் பார்ப்பாள். ஒரு வரட்டுப் புன்னகை மட்டும் மலரும். கேசவன் இளமையில் அவளைப் பார்த்துப் பாடும் பாட்டு அவளுக்கு அடிக்கடி ஞாபகம் வரும். குங்குமம் பிறந்தது மரத்திலா குமரிப்பெண்ணின் உதட்டிலா. இப்பாடலை சீடியில் அடிக்கடி மாலினி கேட்பாள். ஐம்பது வயதாகியும் அவள் மனம் அந்த இளமையுடன் வாழ்கிறது. எப்பவாவது கேசவன் வருவான் என்ற நம்பிக்கையை அவள் இழக்கவில்லை. அவன் தன்மீது கொண்ட ஆழமான காதலை உணர்ந்து இருந்தாள். இந்த எண்ணங்கள் இப்போது அவளைத் தூங்கவிடாது அலை மோதும். அவரும் பிரமச்சாரியாக இருப்பாரா அல்லது-- மனம் பல கேள்விகளை எழுப்பும் இப்போது கேசவனைப் பார்க்க வேண்டும், அவன் மடியில் கிடந்து அழ வேண்டும் என்ற ஒரு தாபம் ஏற்படும். தன் நிலையை எண்ணும் போதுதான் மற்றையவர் வேதனை புரியும் என்பது போல் அவளுக்கு இருக்கும். தன்வயதுக்குத்தான் இனியொரு கல்யாணமா? சிரிப்பார்களே. வாழ்க்கை தனக்குத்தானே யார் சிரித் தென்ன, அழுதென்ன மனதைத் தேற்றுவாள்.

மாலினிக்குப் பதவி உயர்வு. அவளின் திறமைகள் வளாகத்தை

மெருகூட்டின. அப்போது தான் அவளுக்கு செமினாருக்கு லண்டன் போக வசதிகிடைத்தது. எப்படியும் கேசவனை சந்திக்கலாம் என்ற ஒரு நம்பிக்கை மனதில் ஒரு மூலையில் இருந்தது. அப்படிச் சந்திக்க முடியவில்லை என்றால்--- மனம் உள்ளே அழுதது. கேசவன் இல்லை என்றால் பட்டம், பதவிகள் தான் ஏன். அவளின் முழு மனதையும் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது கேசவன் தான். பிரயாணநாளும் வந்தது. புறப்பட்டாள் மாலினி. எயர்லங்கா கீத்திரோ எயர் போட்டில் வந்து நின்றது. எயர்போட்டுள் வந்த மாலினியை ஒரு இந்தியப் பெண் வரவேற்று தன்வாகனத்தில் ஏற்றிக் கொண்டாள். அவள் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையில் புரபேசராக இருப்பவள். மாலினியை ஒரு கட்டடத்தில் இறக்கி உள்ளே கூட்டிப்போய் தங்க வைத்தவள் தான் மற்றாஸ் தமிழ் என்று கூறி ஆங்கிலம் கலந்த தமிழில் கதைத்தாள். மிஸ் மாலினி நீங்கள் இரண்டு மாதம் செமினாரில் கலந்து கொள்ளலாம். சகல வசதிகளும் உங்களுக்கு செய்யப்பட்டுள்ளது. அது சரி உங்களை ஒன்று கேட்கலாமா என்று இழுத்தாள். அந்தக் கேள்வியின் உள்அர்த்தம் மாலினிக்குப் புரிந்தாலும் கேட் கலாமே என்றாள். அதிகமாகப் படித்த அறிவாளிகள் எல்லாம் திருமணம் செய்யாமல் இருக்கிறார்கள். தன்னுள் சிரித்த மாலினி அவளைப் பார்த்து, ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பல ரகசியங்கள் புதைந்து இருக்கும் என்றாள்.

உண்மைதான். எமது இந்த ஒக்ஸ்போட் சர்வகலா சாலையில் ஒரு பெரிய புரபெஷர் பெயர் கேசவன். அவர் திருமணம் ஆகாதவர். பிரபலமான கெட்டிக காரர். அவர் மனதில் காதல் தோல்வி என்று அறிந்தேன். அவர் தன் மனதில் அவளை நினைத்து பல சின்னச் சின்ன ஆசைகளை வளர்த்து இருந்தார். காதல் பொல்லாதது உண்மை யான காதல் பெண்ணிடம் மட்டும்தான் என்பதை உடைத்த மாமனிதர் கேசவன் என்றாள் அந்த இந்தியப்பெண். மாலினியின் மனம் துடித்தது. வந்ததும் உடன் அறிந்த நல்ல செய்தி. நான் உடனே அவரைப் பார்க்க முடியுமா என்றாள். இந்தியப் பெண் ஆச்சர்யத்துடன் மாலி னியை நோக்க என் காதலர் அவர்தான் அவரின் காதலி நான் தான் என்றாள். அப்படியா--- பார்க்கலாம்--- இப்போது அவர் உயிரோடு இல்லை. நேற்றுத்தான் மரண மானார். மாரடைப்பால் இறந்து விட்டார். ஆனால் நாளை தான் அடக்கம் செய்யப்படும் என்றாள்.

மாலினியின் தலை வெடிப்பது போல் இருந்தது.

கேசவன் என்று கத்தியவள் அப்படியே சாய்ந் தவள் மீண்டும் எழவில்லை. இந்தியப் பெண் புரபெஷரின் வாக்கு மூலப்படி கேசவனும் மாலினியும் காதலர்கள் தான் என்பதை உணர்ந்த நிர்வாகம் அந்த இரு உடல்களையும் அருகருகே அடக்கம் செய்தனர். சின்னச் சின்ன ஆசைகளைச் சுமந்த அந்த காதலர்கள் வாழ்க்கைக்கு யார் தான் சிலை எடுப்பார்கள்.

..............*முற்றும்*..............

1851 இல் முதன் முதல் உலகளாவிய கண்காட்சி இங்கிலாந்தில் நடைபெற்றது. இளவரசர் அல்பிரட்டால் ஒழுங்கு செய்யப்பெற்ற இக்கண்காட்சியில் 6 மில்லியன் மக்கள் கலந்து கொண்டனர்.

## தகவல் துளிகள்

காகங்கள் இல்லாத நாடு அவுஸ்திரேலியா

1863 இல் முதன் முதல் நிலக்கீழ் புகையிரத சேவை இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

உலகின் இரண்டாவது பெரிய தீவு நியூகெனியா ஆகும். இதன் பரப்பளவு 779,000 சதுர கிலோ மீற்றர்.

செஞ்சிலுவைச் சங்கம் 1864 ல் ஆரம்பிக்கப்பட்டது. இம்மாநாட்டில் 26 நாடுகள் பங்கேற்றன.

இம்மாத சிறுகதை

# காதல் ஒரு சிக்னல்

--மதுகன்--

காலை நேரம் உலக சகல ஜீவ ராசிகளுக்கும் ஒரு புத்துணர்வான நேரம். ஜீவன் அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டான். இதற்கு அவனின் மனதில் துளிர் விட்ட காதல்தான் முக்கிய காரணம். இது சகல இளைஞர்களுக்கும் ஏற்படும் ஒரு செயல். ஜீவனின் மனம் ஒரு கணம் மனுஷாவை எண்ணிக் கொண்டது. அவளின் அழகு, காந்த விழிகள், அரை வாசி பாப் செய்து கொண்ட தலை முடி. உடல் அழகு இவற்றில் மெய் மறந்த ஜீவன் தன் மனதுள் சிரித்துக் கொண்டான். தன்காதல் சிதறப்போவதையோ, ஏமாற்றம் வரப்போவதையோ உணராமல் காதல் கனவில் மிதந்து கொண்டிருந்தான். அப்போது அவனின் கான்போன் அலறியது. நம்பரைப் பார்த்தவன் புன்னகையுடன் மனுஷா காய் என்றான். இன்றைக்கு சனிக்கிழமை வேலை இல்லைத் தானே. சென்ரர் ஐலண்ட் போகலாமா? ஜாலியாக இருக்கும் என்றாள். அவளின் ஏக்கப் பெருமூச்சு அவனின் காதில் விழுந்தது. ஜீவனின் மனம் துள்ளியது. மறுப்பே இல்லாமல் சரி. எங்கே உன்னைப் பிக்கப் பண்ணுவது என்றான். உங்கள் அப்பாட் மென்டில் கீழே தான் நிற்கிறேன் என்றாள் மனுஷா.

அவசரமாக பீ 02வுக்கு ஓடிய ஜீவன் காரை எடுத்துக் கொண்டு வெளியே வரவும் மனஷா ஓடிவந்து காரின் முன் ஆசனத்தில் அமர்ந்து கொண் டாள். சற்றுநேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்த ஜீவனைச் சுயநினைவுக்கும் கொண்டு வந்தாள் மனுஷா. சுய நினைவுக்கு வந்த ஜீவன் காரை ஓட்டிக்கொண்டு யூனியனை வந்தடைந்து சென்ரர் ஐலண்ட் போகும் வள்ளத்தில் ஏறி அருகருகே அமர்ந்தபடி கடலை நோக்கினர்.

அந்தக் காதல் இளம் சிட்டுக்கள் சென்ரர் ஐலண்ட் தீவில் காலடி எடுத்து வைத்த போது ஏராளமான மக்கள் ஏற்கனவே வந்துவிட்டனர். மனஷா ஜீவனின் கைகளை மெதுவாகப் பற்றி ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி அங்கே அமருவோமா என்றாள். மறுக்காத ஜீவன் அவளுடன் சேர்ந்து அமர்ந்து கொண்டான்.

இருவருக்கும் இடையில் சற்றுநேரம் அமைதி. அதை மனுஷாதான் உடைத்தாள். ஜீவன் உங்களை என்னால் முழுக்கப் புரிந்து கொள்ள முடியவில்லை. காதல் என்பதன் அர்த்தத்தை நீங்களோ அல்லது நானோ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று தான் நினைக்கின்றேன் என்றாள். பட்டென மனுஷாவை கேள்விக் குறியுடன் நோக்கினான் ஜீவன். நான் உங்களை நெருங்கும் போதெல்லாம் என்னை விலத்தித் தூரத்தில் வைக்கின்றீர்கள். என் ஆசைகளை முற்றாக உணர்ந் தும் உணராமல் நடிக்கிறீர்கள். ஏன் இப்படி இன்று இதற்கு ஒரு நேரடிப் பதில் வேண்டும் என்றாள். ஒரு அமைதிச் சிரிப்பை சிரித்த ஜீவன் மனுஷா என்றான் இறுக்கமான குரலில். நாங்கள் இருவரும் உண்மையான காதலர்கள்தான். அதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம். அனால் உன் அவசரக்காதல் செய்யக் கூடாத செயல்களைக் கல்யாண த்தின் முன் செய்யத்துடிக்கிறது. அதுதான் தப்பு என்றான். மனுஷாவின் முகம் அட்ட கோணத்தில் மாறியது. முகத் தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டவள், கல்யாணத்தின் பின் ஏற்படும் காதலிலும் பார்க்க முன் ஏற்படும் காதலில் தான் இன்பம் அதிகம் உண்டு என்றாள். ஜீவன் சிரித்துவிட்டு நீ கனடாவில் பிறந்தவள், வளர்ந்தவள். நான் எனது தாயகத்தில் பிறந்து கனடா வந்தவன். உனக்குப் புரியாத பல விடயங்கள் எனக்குப் புரியும். என்னிலும் பார்க்க ஆறுவயது சிறியவள். பல விடயங்கள் உனக்குப்புரியாது. காதல் என்பது புனிதமானது. வாழ் நாள் பூராகவும் இது நிலைத்து நிற்க வேண்டியது. கல்யாணத்தின் முன் உள்ள காதலிலும் பார்க்க கல்யாணத்தின் பின் ஏற்படப் போகும் காதலின் பெறுமதி இரண்டு மடங்காகும் என்றான் ஜீவன். உங்களின் தத்துவம் கேட்டுக்கேட்டே என் காது புளித்துவிட்டது என்றாள் கோபத்துடன். ஜீவன் பரிதாப த்துடன் அவளைப் பார்த்து வழக்கம் போல இன்றும் இரண்டு பேருக்கும் போராட்டம் தானா என்றான். நீங்கள் என்று என் வழிக்கு வருகின்றீர்களோ அன்று தான் நம்ம திருமணம் என்றாள் மனுஷா. அவளின் பதில் ஜீவனை யோசிக்க வைத்தது. சட்டென மனுஷாவை நோக்கி, நீ எண்ணிய படி என்னால் நடக்க முடியும். எமது கண்மூடிக் காதலால் மனம் இணைந்தது போல் உடலையும் இணைத்துக் கொள்ளமுடியும். இதல் காதல் அல்ல காமம். உடல் வெறி. காதலிக்கலாம் அது மனதளவில். உடல் இச்சைக்காகக் காதலிக்கக் கூடாது. கல்யாணத்தின் பின்

காதலர்கள் இணைந்து கொள்வது தப்பே இல்லை. உன் விருப்பப்படி கோட்டல், றூம் இவற்றுள் செல்வது புனித காதலால் அல்ல. காமத்தால் தான். இதை நான் வெறுக்கிறேன் என்றான் ஜீவன்.

அப்படியானால் என் வழிக்கு வரமாட்டீர்கள் அப்படி த்தானே. என்னைப் பொறுத்த வரை கல்யாணத்தின் முன் நாம் அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவித்தால் ஒருவரை ஒருவர் உணரமுடியும். பாசம் ஏற்படும். பேசிச் செய்யும் கல்யாணத்தைக் கூட இதனால் தான் நான் வெறுத்தேன். இந்தக் காரணத்தால் தான் நான் உங்களை மனமாரக் காதலித்தேன். இப்படியான ஒரு பெலவீனம் உங்களிடம் உள்ளது என்னால் ஜீரணிக்க முடியாததாகவுள்ளது. உங்களுக்கு உங்கள் கொள்கை சரியானால், எனக்கு என் கொள்கை நூற்றுக்கு நூறு சரி என்றாள் மனுஷா. அவளின் வார்த்தைகளில் நிதானம் இருந்தது. உலகத்தில் தம் காதலுக்காகப் போராட்டம் நட்தியவர்களும், அதில் வெற்றி தோல்வி அடைந்தவர்களும் உண்டு. ஆனால் இக்காதலர்களின் பிரச்சினை ஒரு புதுரகமானது. இதை இவர்கள் தீர்த்துக் கொள்வது நல்லதா அல்லது யாராவது தீர்த்து வைக்கலாமா? எப்படித் தீர்க்கலாம்.

**மண்வாசக வாசகர்களிடம் இதன் முடிவைக் கதாசிரியர் முன் வைக்கின்றார். உங்கள் ஒவ்வொருவரின் முடிவையும் மண்வாசம் பிரசுரிக்கும்.**

--------- நன்றி ------------

## தகவற் துளி

உலகிலேயே உப்புச் சுவை குறைவாக உள்ள கடல் பால்டிக் கடல் ஆகும்

வில்லியம் கில்பேர்ட் என்றும் பறவை பூமிக்கு அடியில் குழி தோண்டியே கூடு கட்டும்.

துப்பறியும் நாயை முதன் முதல் பயன்படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும்

# மனம் என்ற தேரிலே

--ஓவியா--

அன்று ஞாயிற்றுக்கிழமை வசந்தனுக்கு வேலை இல்லை. வேலை இல்லையான படியால் இன்னமும் படுக்கையில் கிடந்த படி சிந்தனையில் இருந்தான். காலைக் குளிர் உடலைத் தொட்டதால் போர் வையை இழுத்து மூடிக் கொண்டான். கண்கள் மட்டும் மூடி இருந்தது. உள்ளுணர்வுகள் ஓடிக் கொண்டிருந்தது.

கனடாவில் காலடி வைத்தது முதல் ஒன்றன் பின் ஒன்றாக நினைவலைகள். அதில் சோகமும், மகிழ்ச்சியும் கலந்து இருந்தது. வருடங்கள் பத்து ஓடியவிதத்தை எண்ணினான். அந்தப்பத்து வருடத்துள் அவனின் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு நிகழ்வும் வரலாறு போல் பட்டது. இது அவனுக்குக் கிடைத்த பெரிய அனுபவங்கள். எழுத்து ஆற்றல் இருந்ததால் கிழமைகளில் வரும் பத்திரிகை களுக்கு கதையாக எழுதி இருப்பான். கனடா வந்தது முதல் ஒரே அப்பாட்மண்ட் ஒரேரெலி போன் நம்பர். கிழமைக்கு ஆறு நாள் வேலை. சம்பளம் எடுத்தும் ஊருக்குப் பணம் வாடகை ஏனைய பில்கள் கட்டிவிடுவான். கைநிறைய உழைத்து சம்பாதித்து விட்டான். அவனின் வீட்டாரும் உனக்கு நீயே பெண் பார்த்து திருமணம் செய்து கொள். எமக்கும் பணம் அனுப்பு என்று கூறிவிட்டனர். பெண் எப்படிப் பார்ப்பது. வயது 30 ஆகிவிட்டது. வீண் கூட்டாளிகள் இல்லை. பேச்சுக்கு ஒரு பெண். அவள் தான் சரசு. பக்கத்து றூம்காரி. இரண்டு ஆண்கள். பத்து வயதும் எட்டு வயதும் சரசுவுக்கு முப்பத்தைந்து வயது இருக்கலாம். வெல்பயரோடு சாப்பாட்டுக் கடைகளுக்குப் பலகாரம் செய்து கொடுத்து தன் பணத் தேவைகளைச் சமாளித் தாள். வசந்தனில் அவளுக்கு ஓர் பிடிப்பு. இடைக்கிடை இடியப்பம், பிட்டு, தோசை, கொடுப்பாள் பணத்தை வசந்தன் கொடுத்தால் வாங்குவாள்.,


வசந்தன் பெரிதாகச் சமைப்பதில்லை. சாப்பாட்டை வெளியில் எடுப்பான். டிம் காட்டனில் கோப்பி. இப்படியே வாழ்க்கை ஓட்டிய போதுதான் சரசுவின் தொடர்பு நாளடைவில் கிட்டியது. இவர்கள் இருவரின் அன்பும் காலவோட்டத்தில் வளர்ந்தது எனலாம். இன்று

ஞாயிற்றுக் கிழமை சரசுவின் சுவையான சமையல் சாப்பாடு வரும். மனதில் நினைத்தவன் அவளின் வரலாற்றைக்கேட்க வேண்டும் என எண்ணினான். இது வரை அவன் அவளைக் கேட்க வில்லை. அவளும் கூறவில்லை. ஒரு சிரிப்பு, அழவோடு கதை. ஒன்று அவளைப்பற்றி அறிய வேண்டும். எப்படிக் கேட்பது. இளம் வயதில் எப்படி கணவனை இழந்தாள். அல்லது இரண்டு பிள்ளைகளுடன் கணவன் அவளை ஏமாற்றிவிட்டானா. இப்படியே எண்ணியவன் எல்லா வற்றிற்கும் விடை அவளிடம் தான் உண்டு என எண்ணினான்.

இன்று பகல் சாப்பாடு வரும் மெதுவாகக் கேட்கலாம் என எண்ணினான். அதற்கு ஏற்ப காரணங்களை மனதில் தயாரித் தான். கேட்பதில் தப்பே இல்லை என அவனின் மனம் உள்ளே கூறியது. நேரத்தைப் பார்த்தான் பன்னிரண்டைத் தாண்டி விட்டது. எழுந்து குளித்து முடித்து வெளியே வரவும் போன் அலறியது. எடுத்துக் கலோ என்றான் சரசுவின் குரல் கேட்டது. குளிசாச்சா. சாப்பாடு ரெடி கொண்டு வரட்டுமா என்றாள். சரி என்றபடி போனை வைத்தவன் தலையை வாரி உடையை மாற்றியதும் கதவு தட்டும் ஒலி கேட்டது. கதவைத் திறந்தாள் சரசு சிரித்த முகத்துடன் வந்தாள். சாப்பாட்டை சாப்பாட்டு மேசையில் வைத்தாள். சிரித்தபடி அருகே வந்த வசந்தன் கிழமையில் ஒரு நாள் நல்ல ஊர்ச்சாப்பாடு மூக்கைப் பிடுங்கியது என்றான். தேவை யானால் தினமும் தரலாம் என்றாள். அது தான் முடியாதே. காலை ஏழுமணிக்கு வேலைக்குப் போனால் இரவு ஒரு மணிக்குத் தான் திரும்ப முடிகிறது என்றான் வசந்தன். ஒரு மாத த்தில் நாலு நாள் சாப்பாடுதானே தர முடிகிறது என்றாள் கவலையாக. என்ன செய்வது நாமிருப்பது கனடா. தேவைகள் நிறைய இருப்பதால் உழைக்கத்தானே வேண்டும் என்றான். அது சரி நீங்கள் ஒரு சாப்பாட்டுக்கடை போட்டால் நிறைய உழைக் கலாமே என்றான். போடலாம் அதற்கு பணம், உதவிகள் வேண்டுமே என்றவன் இப்ப ரோட்டுக்கு ரோட்டு சாப்பாட்டுக் கடைகள் இது எனக்கு சரிப்பட்டு வராது என்றவன் செட்டியில் அமர்ந்து நீண்ட பெருமூச்சை விட்டாள். உண்மைதான் என்ற வசந்தன் அவளை நோக்கி விட்டு பிள்ளைகள் எங்கே என்றான் நீண்ட மௌனமா இருந்தவள் தமிழ் வகுப்பிற்குப் போய் விட்டார்கள் என்றவள் நீங்கள் சாப்பிடுங்கோ என்றவள் எழுந்தாள். நீங்கள் சாப்பிட்டாச்சா என்றான். இல்லை இனித் தான் என்றாள். கனக்கச் சாப்பாடு கொண்டுவந்து விட்டீர்கள்

இரண்டு பேரும் சாப்பிடலாம் தானே. எனக்கு ஒரு சேஞ்சாக இருக்கும். நீங்கள் விரும்பினால் என்று இழுத்தான் வசந்தன். அப்படி இல்லை. சரி சாப்பிடுவோம் என்றாள் சரசு. இரண்ட பேரும் சாப்பிட்டார்கள். வசந்தனுக்கு இது பெரிய சந்தோசம். இந்த சந்தோசத்தில் அவளின் கடந்த காலத்தை அறிய வசந்தன் விரும்பவில்லை. இருவரும் சாப்பிட்டதும் சரசு மிகவும் மகிழ்ச்சியாக வெளியேறினாள்.

நாம் யாரையும் எடைபோட முடியாது. அவர்களின் துன்பச் சுமைகளை யாருக்காவது கூறினால் தான் நாம் யாரையும் எடை போடமுடியும். சரசுவின் மனச்சுமையாரும் அறியமுடியாத ஒன்று. அவளை எடை போட்டவைகள் எல்லாம் தப்புத் தாளங்களே. இந்த வரிசையில் வசந்தனும் சேர்ந்தவன் தான். சரசுவைப் பற்றி பற்பல சிந்தனை களை மனதில் கொண்டிருந்தான். மொத்தத்தில் அவள் நல்ல பெண். பொறுப்பான சுமைகளை தன்ன கத்தே வைத்துச் சுமக்கிறாள் என எண்ணினான். அனால் அவளின் வாழ்க்கையின் அந்தரங்கம் மட்டும் பரியாமல் இருந்நது. சரசுவின் மனதில் உள்ளவற்றை அவளே சொல்லட்டும் நான் கேட்கக்கூடாது என எண்ணினான் வசந்தன். இப்படியே வருடங்கள் ஓடியது. சரசுவும் - வசந்தனின் பழக்கங்கள் நெருக்கமான போதும், இருவர் மனதில் ஏற்பட்ட புதிர்களுக்கு விடை கிடைக்க வில்லை. அப்போது தான் வசந்தனுக்கு சுகயீனம் ஏற்பட்டது. அது சாதாரண காய்ச்சல் தான். சிக்கிண் பொக்ஸ். உடல் எல்லாம் பொக்களம் போட்டது. வசந்தன் இரண்டு வாரம் லீவு போட்டுபடுத்து விட்டான். இதை எப்படியோ உணர்ந்த சரசு அவனிடம் போய் இது அம்மாள் வருத்தம். சரியாக கவனிக்க வேண்டும் என்றாள். அவள் சொல்லில் கண்டிப்பு இருந்தது. வசந்தன் எதுவும் கூற வில்லை. அவளின் நேரடிக் கவனிப்பில் வசந்தன் குணமானான். ஒரு மனைவி கணவனைப் பராமரிப்பது போல் கவனித்தாள். ஒரு மாதம் அவனை வேலைக்கு போகவிடவில்லை. சரசுவும் தன் வேலைகளை நிறுத்தி அவனையே கவனித்தாள். சரசுவின் நேரடிக் கவனிப்பால் சுகப்பட்ட வசந்தன் அவள் மீது தீவிர அன்பு கொண்டான். அவளை நினைத்து பெருமைப பட்டான். இந்த ஒரு மாதத்துள் வேலை போய்விட்டது. சரசுவுக்கும் அப்படித்தான். வசந்தனிடம் கொஞ்சப்பணம் இருந்தது. வேறு வேலைக்கு மனுப்பண்ணினான். கனடா வேலை என்றால் இப்படித் தான். தினமும் சரசு சாப்பாடு கொடுத்தாள். உடுப்புக்கள் தோய்த்தாள். சாம்பிராணி


வீடு , வியாபார நிலையம், வியாபாரம்
ஆகியவற்றை வாங்க, விற்க.......
என்றும் உங்களுடன்...
HOMELIFE
HIGHER STANDARDS
Shiva Sharma
Sales Representative
Commercial & Residential
(416) 666-5515
(416) 878-3215
Office: 416-321-6969
HOME LIFE GTA REALITY INC.
REAL ESTATE BROKER
1711 McCowan Road. Suite 206
Scarborough, ON M1S 5Y3

# TR COVER PAC INC.

**Complete Solution for Packaging & Shipping Supplies**

Cello Tape
Clear Bags
Bubble Wrap
Cardboard Boxes
Foam Rolls
Machine Wrap
Hand Wrap

தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் மற்றும் அனைத்து உற்பத்திப் பொருட்களின் packaging தேவைகளுக்கேற்ப, மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வேண்டிய அளவுகளில் வகை தொகையாக உடனுக்குடன் விநியோகம் செய்யப்படும்.

**Fast Delivery Any Where Any Place**

தொடர்புகட்கு: **SUN**

***Cell : 416 - 830 - 1914***
***Tell : 905 - 738 - 6595***
***Fax : 905 - 738 - 8530***

# Are you a self-employed small business owner?





## If YES, then ...

- Does your disability insurance cover your lifestyle income or **just** your taxable income ?
- Does your current plan include business overhead expenses ?
- How much benefit will WSIB pay **you** personally for an injury claim ?
- What amount will you get for a sickness claim ?

## Want a Solution ?

## *Plans designed to fit your needs !*

Health & Dental,
Income Replacement and Critical illness plans



- Guaranteed to issue
- No medicals for most plans
- Paid from 1st day of injury
- Add illness coverage

## YOU Choose :

-Payable for 5 years or to age 70

Call your local representative

FS *Financial Solutions Inc.*

1-877-770-6464 or e-mail
financialsolutions@edgemg.com

the edgemarketing group

For more information: Pavan
905-339-8589

# CENTUM™

Looking Out For Your Best Interest



**Shan. Kanapathipillai**
*Mortgage Consultant*

*Mortgage*
*Line of Credit*
*Bank Loans*

**CENTUM Advance Realty Inc.**
80 Corporate Dr.
Toronto ON. M1H 3G5
Tel: 416.290.1200
[redacted]

போட்டாள். அவனைக் கூட்டிக் கொண்டு அம்மன் கோவிலுக்கு போய் அரிச்சனை செய்தாள். அவளின் சேவைகள் அனைத்தும் வசந்தன் மனதில் அழியாத கோலங்களாகியது. சரசு எடுத்த கூடுதலான உரிமைகள் அவனை மகிழ்ச்சிப்படுத்தியது. அதை அவன்பெருமையாக எண்ணினான்.

வசந் என்றபடி என்றும் இல்லாத மகிழ்வுடன் ஓடி வந்தாள் சரசு. என்ன என்பது போல் அவளைப் பார்த் தான். அவள் கையில் உள்ள லொட் டோவைக் காட்டி இதில் ஐந்து மில்லியன் விழுந்திருக்கு. உங்களை நினைத்து எடுத்தேன். விழுந்திருக்கு குழந்தையைப் போல் துள்ளினான். வசந்துக்கு அவளைப் பார்க்க பெருமையாக இருந்தது. சரசு நீங்கள் உண்மையில் அதிஷ்டசாலிதான் .இதை என்ன செய்ய யோசனை என்றான் வசந்தன். இது உங்களை நினைத்து எடுத்தது என்றாள் சரசு. அவளின் பெருந தன்மை வார்த்தைகளில் ஒலித்தது.

என்ன யோசனை இரண்டு பேருக்கும் வேலையில்லை. இருவரும் சேர்ந்து ஒரு ரிம் கட்டண் வாங்கினால் என்ன என்றாள் சரசு. நல்ல ஐடியாதான் என்றான். சகல ஒழுங்குகளையும் வசந்தன் செய்தான். வியாபாரம் நன்றாக ஓடியது. சரசுவின் எண்ணப்படி வீடு வாங்கப்பட்டது. எல்லோரும் ஒரே வீட்டில் குடியேறினார்கள். வீடு கலகலப்பாக இருந்த போதுதான் பிரச்சனை உருவாகியது. நல்லசமர் காலம். வசந்தன் ரிம்கட்டண் போகப்புறப்பட்டான். சரசுரிம் கட்டனில் இருந்தாள். பிள்ளைகள் பாடசாலை சென்றிருந்தார்கள். சரசுதான் பிளளை களை கூட்டி வர வேண்டும்.

சரசு வியாபாரத்தை கவனித்துக் கொண்டு இருந்த போது நாற்பது வயதுள்ள ஒரு தமிழன் உள்ளே வந்தவன் சரசுவைக் கண்டுவிட்டான். மெதுவாக அவளண்டைபோய் சரசு எப்படி இருக்கிறாய் என்றான். சரசுவுக்கு ஐம் புலனும் அடங்கியது. சாமாளித் துக் கொண்டு காப்பி குடிக் கிறீங்களா என்றாள். ஆம் என்றவன் இங்கு தானா வேலை செய்கிறாய் என்றான். ஆம் என்றாள் சரசு. வேலை எப்ப முடியுது என்றான். முடிஞ்சுது வீட்டுக்கு போகப்போகிறேன். பிள்ளைகளை பாடசாலையில் ஏத்த வேணும் என்றாள். காப்பியை அவன் கையில் கொடுத்து அப்படி உட்கார்ந்து பேசுவோம் என்றாள். சரி என்றவன் தனியாக இருந்த இடத்திற்குப் போய் உட்கார்ந்தனர். சரசுவுக்கும் வந்த புதியவனுக்கும் காரசார

மாக வாக்குவாதம் நடந்ததை அங்கே வந்த வசந் கவனித்தான். ஆனால் வசந்தை சரசு காணவில்லை. சரசுவின் பின் பக்கம் மட்டும் வசந்தனுக்குத் தெரிந்தது. சரவிடம் கதைத்துக் கொண்டி ருந்தவன் சங்கர். இரண்டு வருடத்தின் முன் வசந்தனுடன் வேலை செய்தவன் பின்னர் வேலைக்கு வரவில்லை. குடும்பப பிரச்சனை என்று வேலை இடத்தில் கதைத்துக் கொண்டனர். இவன் தான் சரசுவின் கணவனோ என என்னினான் வசந்தன். இதை அவதானித்து விட்டு யோசனை யுடன் உள்ளே போனான் சற்றைக்கெல்லாம் உள்ளே வந்த சரசு. வசந் நான் வீட்டுக்குப் போகின்றேன். பிள்ளைகளைப் பிக்கப்பண்ண வேண்டும் என்றபடி தன் காரை நோக்கி ஓடினாள். அவளின் பதட்டம் நடையில் தெரிந்தது.

சரசு போனதும் வசந்தன் றூமில் இருந்து வெளியே வந்தவன் சகலதையும் நோட்டம் விட்டபடி சங்கரை நோக்கினான். சங்கர் யோசனையில் இருப்பது தெரிந்தது. கழுத்தில் கட்டி யரையை சரி செய்தபடி சங்கர் இருக்கும் இடத்திற்கு வந்தான். சங்கர் வசந்தை அடையாளம் கண்டுவிட்டான். கலோ வசந் என்றான். கலோ என்றபடி வசந் சரசு இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டு என்ன இங்கே எனறான். ஒன்றுமில்லை என்றபடி நீ இப்பவும் பழைய இடத்திலா வேலை செய்கிறாய் என்றான் சங்கர். இல்லை அந்த வேலை போய்விட்டது. இப்ப இங்கதான் வேலை என்றான் வசந். அப்படியா ரிம்கட்டன் சம்பளம் கட்டுப் படியாகாதே. என் மனைவியும் இங்கே தான் வேலை செய்கிறாள் பெயர் சரசு என்றான். வசந்தனுக்கு வாழ்க்கை வெறுமை போல்பட்டது. ஏதோ இனம்புரியாத ஒரு அன்பு சரசுமேல் ஏற்பட்டு இருந்தது. சரசவை இழக்க மனம் இல்லை. இவ்வளவு நாளும் ஏன் சங்கர் அவளிடம் வரவில்லை. இப்போது மடடும் வந்திருக்கிறான். இருவருக்கும் இடையில் என்ன பிரச்சனை இதைக் கேட்கலாமா? விடலாமா? சரசு தனக்கு கூறமாட்டாளா. சரசுவின் அன்பை அவன் நிறைய மனதுக்குள் வளர்த்துக் கொண்டான். இந்த ரிம்கட்டன்கூட அவளுயுடையது தான். தான் இனித் தனிமரம தான். வசந்தனின் மனம் வேதனைப்பட்டது. சரசு மீது கொண்ட அன்பு காதலாகாதா என்று என்னியவன் தான் வசந்தன். இவளைப்போன்ற ஒருத்தி மனைவியாகக் கிடைப் பாளா? என அவன் மனம் எண்ணியது. இப்போது மனதில் ஒரு பெரிய இடி இறங்கியது போல் இருந்தது. சுவாரசியம் இல்லாமல்

கதைத்த வசந்தன் இப்போது எங்கே இருக்கிறாய் என்றான். இதென்ன கேள்வி வசந்தன் நானும் சரசுவும் இரண்டு பிள்ளைகளும் அப்பாட்மெண்டில் இருக்கிறோம் என்றான். சங்கர் பொய் சொல்லுகிறான் என்பது வசந்தனுக்கு விளங்கியது. ஏன் இப்படி, இவற்றுக்குப் பதில் சரசுவிடம் தான் உண்டு. எப்படி அவளிடம் கேட்பது. அவள் கூறினால் தான் தெரியும். சரி எனக்கு டி!ட்டி என்றபடி எழுந் தான் வசந்தன். எனக்கொரு உதவி வேண்டும் வசந்தன். நாளைக்கு இதே நேரம் இங்கே வருகிறேன் என்றபடி சங்கர் வெளியேறினான். ஆனால் சங்கர் பொய் சொல்லு கிறான் என்பது வசந்தனுக்கு விழுங கியது. ஏதோ பல உண்மைகள் மறைக்கப்பட்டது போன்று இருந்தது. என்றும் இல்லாத மாதிரி சரசுவின் பதட்டமும் முகபாவமும் இருந்ததை வசந்தன் உணர்ந்தான். அப்போது வசந்தனின் கான்போன் ஒலித்தது. சரசுதான் எடுத்தாள். பல கேள்ளிவிகளுக்கு பதில் கிடைக்காத வசந்தனின் மனம் சரசுவின் கேள்விகளுக்கு பதில் கூற முடியாமல் திண்டாடினான். வசந், எனக்கு எது வரக் கூடாதோ அது என்னைத் தேடி வந்துவிட்டது. நான் உங்களை மனதாரக் காதலிக்கிறேன். என்னை நீங்கள் காதலிக் கிறீர்களா? இப்ப இந்த கேள்விக்கு எனக்கு பதில் வேண்டும். உங்களை என்னால் இழக்க முடியாது. நீங்கள் இல்லையென்றால் எனக்கு வாழ்க்கை இல்லை. நான் உங்களிலும் நாலுவயது மூத்தவள். எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு புடம் போட்ட தங்கம். நேர்மையானவர் என்ன பதிலைக் காணோம் என்றாள். சரசு நீங்கள் ஏன் இப்படித் திடீர் என என்றான் நேரம் வந்துவிட்டது சொல்லுங்கோ என்றாள். அவசரப்பட வேண்டாம். இப்பபுறப்பட்டு வாறேன் நேரில் கதைக்கலாம் என்ற வசந் உடனே புறப்பட்டான். அவனின் மனம் படபடத்தது. காரை நிறுத்திவிட்டு துடிக்கும் மனத்துடன் வீட்டுள் போனவன் பிள்ளைகளை அணைத்தபடி இருக்கும் சரசுவை நோக்கி நடந்தான். சரசு அவனை நோக்கி வந்தவள் ஒரு அல்பத்தைக் காட்டி இதைப்பாருங்கள். இதிலுள்ள படங்கள் எனது அக்கா கீதாவுக்கும் சங்கரு கருக்கும் கனடாவில் நடந்த திருமணப்படங்கள். அக்காவின் பிள்ளைகள் தான் இவர்கள். அத்தானின் கொடுமையால் அக்கா தற்கொலை செய்தாள். அத்தான் என்னை கலியாணம் செய்யும்படி கொடுமைப் படுத்தினார். இதை நான் பொலிசுக்கு சொன்னேன். இந்தப் பிள்ளைகள் சாட்சி கூறினார்கள்.

அத்தான் சங்கர் மூன்று வருடம் சிறையில் இருந்து விட்டு வந்துள்ளார். இன்று என்னை எதிர் பாராது சந்தித்து மிரட்டினார். நான் ஒருவரை திருமணம் செய்ததாகக் கூறி வந்து விட்டேன். முடிவு உங்கள் கையில் என்ற சரசு அழுதாள்

சரசு நீ என் மனைவி இது நம்ம பிள்ளைகள். நாளை சங்கர் வரும் போது அவனுக்கு விளங்கும் என்ற வசந் சரசுவின் கண்ணீரை துடைத்துவிட்டான். இப்போது வசந்துக்கும் நிம்மதி, சரசுவுக்கும் நிம்மதி. வசந்தை இறுக அணைத்துக் கொண்டாள் சரசு. தனக்கு அவன் இருப்பது தான் பெரிய துணையாகப்பட்டது.

........முற்றும்........

உங்களுக்குத் தெரியுமா?

செப் 11 – 1893 இல் தான் விவேகானந்தர் தனது புகழ் பெற்ற சிக்காக்கோ உரையை நிகழ்த்தினார்.

முதன் முதலில் சாவியை உபயோகித்தவர்கள் எகிப்தியர்கள் ஆவார்கள்

லிபியா இங்கிலாந்தை விட ஏழு மடங்கு பெரியது ஆனால் அங்கு ஒரு ஆறு கூட கிடையாது

1945 ஏப்ரல் 28 இல் இத்தாலிய சர்வாதிகாரியும் அவருடைய காதலியும் பொதுமக்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதைத்தொடர்ந்து ஏப்ரல் 30 இல் ஹிட்லர் தனது காதலியுடன் தற்கொலை செய்தார்

முல்லை அமுதனின்

# முடிந்தகதை தொடர்வதில்லை



சமூகத்தொடர்

*"சத்தியத்தின் சோதனையால்*
*நித்திய வேதனை தந்தால்*
*தத்துவத்தின்*
*நாயகனாகினேன்"*

என்று அன்றொரு முறை முல்லை அமுதன் என்றொரு கவிஞன் எழுதியது ஞாபகத்திற்கு வருகிறது. இலை மறையாக வாழ்ந்து கொண்டிருக்கும் அந்தக் கவிஞன் என்னையே உருவகித்து விட்டானே.

துடிப்பினை வலித்தபடி வள்ளம் ஒன்றை செலுத்திக் கொண்டிருந்தான் ஒரு மீனவன். வள்ளம் தன் போக்கில் போவதைக் கட்டுப்படுத்தி வயப் படுத்தி தன காரியத்தை முடிப பதில் கவனமாக இருந்தான் அந்த மீனவன். நான் என்னையே நினைத்துப் பார்க்கிறேன்.

என் வாழ்வு சின்னா பின்னப்பட்டு விட்டதே. படிகளில் இறங்கிப் பூந்தோட்டப் பக்கத்தில் கால்களைப் பதித்தது கேற் வாசலை நோக்கி மெல்ல நடக்கிறேன். அவன் அவளுடன் கூட வந்தவன் தயங்கி தயங்கி பின்னால் செல்வது தெரிகிறது தென்னை மரங்களின் இளநீர்க் குலைகள் மதர்த்து நின்றன. குரும்பை ஒன்று அணில் அரித்ததினால் தொப்பென்று வீழ்ந்தது. தூரத்தில் மாதா கோவிலின் மணியோசை மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்தது. இப்பால் மீனவர்களின் ஏலோலோ பாடல் இதயத்தை நிறைக்கிறது.

கேற்வரை சென்றவள் நின்று ஒரு கணம் கட்டடத்தைப் பார்க்கிறாள். மேல் மாடியில் நான் நிற்பது அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

சரிந்து கரிந்து ஊடுருவும் பார்வை. எக்ஸ்ரே எடுக்கிறாளோ? காற்றில் அலைபாயும் கூந்தலை சிவந்த கைகளினால் நீவி விடுகிறாள். அவளுக்கு பிடித்த மாக அவள் உடுத்தியிருந்த நீல நைலக்ஸ் சாரி அவளின் அழகை மேலும் கூட்டினது. அவள் அழகா.... அவளின் உடை சேர்ந்ததும் ஏற்பட்ட அழகா? என் கண்கள் அவளில் பதிந்தது. இதயமும் ஒருகணம் ஸ்தம்பித்து விட்டதோ? ஏன் என்னை மறந்து

விட்டீர்களா? நண்பர்களாகவே இருப்போம். உங்கள் குடும்ப கவுரவத்திற்காக என்னையே தியாகம் செய்தேனே? அது நினைவில்லையா? சினிமா வசனம் மாதிரி டயலக் பேசுவீங்களே.. கோழைபோல் ஏன் ஒழிந்து விட்டீர்கள் நீயும் நானும் ஒன்று. ஒரு நிலையில் பார்த்தால் இன்று என்று பாடுவிர் களே. அந்த அர்த்த புஸ்டியான பார்வை எங்கே போயிற்று. இலக்கிய மேற்கொள்காட்டி பெண்களைப் பற்றிக் கதை கதையாகப் பேசுவீர்களே. ஏன் மௌனித்து விட்டீர்கள்? சமூகத்தின் முன் போராட்டம் நடத்தினீர்களே.

அவளைத் துரத்த எப்படி மனம் வந்தது. ஒரு நொடியில் மனத்தினைக் கல்லாக்கிக் கொண்டாயே, சத்தியத்தின் நாயகனாக வாழ வேண்டிய நீ ஏன் இந் நிலைக்குத் தள்ளப் பட்டாய். சொல்லடா சொல். எங்கோ என்னிதய முன்றில் ஏதோ ஒன்று உந்துகிறது.

அவள் எச்சிலை விழுங்குவது தொண்டைக்குழியில் கேவுவதில் இருந்து தெரிகிறது. ஓ என்இதயம் அழுவதைப் போல அவள் இதயமும் அழுகிறதோ? கருமுகில் கூட உங்களின் சேர்க்கை இடியாக இடித்தது.

திரும்பித் தெருவில் நடந்தாள்.

ஓ அவள் போகின்றாளோ? என் இரண்டு கைக ளையும் சேர்த்துத் தட்டி அவளை அழைக்க வேண்டும் போல் தோன்றுகிறது. முடியவில் லையே. சடசடவென மழைத் துளி முகத்தில் விழுந்து என்னை சுய நினைவிற்குக் கொண்டு வருகிறது. திரும்பி என் அறையை நோக்கி நடக்கிறேன். இதயம் கனத்தது.

## அத்தியாயம் 11

எனக்கு என்மீதே ஆத்திரம் வந்தது. சிறிது நேரத் தில் அது என்னுடன் பழகு பவர்கள் அனைவர் மீதும் தாவியது. சுயநலக்கார உலக த்தில் யார் எது வேண்டும் என்றாலும் பேசலாம். தீர ஆராய்ந்து பேசுவதும் கிடை யாது. முதலாளியம்மாவுக்கு எனது கடிதத்தை யார் கொடுத் திருப்பார்கள். புத்தகத்தில் வைக்கப்பட்ட கடிதம் எப்படி மறைந்திருக்கும். வீட்டுக்காரர் களுக்கு யார் கூறியிருப்பார்கள். பூமி உருண்டை என்பதை அனைவரும் நிருபித்து விட்டனர். கொடுபடாத கடிதம் அதன் தாக்கம் கொடுபட வேண்டிய வளை அடையவில்லை. ஆனால் அதில் உள்ள அர்த்தம் பிழை யாகவும் கூட்டிக் குறைத்து எனக்கே திரும்பிவிட்டது.

களவு எடுத்தவனை விட களவு கொடுத்தவனுக்கு அதிக

பாவமாம். எல்லோரையும் சந்தேகப்பட்டு ஆத்திரப்பட்டு மனதிற்குள் திட்டியாகி விட்டது. அவனுக்கு சத்தி வந்தது. அவனுக்கு சத்தி சத்தியாக வந்தாகமாறி. கறுப்புக் கறுப்பாக சத்தி வந்தது என்றாகி காகம் காகமாக சத்தி வந்தாகி விட்டது. அதே நிலைமையே எனக்கு.

இளவயதில் தமது ஆசைகள் நிறைவேறாமல் போகிறவர்கள் அதனை மற்றவர்கள் அனுபவிக்க விடுவதில்லை. எனவேதான் தாய், மகள் பிரச்சனைகள் , மாமியார் மருமகள் பிரச்சனைகள், முதலாளி தொழிலாளி பிரச்சனைகள் எல்லாம் ஏற்படுகின்றது. நான் அந்தக் காலத்தில் அப்படி அடக்கமாக இருந்தேன். இதுகள் இப்படி அடக்க மில்லாமல் ஆடுதுகள். நான் எனது அம்மாவுக்கு அப்படி அடித்துப் போட்டு வேலை செய்தேன். இது உலாத்தநிக்குது. நான் இப்படி வேலையில் தொழிலாளியாக இருக்கும் போது சம்பளமே இல்லாமல் வேலை செய்திருக்கிறேன். இது இவ்வளவு காணாது என்று வேலையிலும் பிழைவிடுகிறது. இப்படித் தினமும் ஏதாவது கூறி அனுபவிக்க விடமாட்டார்கள். நான் தான் அனுபவிக்காது கஷ்டப்பட்டேன். இதுகள் அனுபவிக்கட்டுமே என்று நூறில் ஒருவருக்குத் தான் மனம் வரும். அவர்கள் தான் மனச்சந்தோசமாக வாழ்பவர்கள். மற்றவர்கள் எதிலும் குறை கண்டுபிடித்துக் குறை சொல்லியே வாழ்கையைக் கழிப்பதோடு தாங்களும் திருப்தியில்லாமல் வாழ்ந்து முடிப்பவர்களாகி விடுகிறார்கள். முதலாளி அம்மாவையும் அப்படியே நினைக்கத் தோன்றியது.

அதனை விட அவவுக்கு இளவயதுக்காரரையும் அதிலும் அழகாக இருப்பவர்களைக் கண்டாலும் பிடிக்காது. பெண்கள் ஏனைய அழகான பெண்களை விரைவில் அழகாக இருக்கிறா என்று கூறிவிட மாட்டார்கள். அது பிழை, இது சரியில்லை என்று அழகைக்கூட மனசாட்சிக்கு விரோதமாக, எரிச்சலால் அழகில்லை என்று சொல்ல முயன்று தோற்றுப் போனாலும் தான் சொல்லியதை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என நினைப்பார்கள். அப்படித்தான் அவள் மீது முதலாளி அம்மா ஆத்திரப்பட்டு என்மேல் பழியை சுமத்தி விட்டார். அவவரையில் திருப்தி.

ஆனால் என்னை நம்பியவர்கள், என் உறவினர் பெற்றோர் என்மீது நம்பிக்கை வைத்திருந்த அனைவரையும் நம்ப வைத்தபிறகு அவர்களின்

அவநம்பிக்கைக்கு பாத்திரமான நான் மீளவே முடியாது அவமானத்தால் தத்தளிப்பது யாருக்குப் புரியும். அனைவரும் கொலைக்குற்றம் புரிந்து தூக்குத் தண்டனை விதிக்க ப்பட்ட கைதியைப் போல பார்ப் பதையும் பழகாமல் ஒதுக்கப்படு வதையும் அதற்கான வலியை பொறுக்க முடியாது மனம் உடைந்தே போனேன்.

உயர்ந்த நோக்கங்கள், உயர்ந்த எண்ணங்கள், உயர்ந்த கொள்கைகள் உடையவர்களுக்கு சோதனைகளும், வேதனைகளும் அதிகம் தான். சிரித்து வாழ ஆசைப்பட்டேன். இப்போது பிறர் சிரிக்க வைத்து விட்டார்களே. இப்படிப் பல வேறுபட்ட சிந்தனைகளிலும், கவலைகளிலும் ஆழ்ந்திருந்த எனக்கு எல்லோர் மீதும் எரிச்சல் ஏற்பட்டது உண்மையே.

அச் சமயம் அவள் வந்த போது அவளைப் பார்த்தவுடன் அவள் மீது ஆத்திரம், கோபம். எரிச்சல் எல்லாம் திரும்பியது. எனவே ரூம் இல்லை என்று கூறிவிட்டேன். அவள் போனவுடன் எல்லாமே வெறுமையாகத் தெரிந்தது. பசிக்கவில்லை, தாகம் இல்லை, நடைப் பிணமானேன். விசர் பிடிக்காத குறை. அந்நிலையில் என்னைப் பார்த்தால் எவரும் பயந்திருப் பார்கள். அவ்வளவு மனத்தாக்கத்தால் விகாரம் ஆனேன். குளிக்க மனம் இல்லை, சவரம் செய்ய நாட்டம் இல்லை, அத்தனைக்கும் மத்தியிலும் அவசரப்பட்டு ரூம் இல்லை என்று கூறியது பிழை என்று மனசாட்சி உறுத்திக் கொண்டே இருந்தது. மனம் விட்டு கதைத்திருந்தால் அல்லது பேசியிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காதோ என்று சந்தேகமாக இருந்தது. வலுவாக கண்ணை மூடிக் கொண்டு தூங்க முயன்றும் தோற்றுப் போனேன்.

*அடுத்த இதழில் தொடரும்....*

ஆபிரிக்கக் கண்டமே அதிக நாடுகளைக் கொண்ட கண்டமாகும்

1941 இல் ஜப்பானிய விமானப்படையினர் அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தின் மீது தாக்குதலை நடாத்தினர்

1957 இல் ஐரோப்பிய நாடுகள் சில ஒன்றிணைந்து ஐரோப்பிய சங்கத்தினை நிறுவின.

# கவிதைச் சோலை

## தருவாள் நிம்மதி சர்வசித்தாள்

---ஈழத்தமிழினியன்---


தென்றலலைந்து தேகத்தை யுரச
மன்றமதில் மைவிழி மோகத்தில்
– தவிக்க
கொன்றை மரமும் பொன்
– பூச்சொரிய
நன்றே நல்சர்வ சித்தெனும்சித்திரை
– வந்தாள்
சென்ற வருடமதில் சிந்திய விழிநீர்
– காய்ந்து
கொன்று குவித்தவர் கரமவர்
– வாயடைத்து
மென்றுவிடாப் பலசெய்திகள்
– செவியுரச
வென்றெழுந்தனர் நேற்றுவரை
– கூனிக்குறுகியோா
சீரோடு சிந்தைமகிழ ஆடினர்
–பாடினர்
பேரொடு புகழ் நிலைக்க எய்தவன்
–கிடுகிடுக்க
நாரொடு பூ நிறைத் தேற்றனர்
–புகழாரம்
தேரொடு வானலைந்துதொடுத்தனர்
–புதுக்காவியம்

நீரலைமீதும் நிமிர்ந்து கம்பீரம்
தேறுதலைத் தேடிய உறவுகள்
ஊறலைக் கண்டுவந்தது தாயகம்.

ஒருதலைச்செருவெடிக்க சிதறிடும்
–செருநர்
ஓம்படை தேடி ஓடிட, கொடுவரி
–செல்லூர்ந்து
கிட்டவர் படைதனைக் குதற
செண்டை ஒலிக்க, செண்முடித்த
–மங்கையரடி மகிழ
காற்படை கூவ, ஆவினம் துள்ள
கோட்டகக் கலமூர்ந்துகோடணை
–யெழுப்ப

கோட்டரம் போல,செல்லூர்ந்தலைய
நாட்டவர் மகிழ்ந்துதரக்கனைஏற்ற
கோட்பறையொலிக்க,கோம்பிகள்வீழ

கோமான் கோமுறை செழிக்க
நாம்வாழ் மண்ணும் வெளுக்க
ஊர் உலகறிய உதயம் தோன்ற
சர்வ சித்தாள் தருவாள் நிம்மதி!




"நேற்றுத்தான் தங்களிடம் நன்கு அடிவாங்கிய உங்கள் தம்பி வேறு யாருடைய உதவி யொன்று இல்லாவிட்டால், இப்படி மீண்டும் சண்டைக்கு அழைக்கமாட்டார். அதோடு இரண்டு அரச குமாரர்கள் அவர் உதவிக்கு வந்துள்ளனர் என்று நம் மகன் அங்கதன் சொல்லக் கேட்டுள்ளேன்" என்றாள்.


ஆனால் வாலியோ பொறுமை இழந்து நின்றான். "தாரா, என்ன உளறுகிறாய்! என்னைத் தடுக்காதே. இது எனக்கும் என் தம்பி சுக்ரீவ னுக்கு முள்ள சண்டை. இதில் மூன்றாம் பேர் எப்படித் தலை யிடுவார்கள்!" என்று சொல்லி விட்டு,சிங்கத்தைப் போல கர்ஜித்துக் கொண்டு வெளியே வந்தான்.

இரண்டு சகோதரர்களும் ஒருவரையொருவர் மோதினர். ஒரு சமயம் ஒரு வரையொருவர் இறுகப் பிடித்துக் கொண்டு தரையில் உருண்டார்கள். இன்னொரு சமயம் ஆகாயத்தில் பாய்ந்து ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். இன்னொரு சமயம் பக்கத்திலி ருந்த மரக்கிளைகளைப் பறித்து, ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள்.

ராமர் உதவுவார் என்ற நம்பிக்கை இருந்ததால் சுக்ரீவன் வெகு நேரம் சிறப் பாகவே சண்டை செய்தான். ராமரும் வாலியின் திறமை யைக் கண்டு வியந்து கொண் டிருந்தார். கடைசியில் அவர் கூரான அம்பு ஒன்றை விட அது வாலியின் மார்பைத் தாக்கியது. வாலி குற்றுயிராகிக் கீழே விழுந்தான். ராமரும், மற்றவர் களும் அவன் பக்கம் வந்தனர்.

ராமர் செய்த காரியம் கோழைத்தனமானது என்று வாலி அவரை இகழ ஆரம்பித் தான். "ராமா! இன்னொரு வனோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கும் ஒருவனைக் கொல்வது தான் உன் ஷத்திரிய தர்மமா? நீ அரசனாக இருக்க அருகதையில்லாதவன். ராவணனுக்கு எதிராக உதவி தேவை என்றால் நீ என்னைக் கேட்டிருக்கலாம். நான்





அவனைக் கையையும் காலையும் கட்டி உன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியிருப்பேன். நீ செய்த காரியம் தவறு'' என்றான்.

அதற்கு ராமர், "வாலி! தர்மத்தைப் பற்றி பேச உனக்கு அருகதையில்லை. தர்மத்தின் படி நீ உன் தம்பியை மகனாகவும்,அவன் மனைவியை உன் மருமகளா கவும் கருதி யிருக்க வேண்டும். அதற்கு பதிலாக நீ சுக்ரீவ னின் மனைவியை அபகரித்து விட்டாய். தர்மத்தை நிலை நாட்டுவதற்காகத் தான் நான் உன்னைக் கொல்ல வேண்டி வந்தது'' என்றார்.

வாலி தன் தவற்றை உணர்ந்தான். தன் மனைவி யையும், மகனையும் ராமரிடம் ஒப்படைத்தான். பிறகு சுக்ரீவனைப் பக்கத்தில் அழைத்து, "சுக்ரீவா இனி நீயே இந்த அரசை ஆள். அங்கதனை உன் மகன் என்று நினை. என் கழுத்தில் உள்ள இந்த தங்கச் சங்கிலியை என் பரிசாக எடுத்துக்கொள். இது எனக்கு இந்திரன் கொடுத்தது'' என்று சொல்லிவிட்டு உயிர் நீத்தான்.

வானரர்கள் சீதையைத் தேடுதல்

சுக்கிரீவன் மீண்டும் மூடிசூட்டப்பட்டான். அவனுக்கு ராமனிடம் இருந்த நன்றியின் காரணமாக, சுக்ரீவன் தன் வாழ்நாள் முழுவதும், ராமருடைய நண்பனாகவும், கூட்டாளியாகவும் இருக்கப் போவதாக வாக்களித்தான். அப்பொழுது மழைகாலமாக இருந்தது. அதனால் மழை காலம் முடியும் வரை அவர்கள் காக்க வேண்டி வந்தது.

மழை காலம் முடிந்த தும், லஷ்மணன் சுக்ரீவனின் வாக்குறுதியை ஞாபகப் படுத்தினான். உடனே சுக்ரீ வன், தன் சேனாதிபதி நீலனை அழைத்து, "சீதையை நாம்

உலகம் முழுவதும் தேடியாக வேண்டும். ஆகையால் உடனே நம் படை வீரர்கள் எல்லோரையும் ஒன்று கூடச் சொல்'' என்றான்.

ராமரும், லஷ்மண னும் இருந்த குகைக்கு முன்னால் வானரப் படை அணி வகுத்து நின்றது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எங்கு பார்த்தாலும் வானரப் படைதான் தெரிந்தது.


சுக்ரீவன் தன் படையைப் பார்த்தான். பிறகு ராமரைப் பார்த்து, ''அரசகுமாரரே! என் படை முழுவதும் உம்முடைய அதிகாரத்தின் கீழ் உள்ளது. நீங்கள் என்ன உத்தரவு போட்டா லும் அதை அவர்கள் உடனே நிறைவேற்றுவார்கள்'' என்றான். சுக்ரீவன் காட்டிய அன்பைக் கண்டு ராமர் மகிழ்ந்து அவனை இறுகத் தழுவிக்கொண்டார். ''நாம் முதலில் சீதை எங்கிருக் கிறாள் என்று கண்டு பிடிக்க வேண்டும். நீங்கள் மன்னர், அதனால் சீதையைத் தேடும்படி உங்கள் படைக்கு நீங்களே உத்தரவிடுங்கள்'' என்றான்.

உடனே சுக்ரீவன் சீதையைத் தேடும்படி சேனாதி பதிகளை சேனையுடன் பல திக்குகளிலும் அனுப்பி வைத் தான். பிறகு அனுமாரைக் கூப் பிட்டு ''ஓ அனுமாரே உமக் குள்ள பலமும், தைரியமும், வேகமும், விவேகமும், புத்தியும் வேறு யாருக்கும் கிடையாது. மற்றவர்கள் தோல்வியுறும் இடத் தில் நீர் தான் வெற்றி பெறுவீர் என்பது திண்ணம். ஆகவே சீதை இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க நான் உம்மைத் தான் நம்பியிருக்கிறேன்'' என்றான்.

அனுமாரின் திறமை யைப் பற்றி ஏற்கனவே ராம ருக்கு நல்ல அபிப்பிராயம் இரு ந்தது. அதனால் சுக்ரீவன் அனுமார் மீது காட்டிய நம்பிக்கையைப் பார்த்துவிட்டு, தம் முத்திரை மோதிரத்தை அனு மாரிடம் கொடுத்து. இந்த முத்திரை மோதிரத்தை வாங்கிக் கொள்ளும், நீங்கள் தான் சீதை யைக் கண்டு பிடிக்கப் போகிறீ ர்கள் என்று நான் நம்புகின்றேன். இந்த மோதிரத்தைப் பார்த்தால், அவள் பயமோ, சந்தேகமோ இன்றி, நீங்கள் என்னிடமிருந்து தான் வந்துள்ளீர்கள் என்று தெரிந்து கொள்ளுவாள் என்றார்.


அனுமார் குனிந்து ராமரின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். மோதிரத்தை அவ ரிடமிருந்து வாங்கி, அதைத் தன் தலைமேல் வைத்துக் கொண்டார்.

--தொடரும்--




Ravana's chariot continued the journey. It flew over forests, hills and valleys. As the chariot was speeding, Sita saw five monkeys sitting on the peak of a mountain. She bundled up some of her ornaments in a silk cloth. She threw the bundle towards the monkeys. She hoped that the bundle would give a clue to Rama and lead him on the right trail.

Ravana reached Lanka. He showed Sita all his palaces and riches. He boasted of his great prowess. Sita was unwilling to accept him. He took her to a beautiful park called Asokavanam and kept her there. He ordered a band of rakshasis to serve her and keep watch on her.



Sita sat under an Asoka tree. She was guarded by ferocious rakshasis. The rakshasis coaxed her, cajoled her and threatened her to accept Ravana as her husband. Sita sat weeping and lamenting her fate.

In the meantime Laksmana went into the forest in search of Rama. Rama was aghast on seeing Laksmana. His fears were confirmed. Rama and Laksmana hastened to their





hermitage only to find it empty. They saw sings of struggle. Rama shouted to the deities of the forest and enquired if they knew where Sita was. There was no answer. They went searching here and there. They saw Jatayu lying in a pool of blood. There were sings of a violent fight in and around the place. The brothers stood by the side of the wounded bird. Jatayu recognized rama. In a feeble voice he narrated the events leading to his mortal injury. He said that Ravana was heading southward carrying Sita with him. Having said this, he breathed his last.

Rama and Laksmana cremated Jatayu's body with all solemnity as if he were their Kinsman. Then they proceeded southward searching for sita.

As they were walking on, they came across a rakshasa named Kabanda. He was a headless monster with two huge longarms with which he used to catch hid prey. His mouth was in his belly. He tried to capture Rama and Lakshmana. They severed his arms. The rakshasa cast off his monstrous body and its place there stood a handsome figure. he had been released from his curse by the touch

of Rama. He said, "At some distance from here is the Pampa lake. By the said of the lake is a mountain called Rasyamooka. On the mountain resides a monkey named Sugriva. He is living there with five associates.If you befriend Sugriva he will help you to find Sita." After saying this, the beautiful form rose up to the sky and vanished.

Now Rama and Lakshmana walked towards the lake Pampa. They saw a beautiful place with trees, plants and creepers bearing charming flowers and fruits. There was a beautiful hermitage, and an old woman by name Sabari welcomed Rama and Lakshmana. She was a woman of the jungle tribe. She offered sweet fruits and water to the brothers. She was very happy to entertain them with forest delicacies.

உலகிலேயெ மிகவும் சுறுசுறுப்பான விமானநிலையம் அமெரிக்காவிலுள்ள சிக்காகோ சர்வதேச விமானநிலையம் தான் இங்கு ஒவ்வொரு 42 வினாடிக்கும் ஒரு விமானம் இறங்குகிறது அல்லது புறப்படுகிறது. ஒரு நாளைக்கு 2056 விமானங்கள் வருகின்றன. புறப்படுகின்றன.

மருத்துவர்கள் பயன்படுத்தும் ஸ்டெதாஸ் கோப்பை கண்டுபிடித்தவர் பிரான்ஸ்சைச் சேர்ந்த ரெனே லோஸெக்

# சிறுவர் வாசம்

## சிறுவர் பாடல்

—செம்மல் —

தீராத விளையாட்டுப்பிள்ளை - கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை

தின்னப் பழம் கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்.
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான். (தீராத)

பின்னலைப் பின் நின்றிழுப்பான் - தலை
பின்னே திரும்பு முன்னே சென்று மறைவான்
வண்ணப் புதுச் சேலை தனிலே - புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான். (தீராத)


அழகுள்ள மலர்கொண்டு வந்து - என்னை
அழ அழச் செய்து பின் கண்ணை மூடிக் கொள்
குழலிலே சூட்டுவேன் என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான். (தீராத)


புல்லாங் குழல் கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்பும் நற்கீதம் படிப்பான்.
கள்ளால் மயங்குவது போலே - அதைக்
கண்மூடி வாய்திறந்தே கேட்டிருபபோம். (தீராத)

அங்காத்திருக்கும் வாய் தனிலே - கண்ணன்
ஆறேழு கட்டெறும்பைப் போட்டு விடுவான்.
எங்காகிலும் கண்டதுண்டோ - இவனைப் போல்
தீராத விளையாட்டுப் பிள்ளை. கண்ணன் தெருவி ...(தீராத)

சிறுவர் மலர்

# யானையும் சந்திரனும்





— சின்னச்சிட்டு —

ஒரு நாள் ஒரு யானை நடனமாடிக் கொண்டிருந்தது. இந்த நடனத்தைச் சூரியன் பார்த்தான். தன் தம்பி சந்திரனை அழைத்து அதோ பார் யானை நடனம் ஆடுகின்றது என்றான். சந்திரன் பார்த்தான். யானையின் வயிறு மிகவும் பெரிதாக அவனுக்குத் தெரிந்தது.

சந்திரன் சூரியனைப் பார்த்து அண்ணா அதன் வயிற்றை பார். என்று சொல்லிச் சிரித்தான். இதை அறிந்த யானைக்குக் கோபம் வந்து விட்டது. யானை சந்திரனின் ஒளி பொருந்திய முகத்தைப் பார்த்து, சந்திரா நீ என்னைப் பார்த்துச் சிரித்தபடியால் உன் முகம் வாடிப் போகட்டும் என்று சாபம் கொடுத்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த சூரியன் தன் தம்பியின் முகம் வாடிக் கொண்டு போவதைக் கண்டான். உடனே தன் தம்பியைப் பார்த்து சந்திரா, உடனே போய் யானையிடம் மன்னிப்புக் கேள் என்றான். சந்திரன் யானையின் முன் வந்து கைகூப்பி வணங்கி யானையே, யான் செய்த பிழையை மன்னித்துக் கொள் என்று வேண்டினான். யானை சந்திரனைப் பார்த்து, சந்திரா உன்னை மன்னித்தேன் போ என்று கூறியது. சந்திரன் யானைக்கு நன்றி சொல்லிப் போனான்.

யானைகள் அதிகம் உள்ள நாடு ஜிம்பாவே




**5. இளவரசர்களின் அரங்கேற்றம்**

இளவரசர்களின் அரங் கேற்றத்திற்காகப் பெரிய விளையாட்டு அரங்கம் அழகு படுத்தப் பட்டது. நகரமே விழாக் கோலம் பூண்டது.

அரங்கத்தின் ஒரு பகுதியில் திருதராட்டினனும் குந்திதேவியும் அவையினரும் இருந்தார்கள். இன்னொரு பகுதியில் மக்கள் திரளாக கூடி இருந்தார்கள்.

இளவரசர்கள் ஒவ்வொரு வராக அரங்கத்திற்கு வந்தார்கள். தாங்கள் கற்றபோர்க் கலை களைச் செய்து காட்டினார்கள்.

கையில் கதையுடன் பீமனும் துரியோதனனும் அரங்கத்திற்குள் வந்தார்கள். மக்களின் ஆரவாரம் விண்ணைத் தொட்டது.

முதலில் அவர்கள் இருவரும் விளையாட்டாகப் போர் செய்யத் தொடங்கினார்கள். பிறகு உண்மையாகவே தாக்கிக் கொள்ள தொடங்கினார்கள்.

வெறியுடன் அவர்கள் போரிடு வதைக் கண்டு எல்லோரும் திகைத்தார்கள். மிகவும் முயன்று அவர்கள் இருவரையும் அசுவத்தாமன் பிரித்தான். இருவரும் உறுமிக் கொண்டே கோபத்துடன் பிரிந்தார்கள்.

அடுத்ததாக அர்ச்சுனன் அரங்கத்திற்கு வந்தான். வில்லில் அம்புகளைப் பூட்டி பல அற்பு தங்களைச்செய்தான். ஓர் அம்பு தீயை உமிழ்ந்தது. இன்னொரு அம்பு தண்ணீரைக் கொட்டியது. வில்லிலிருந்து ஒரே சமயத்தில் எண்ணற்ற அம்புகள் சீறிப் பாய்ந்தன.

"அர்ச்சுனனின் வில் ஆற்றல் வாழ்க" என்ற வாழ்த்தொலி எங்கும் கேட்டது.

அப்பொழுது அழகிய இளைஞன் ஒருவன் பெருமிதத் துடன் அரங்கத்திற்குள் நுழைந் தான். அவன் மார்பில் கவசமும் காதுகளில் குண்டலங்களும் பளபளத்தன.

"அர்சசுனா! என்ன வில வித்தை கற்று வைத்துள்ளாய்? என் ஆற்றலைப் பார்" என்று வீர முழக்கம் செய்தான். தன்னால் ஆற்றில் விடப்பட்ட மகனே அவன் என்பது குந்திக்குப் புரிந்தது

வில்லில் அம்பு பூட்டி னான் அவன். அர்ச்சுனனுக்கும் மேலாகப் பல அற்புதங்கள் செய்து காட்டினான்.

புதிதாக வந்தவன் பேரும் புகழும் பெறுவதைக் கண்டான் அர்ச்சுனன். அவனால் கோபத்தை

அடக்க முடியவில்லை. "என்னுடன் போருக்கு வா. உன்னை இங்கேயே கொன்று ஒழிக்கி றேன்" என்று கத்தினான்.

இருவருமே போர் செய்யத் தயார் ஆனார்கள்.

இதைக் கண்ட குந்தி மயங்கி விழுந்தாள். இதனால் அங்கே பரபரப்பு ஏற்பட்டது. அவளை அரண்மனைக்குத் தூக்கிச் சென்றார்கள்.

அந்த இளைஞனைப் பார்த்து கிருபாச்சாரியார், "அர்ச்சுனனுடன் போர் செய்யத் துடிக்கிறாயே, நீ எந்த நாட்டு இளவரசன்? எந்த அரச பரம்பரையில் வந்தவன்? சொல்" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அவன் தலை கவிழ்ந்தான். அவன் கையிலிருந்த வில் நழுவியது.

இதைப் பார்த்த துரியோதனன் கோபத்துடன் எழுந்தான். "பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டுவது உயர்ந்தோர் செயலா? அகத்தியர் மண் கலத்தில் பிறந்தவர். சுகமுனிவர் கிளிக்குப் பிறந்தவர். பிறப்பால் அவர்களை யாரும் குறை சொல்வது இல்லை. இந்த இளைஞனை இன்றே அங்க நாட்டு அரசன் ஆக்குகிறேன்" என்றான்.

அந்த இளைஞன் அரசனாக முடிசூட்டப்பட்டான். தனக்குக் கிடைத்த பெருமையை எண்ணி உள்ளம் நெகிழ்ந்தான் அவன்.



துரியோதனனை நன்றியுடன் பார்த்த அவன் "அரசே! என் பெயர் கர்ணன். தேரோட்டி அதிரதனின் மகன். குலப்பழியை நீக்கி என்னைப் பெருமைப்படுத்தினீர்கள். உங்களுக்காக என் உயிரையும் தருவேன். இது உறுதி " என்றான்.

"கர்ணா! நாம் இருவரும் நண்பர்கள்" என்று அவனைத் தழுவிக் கொண்டான் துரியோதனன்.

**அரங்கேற்றம் முடிவுக்கு வந்தது**

'புதிதாக வந்த இளைஞன் எல்லோரையும் கவர்ந்து விட்டானே. தாங்கள் பெருமை பெற முடிய வில்லையே' என்று பாண்ட வர்கள் வருந்தினார்கள்.

'வலிமை வாய்ந்த நண்பன் கிடைத்து விட்டான்' என்று மகிழ்ந்தான் துரியோதனன்.

# விக்கிரமாதித்தன் கதைகள்

## *வல்லவனுக்கு வல்லவன்*

ஆதி விஷ்ணு என்பவருக்கு மூன்று பிள்ளகைள் இருந்தனர். மூன்று பேரும் ஒவ்வொரு விதத்தில் திறமைசாலிகளாய் இருந்தார்கள். தங்களது திறமையை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அரசிடம் சென்று தங்களைப்பற்றிக் கூறினார்கள்.

அசரும் 'இளைஞர்களே நீங்கள் எதில் வல்லவர்கள் என்பதைக் கூறுங்கள்! அதை வைத்து உங்கள் திறமையை மதிப்பிடுகிறேன்' என்றார்.

'அரசே..... நான் சாப்பாட்டு விஷயத்தில் மிகுந்ததிறமை மிக்கவன்' என்றான் ஒருவன்.

இன்னொருவன் 'நான் உறங்குவதில் கில்லாடி' என்றான். மூன்றாமவனோ 'பெண்களிடம் பேசுவதில் நான் திறமைசாலி' என்றான்.

மூன்று இளைஞர்கள் மூன்று சுகங்களில் கெட்டிக் காரர்கள் என்று கூறியதைக் கேட்ட அரசர் மூவரையும் சோதிக்க நினைத்தான்.

அரண்மனையில் அறுசுவை உணவு தயாரிக்கச் சொல்லி முதல் இளைஞனைச் சாப்பிடச் சொன்னான். அவனும் மிகுந்து ரசித்து ருசித்து சாப்பிட்டான். 'சாப்பாடு எப்படி இருந்தது?' என்று கேட்டார் அரசர்.

'அரசே மன்னிக்க வேண்டும். சாப்பாட்டில் சுடுகாட்டு நாற்றம் வீசியது' என்றான். அரசர் சமையல்காரரைக் கூப்பிட்டுக் கேட்டார். சுடுகாட்டுச் சாம்பலை உரமாகப் போட்ட நிலத்தில் விளைந்த நெல் என்பதைக் கண்டு பிடித்துக் கூறினார் சமையல்காரர். சாப்பாட்டின் போது இதைக் கண்டுபிடித்த அந்த இளைஞனை பாராட்டினார் அரசர்.

தூக்கத்தில் சுகம் காண்பவனை பட்டு விரித்த மெத்தையில் காம்புகளைக் கிள்ளிவிட்டு தூவிய பூக்களைப் பரப்பி அதில் உறங்கு வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. இரவில் அந்தப் பஞ் சணையில் உறங்கினான்.

அடுத்த நாள் தூங்கி எழுந்த அந்த இளைஞனிடம் 'தூக்கம் எப்படி இருந்தது'? என்று கேட்டார் அரசர்.

'அரசே.... எனக்கு சரியான உறக்கம் வர வில்லை! உடம்பெல்லாம் வலி எடுத்து விட்டது. ஏதோ உடம்பில் நெருடுவது போல இருந் தது என்றான். அரசர் பஞ்சணையை சோதிக்கச் சொன்னார். மெத்தையில் தூவிய பூக்களுக்கு மத்தியில் ஒரு நீண்டரோமம் இருந்ததைக் கண்டுபிடித்தான். மெத்தையில் இந்தரோமம் அவனை உறுத்தி உறக்கத்தை கெடுத்திருக்கிறது என்று உணர்ந்த அரசர் அவனைப் பாராட்டி மகிழ்ந்தார்.

மூன்றாவது இளைஞனை வரச்சொன்னார். அவன் பெண் களுடன் உரையாடுவதில் கெட்டிக்காரன் என்று கூறினான். அரண்மனையில் இருந்த நடன மாதை வரவழைத்து அவளுடன் உரையாட ஏற்பாடு செய்யப் பட்டது. அந்த இளைஞனும் நடன மாதுவுடன் உரையாடி னான். பின்பு அந்த இளைஞனைக் கூப்பிட்டு 'அந்தப் பெண்ணைப் பற்றி என்ன நினைக்கிறாய்'? என்று கேட்டார்.

'அரசே அந்தப் பெண்ணின் மீது பால்வாடை வீசுகிறதே என்ன காரணம் என்று தெரிய வில்லை என்றான் அந்த இளைஞன். அரசர் நடன மாதைக் கூப்பிட்டு அவளது



பிறப்பைப் பற்றிக் கேட்டபோது அவள் இடையர் குலத்தை சேர்ந்தவள் என்று கூறினாள்.

மூன்று திறமை சாலி களுக்கும் அரண்மனையில் வேலை தருவதாக வாக்களி த்தார் அரசர் என்று கதையை கூறி முடித்தது வேதாளம்.

'விக்கிரமாதித்தா இந்த மூன்று பேரில் யார் மிகுந்த திறமைசாலி''? என்று கேட்டது வேதாளம்.

'சாப்பாட்டுப் பிரியனும், பெண்களிடம் உரையாடுவதில் வல்லவனும் தங்களது கருத்தைக் கூறியதில் உள்ள விசேஷ அம்சத்தை விட அனைவற்றையும் மறந்து உறங்கிக் கொண்டிருக்கும் போது உணர்ந்ததைக் கூறிய வனே திறமைசாலி' என்று கூறினான் விக்கிரமாதித்தன்.

தெனாலிராமன் கதைகள்

# 13. கூனை நிமிர்த்த வழி

J.P. கந்தையா

விஜயநகரில் ஒரு துன்மார்க்கன் இருந்தான். அவன் விரைவில் பொருள் சேர்த்து விட வேண்டும் என்ற ஆசையினால் சன்யாசி வேஷம் போட்டுக் கொண்டான். நாகதாளிப் பழத்தின் சாற்றிலிருந்து தயாரித்த ஒரு போதைப் பொருளை உருவாக்கினான்.

அவ்வூரிலுள்ள மூடர்கள்யார் என்று அறிய விரும்பினான். இதற்காக அவ்வூரில் இருந்த ஒரு சலவைத் தொழிலாளியை நட்புச் செய்து கொண்டான். இந்த சலவைத் தொழிலாளி ஒரு கூனன்.

சலவைத் தொழிலாளி அனைவர் வீடுகளுக்கும் சென்று வருபவன். ஆதலால், அவ்வூரில் உள்ள மூடர்களின் முகவரியைக் கபட சன்யாசிக்குத் தெரிவித்து விட்டான்.

கபடசன்யாசி அவர்களை வரவழைத்து இச்சமாகப் பேசினான். தான் கொடுக்கும் மருந்தைச் சாப்பிட்டால் பொன்னும் பொருளும் நிறைய வந்து சேருமென்று ஆசை காட்டினான். அந்த மூடர்களும் சன்யாசி கொடுத்த மருந்தை வாங்கிக் கொண்டனர். ஒவ்வொருவரும் மருந்துக்காக சாமியாரிடம் நிறையப் பொருள் கொடுத்தனர்.

சாமியாரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டவர்களுக்குப் பொன்னும் பொருளும் கிடைக்கவில்லை. மாறாக மருந்தை வாங்கிச் சாப்பிட்ட அனைவரும் எமலோகத்தை நோக்கிப் பயணமாயினர். ஆனால், ஒருவன் மட்டும் பைத்தியம் பிடித்துத் தெருத் தெருவாக அலைந்து கொண்டிருந்தான்.

இதைத் தெரிந்து கொண்ட தெனாலி இராமன் கபட சன்யாசிக்குச் சரியான தண்டனை வழங்க வேண்டுமென்று நினைத்தான்.

ஒருநாள் கபடசன்யா சியைத் தந்திரமாக அழைத்து வந்து, பைத்தியக்காரன் முன் நிறுத்தினான்.

வெறி பிடித்த பைத்தியக் காரன் அருகே இருந்த ஒரு கட்டையை எடுத்து சாமியாரின் மண்டையில் ஓங்கி அடித்தான்.

சாமியார் மண்டை உடைந்து இறந்து விட்டார்.

இதை அறிந்தகாவலர் கள் கொலையாளியையும், கொலைக்கு உடந்தையாக இருந்த தெனாலி இராம னை யும் பிடித்துக்கொண்டு இராயரின் முன்னால் நிறுத்தினர்.

அப்போது சபையில் தாத்தாச் சாரியார் இருந்தார். அவருக்குத் தென்னாலி இராமன் பேரில் நீண்ட நாட்களாகவே வெறுப்பு.

"கொலையாளி சித்த சுவாதீனமில்லாதவன். எனவே அவன் பேரில் தவறு இல்லை. அவனைக் கொலை செய்யுமாறு தூண்டியவன் தென்னாலி இராமன்தான். கொலை செய்வதை விடக் கொலை செய்யத் தூண்டுவது பெரிய குற்றம் எனவே இவனுக்கு மரண தண்டனை அளித்து விட வேண்டும்" என்று இராயரிடம் கூறினார், தாத்தாச்சாரியார்.

"நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை" என்று கூறிய இராயர், "இவனைக் கழுத்தளவு பூமியில் புதைத்து யானையைக் கொண்டு இடறச் செய்யுங்கள்."இது தான் சரியான தண்டனை என்றார்.

காவலர்கள் இராமனை அழைத்துச் சென்றனர். ஊருக்கு



வெளியேயுள்ள ஒரு மைதானத்திற்கு வந்தனர். அங்கு ஒரு பெரிய பள்ளம் தோண்டினர். இராமனை அதற்குள் இறக்கி மண்ணைத் தள்ளி விட்டனர்.

பூமிக்குள் புதையுண்ட இராமனின் தலை மட்டும் வெளியே தெரிந்தது.

சரி, இவனைப் புதைத் தாகிவிட்டது. இனி இவன் இங்கிருந்து தப்பிச் செல்ல முடியாது. நாம் போய் யானை யைக் கொண்டு வருவோம் என்று காவலர்கள் அரண்மனையை நோக்கிச் சென்றனர்.

அப்போது அவ்வழியே கூனனாகிய சலவைத் தொழி லாளி அழுக்கு மூட்டையுடன் வந்து கொண்டிருந்தான். அவன் பூமியில் புதையுண்டு இருக்கும் தெனாலி இராமனைப் பார்த்தான்

நீங்கள் யார்? ஏன் இப்படி பூமியில் புதையுண்டு கிடக்கி றீர்கள்? என்று இராமனிடம் கேட்டான்."ஐயா நான் ஒரு

கூனன். பத்து வருடங்களாக கூனினால் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தேன். சன்யாசி ஒருவர் இவ்விடத்தில் நாள் முழுவதும் பள்ளத்தில் புதை யுண்டு இருக்க வேண்டுமென்றும், எது நடந்தாலும் வாய் திறக்கக் கூடாது என்றும் கூறினார். அதன் படியே இங்கு புதையுண்டு கிடக்கிறேன் சாமியார் சொன்னது உண்மைதானா என்று சோதித் துப் பார்க்க ஆவலாக இருக் கிறது. தயவு செய்து இந்தப் பள்ளத்தைத் தோண்டி என்னை வெளியேற்றுங்கள்" என்று கூனனிடம் கூறினான், இராமன். கூனனும் அவன் பேச்சை நம்பிக் கொண்டு பூமியைத் தோண்டித் தெனாலி இராமனை விடுவித்தான்.

வெளியே வந்த தெனாலி இராமன், "ஆஹா! என் குருநாதரின் மகிமையே மகிமை! முதலில் அவரிடம் சென்று ஆசிர் வாதம் வாங்க வேண்டும்" என்று ஓடுவதற்குத் தயாரானான்

"தம்பி, நானும் இந்தக் கூனினால் ரொம்பக்கஷ்டப படுகிறேன். எல்லோரும் என்னைக் கேலி செய்கிறார்கள். என் மனைவிகூட எனனை மதிப்ப தில்லை. என்னையும் இந்தப் பள்ளத்தில் தள்ளி மண்ணைப் போட்டு மூடிவிடு" என்றான் கூனன்.

தெனாலி இராமன் கூனனைப் பள்ளத்தில் தள்ளி மண்ணைப் போட்டு மூடினான். போகும்போது, "சொன்னது ஞாபகமிருக்கட்டும். என்ன நடந்தாலும் வாயே திறக்கக் கூடாது" என்று கூனனிடம் சொல்லிவிட்டுப் போனான்.

அரண்மனைக்குப் போன காவலர்கள் யானையுடன் வந்தி ருந்தனர். அவர்கள் யானை மேல் இருந்ததால் புதையுண்டி ருப்பவனின் முகத்தைச் சரியாக பார்க்க முடியவில்லை. யானையை அவன் மேல் இடறிக் கொன்றுவிட்டுச் சென்றனர்.

மறுநாள் மரணதண்டனை பெற்ற தெனாலி இராமன் சபையில் வந்து நின்றதைப் பார்த்த இராயர் ஆச்சரியப்பட்டார்.

உன்னைக் கொன்று விட்டதாக காவலாளிகள் சொன்னார்களே, நீ எப்படி உயிர் பிழைத்து வந்தாய்? என்று கேட்டார் இராயர்.

"அரசே, தாத்தாச்சாரி யார் சொன்னவாறு பல கொலை களுக்கு உடந்தையாக இருந்த ஒருவனை எனக்குப் பதில் பள்ளத்தில் இருக்கச் செய்து விட்டேன். எனக்குப் பதிலாக அவன் தான் மரணமடைந்தான்," என்றான் இராமன்.

"விவரமாகக் கூறு" என்று இராயர் கூறியதும் இராமன் கபட

சன்னியாசியைப் பற்றியும், கூனன் அவனுக்கு உதவி செய்ததைப் பற்றியும் அரசரிடம் கூறினான்.

"நல்லவேலை செய்தாய்! அந்தக் கபட சன்னியாசி கொலை செய்யப்பட்டது நியாயமே! அவனுக்கு உடந்தையாக இருந்த கூனன் கொல்லப்பட்டதும் நியாயமே!" என்று கூறிய இராயர் தாத்தாச் சாரியார் இருந்த திசையில் பார்த்தார்.

இந்தச் சந்தடியில் அவர் எப்பொழுதோ சபையிலிருந்து நழுவிவிட்டார்.



*ஒருவர்: நீ பியர் குடிக்கிறாயாமே*

*மற்றவர்: ஆமாம்*

*ஒருவர்: எப்படிப் பழகினாய்?*

*மற்றவர்: என் மனைவி தான் பழக்கினாள்*

*ஒருவர்: நீ கொடுத்து வைத்தவன்*

## எண் விந்தைகள்

37037 * 3 = 111111
37037 * 6 = 222222
37037 * 9 = 333333
37037 * 12 = 444444
37037 * 15 = 555555
37037 * 18 = 666666
37037 * 21 = 777777
37037 * 24 = 888888
37037 * 27 = 999999

# பறக்கும் குதிரை

ஒரு அரசன் குதிரை ஒன்றை வளர்த்தான் அது அழகான குதிரை புலி வேகத்தில் பாய்ந்து ஓடக்கூடியது.

தனது குதிரை வானில் பறக்க வேண்டும் என்று அரசன் ஆசைப்பட்டான் குதிரையை வானத்தில் பறக்கவைப்பதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான் குதிரையைப் பறக்க வைப்பவர்களுக்கு ஆயிரம் பொற்காசு தரப்படும் என்று அரசன் அறிவித்தான்.

குதிரையாவது பறப்பதாவது யாரும் வரவில்லை அரசனுக்கும் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

அந்த ஊரில் ஒரு புத்திசாலி இருந்தான். ஒரு நாள் அவன் அரசனிடம் வந்து அரசே, உனது குதிரையை பறக்க வைக்க என்னால் முடியும் என்று சொன்னான்.

அது கேட்டு அரசன் மகிழ்ந்தான் அவனுக்கு நிறைய பொன் பொருள் எல்லாம் கொடுத்து ஊரில் உள்ள மக்களுக்கும் எனது குதிரை வானில் பறக்கப் போகின்றது. என்று பாறை சாற்றுவித்தான் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு பெரிய இடத்தில் கூடினார்கள் கூடி ஆரவாரித்தார்கள் அந்த புத்திசாலியிடம் குதிரையை அரசன் கொடுத்து விட்டு அரசன் அரண்மனைக்குச் சென்று விட்டான் அப்போது அந்த புத்திசாலி குதிரையை ஒருவனுக்கு விற்று விட்டான். மக்கள் எல்லோரும் குதிரையைக் கட்டி இருந்த இடத்திற்குப் போனார்கள் அங்கே குதிரையை காணவில்லை அப்போது அரசனும் அவ்விடத்திற்கு வந்து குதிரை எங்கே என்று புத்திசாலியிடம் கேட்டான். அதற்குப் புத்திசாலி பறக்கும் குதிரை நிற்குமா? பறந்து விட்டது என்று புத்திசாலி கூறினான் அரசன் தன் அறியாமையை நினைத்து வெட்கமும் துக்கமும் அடைந்தான்

"பேராசை பெரும் நஷ்டம்"

நன்றி

*- - சங்கவி - -*

# நீதிபதியின் தீர்ப்பு

ஒரு கிராமத்தில் ஒரு வைரவியாபாரி இருந்தான். அவனிடம் நிறைய முத்துக்கள் இருந்தன. அவைகளை விற்றுத் தீர்த்திருந்தான். ஆனால் இரண்டு முத்துக்கள் மட்டும் எஞ்சி இருந்தன.

அவன் அவசரமாக வெளியூர் செல்ல வேண்டி வந்தது. அதனால் தனது நண்பன் "வேலு" என்பவனிடம் பாது காப்பாக வைத்துவிட்டு சென்றான்

சிலநாட்கள் கடந்து ஊர் திரும்பிய வியாபாரி தன் நண்பனிடம் இரண்டு முத்துக்களையும் திருப்பி தரும்படி கேட்டான். அப்படியா நீ என்னிடம் முத்துக்களைத் தரவில்லையே என வாதிட்டான்.

வியாபாரி நீதிமன்றம் சொன்று முறையிட்டான். கோட்டார் வேலுவை அழைத்து விசாரனை மேற் கொண்டனர். நீதிபதிக்கு சந்தேகம் ஏற்பட்டது வேலுவின் பதில்களிருந்து.

நீதிபதி நூறு முத்துக்களைக் கொடுத்து "இதில் நூறு முத்துக்கள் உள்ளன மாலை ஒன்றை தயாரித்து வருமாறு கட்டளை யிட்டார். அதன் படி முத்துக் களை எடுத்துச் சென்ற வேலு ஒவ்வொறு முத்துக்களாக நூலில் கோர்த்து வந்தபோது தொண்ணூற்றெட்டு முத்துக்கள் தான் இருக்கக் கண்டான். ஏதோ தவறுதல் நடந்துவிட்டது. என எண்ணித் தன்னிடம் இருந்த செட்டியாரின் இரு முத்துக்களை மாலையில் கோர்த்து மாலையாக நீதிபதியிடம் ஒப்படைத்தான்.

நீதிபதி மாலையை வாங்கி முத்துக்களை எண்ணி பார்த்துவிட்டு மிகவும் அதிசயப்பட்டார். வேலுவை நோக்கி உன் பொய் குட்டு வெளியாகிவிட்டதே! என கூறி அவனை எச்சரித்ததோடு ஒரு வருடம் "சிறை" தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

என்றைக்கும் நீதி நிலைக்கும். பொய் பேசினால் தண்டனை கிடைக்கும் என்பதினை உணர்வோமாக, உண்மை பேசி உத்தமனாக வாழக்கற்றுக்கொள்ளுங்கள்.

நன்றி

*– – சங்கவி – –*

# The Lion and the Hare

Animals of a jungle had agreed to send one animal everyday to the lion's den for his food. One day it was the turn of a hare to go to the lion's den. The hare was very clever. He worked out a plan to kill the wicked lion.

He went to the den much later than the lion's mealtime. So the lion was very angry with him.

"Why have you come so late?" he asked.

"Sir," said the hare as politely as he could, "I got late because another lion chased me. I could get away from him with much difficulty."

"Another lion? In this jungle?" asked the lion.



"Yes, Sir. I know where he lives. come with me and I will show him to you," said the hare.

The lion got ready to go with the hare. The hare took him to a well and said,

" Here he lives. Please come and see inside."



The lion looked into the well and saw his own reflection. He mistook the reflection for another lion and roared angrily at it. Then he saw that the lion in the water was also roaring at him. Now he could not control his temper and jumped into the well. That was the end of him.

# ஆத்திசூடி

## நூல்



**93. மெல்லினல்லாள் தோள் சேர்**

இல்-வீட்டிலே: மெல்- மெல்லிய: நல்லாள்- நல்லகுணமுள்ள பெண்ணுடன்; தோள் சேர் சேர்த்து வாழ்.

மனைவியுடன் இன்பமாக சேர்ந்து வாழ வேண்டும்.

**94. மேன் மக்கள் சொல் கேள்**

மேன் மக்கள்- உயர்ந்த குணமுள்ளவர்களது, சொல்- வார்த்தைகளை, கேள்- கேட்டு நட நல்லொழுக்க முடைய பெரியார்கள் கூறும் புத்திமதிகளைக் கேட்க வேண்டும்.

**95. மை விழியார் மனை அகல்**

மைவிழியார்- மை தீட்டிய கண்களையுடைய ஒழுக்கமில்லாத பெண்களின், மனை அகல்- வீட்டுப்பக்கம் போகாதே.

விலை மாதர் வீட்டுவழி ஒருபோதும் போகாதே

**96. மொழிவது அற மொழி**

மொழிவது- சொல்வதை, அற- சந்தேகத்திற்கு இடமில்லாமல், மொழி- சொல்

சொல்வதை ஐயம் திரிபு அற சொல்ல வேண்டும்.

**97. மோகத்தை முனி**

மோகத்தை- ஆசையை, முனி- கோபித்து விரட்டு
ஆசையைக் கோபித்து விரட்டிவிட வேண்டும்.

**98. வல்லமை பேசேல்**

வல்லமை- உனது சாமர்த்தியத்தைப் பற்றி, பேசேல்- நீயே புகழ்ந்து பேசாதே.
சுய சாமர்த்தியத்தைப் பெரிதாகப் பேசலாகாது.

**99. வாது முற்கூறேல்**

வாது- விவாதம் செய்வதற்கு, முற் கூறேல்- முன்னே சென்று எவரையும் அழைக்காதே.
வீண் வாதங்களுக்கு முற்பட்டு பிறரை அழைக்கலாகாது.

**100. வித்தை விரும்பு**

வித்தை- கலைகளை, விரும்பு- விரும்பிக் கற்றுக் கொள்
கல்விப் பொருளை விரும்பிக் கற்க வேண்டும்.

**101. வீடு பெற நில்**

வீடு பெற- மோட்சத்தை அடையும் நல்ல வழியிலே, நில்- நிற்பாயாக
முத்தி பெறும் வழியிலே ஒழுக வேண்டும்.

**102. உத்தமனாய் இரு**

உத்தமனாய் - உயர்ந்த குணமுடையவனாக, இரு - வாழ்ந்திரு.
உத்தமனாக வாழ வேண்டும்.

இந்தியாவில் சிக்கிம் இல் உள்ள கஞ்சன் ஜங்கா தேசியப் பூங்காதான் உலகிலேயே மிக உயரமான இடத்தில் அமைந்துள்ளது.

# பாரதியார் கவிதைகள்



### 6. அழகு தெய்வம்

மங்கியதோர் நிலவினிலே கனவிலிது கண்டேன்
வயதுபதி னாறிருக்கும் இளவயது மங்கை:
பொங்கிவரும் பெருநிலவு போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும் போற்றவருந் தோற்றம்:
துங்கமணி மின்போலும் வடிவத்தாள் வந்து,
தூங்காதே யெழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்
அங்கதனிற் கண்விழித்தேன் அடடாவோ!அடடா!
அழகென்றும் தெய்வந்தான் அதுவென்றே அறிந்தேன்
யோகந்தான் சிறந்ததுவோ? தவம் பெரிதோ? என்றேன்:
யோகமே தவம், தவமே யோகமென உரைத்தாள்.
ஏகமோ பொருளன்றி இரண்டாமொ? என்றேன்:
இரண்டுமாம், ஒன்றுமாம், யாவுமாம்' என்றாள்
தாகமறிந் தீயுமருள் வான்மழைக்கே யுண்டோ?
தாகத்தின் துயர்மழைதான் அறிந்திடுமோ? ' என்றேன்
வேகமுடன் அன்பினையே வெளிப்படுத்தா மழைதான்
விருப்புடனே பெய்குவது வேறாமோ?' என்றாள்
காலத்தின் வதி மதியைக்கடந்திடுமோ?' என்றேன்
காலமே மதியினுக்கோர் கருவியாம்' என்றாள்:
ஞாலத்தில் விரும்பியது நண்ணுமோ?' என்றேன்
நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம்? என்றாள்.
ஏலத்தில் விடுவதுண்டோ எண்ணத்தை?' என்றேன்
எண்ணினால் எண்ணியது நண்ணுங்காண்' என்றாள்
மூலத்தைச் சொல்லவோ? வேண்டாமோ?' என்றேன்
முகத்திலருள் காட்டினாள் மோகமது தீர்ந்தேன்.



# பிள்ளையார் கதை



மூன்றெழுத் ததனான் மொழிந்தமந் திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தெ
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகண் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு மிப்படி நோற்று
மற்றைநா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல கொடுத்திடு மாலைக ளாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திக்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கொங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி யறுகு
முத்தளைக் கூவிள முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவலெள் ளுண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பானறு நெய்த்தயிர் பருப்படன் போனகங்

# என்னவளே

-- நகுலா நவரத்தினம் -

அம்மா! அம்மா என்ற வார்த்தை ஒரு தென்பு தரும் வார்தையாகவே உள்ளது. என்னைத் தாலாட்டி சீராட்டி பக்கபலமாக இருந்தவர் என் அன்னையே! நாம் கஷ்டம் வரும் போது முதலில் வரும் வார்த்தை அம்மா. அம்மா என்று அழைக்காத உயிர் இல்லையே என்று படிக்கிறோம். நாமும் அம்மாவாகி வயது முதிர்ந்த இந்த நிலையிலும் அம்மாவை நினைவு கூராமல் இருக்க முடிவதில்லை. நாம் சிறுவராக இருந்து பெரியவர்களாகி திருமணமாகி பிள்ளைகள் பிறந்திருந்த நேரங்களில் எம்மை கண்ணை இமை காப்பது போல் அரவணைத்து அன்பு வார்த்தை பேசி எங்களைப் பராமரித்ததை மறக்கமுடியுமா? அல்லது எங்கள் பிள்ளைகளை பாசத்துடன் பார்த்ததை நினைப்பதா என்னவென்று விபரிப்பது?. அனேகமான குழந்தைகள் அம்மாவிலும் பார்க்க அம்மம்மாவையே நேசிக்கிறார்கள். காரணம் அவர்களின் பாசத்துக்கு அளவே இல்லை. பாசம்! எங்கிருந்து வந்தது இந்தப் பாசம்? பரம்பரை பரம் பரையாக தொடர்ந்து வந்த இந்த பாசத்தை விபரிக்க முடியவில்லை.

எனது அம்மா மறைந்து பல வருடங்கள் ஆகியும் என்னால் அம்மாவின் பாசத்தை அடிக்கடி பசுமை யாகவே உள்ளது. எங்கள் சுக துக்கங்களில் சரிசமமாக பங்கெடுத்து, எனக்கு ஆறுதல் அளித்த என் அம்மாவை நான் என்றென்றும் மறவேன்.

தாய்குலம் வாழ்க!

தரணி எங்கும் என வாழ்த்தி வணங்குகிறேன் என் அம்மாவை.

........வணக்கம் ...........

பிறப்பு வீதம்
அதிகமுள்ள நாடு
நேபாளம்

# இஞ்சி - Ginger




"மிஞ்சும் நோயெல்லாம் வஞ்சமில்லாமல் தடுக்கும் இஞ்சி"

அல்லம், ஆர்த்தரகம், ஆத்திரகம், இலாக்கொட்டை, மதுலீ என்று பெயர் பெறும் இஞ்சியும் எலுமிச்சையைப் போன்று ஒரு சர்வரோக நிவாரணியாகும்.

நோய்நொடியின்றி நலமாக இருக்க வேண்டுமானால் உண்ணும் உணவில் மிகக் கவனமுடன் இருப்பது அவசியமாகும். உணவே மருந்து, மருந்தே உணவு என்ற வாக்கியம் அதனை மெய்ப்படுத்துகின்றது.

காரம், லேசான கசப்பு, இனிப்பு என சுவைக்குரியது இஞ்சி. இது சில கறிவகைகள் தயாரிக்கப் பயன்படுகின்றது. இந்தியச் சமையலில் மஞ்சளைப் போல் இஞ்சியும் இடம் பெற்றிருக்கின்றது.

இஞ்சியைப் பக்குவப் படுத்தி வைத்துக்கொள்ளத் தெரிந்து கொண்டால் போதும். நோய்க்கு உடனடி நிவாரணம் கிடைத்து விடும். வாதம், பித்தம், கபம் என இம் மூன்று நோய்களுக்கும் இஞ்சி மிகச் சிறப்பு வாய்ந்த மருந்தாகும். நம் நாட்டு தேங்காய்ச் சட்னிக்கு இஞ்சித் துண்டுதான் நல்ல சுவையைக் கொடுக்கின்றது.

இஞ்சிப்புளி என்றும் இஞ்சித் தொக்கு என்றும் திருமண வீடுகளில் பரிமாறுவதைப் பார்க்கலாம். நீங்கள் வயிறு புடைக்கச் சாப்பிட்டாலும் இஞ்சிப்புளி ஒரு தேக்கரண்டி அளவு சுவைத்தால் சாப்பிட்ட பொருளெல்லாம் ஜீரணமாகி விடும்.

இஞ்சியை விட சுக்கு தான் நமது சித்த மருத்துவத்தில் பெருவாரியாக இடம்பெறுகின்றது. இஞ்சியின் மேல்பாகத்தில் சுண்ணாம்பு தடவிக் காய வைத்தால் சுக்காகும். இஞ்சிக்கும், சுக்குவிற்கும் ஒரே மருத்துவக் குணம் தான். இஞ்சியை எப்படிப பாவித்தாலும் பலன் கிடைக்கும்.

**மருத்துவக் குணம்**

தயாரிக்கும் முறை:- 200 கிராம் இஞ்சியைத் தோல் நீக்கி மிக மெல்லியதாக வெட்டி கால் கிலோ தேனில் போட்டுக் குலுக்கி, 48 நாட்களுக்கு வைத்திருக்க வேண்டும். அதன் பின்னர் பித்தம், வாதம் போன்ற நோய்களுக்கு கொடுத்துவர குணம் காணும்.

இஞ்சியை நன்றாக அரைத்து, சர்க்கரைப்பாகுடன் கலந்து பர்பி மாதிரி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். வாதம், பித்தம், கபம் நீங்க காலை, மாலை இருவேளையும் ஐந்து நாட்கள் உண்டு வர குணம் கிடைக்கும்.

இஞ்சியை இடித்து சாறு பிழிந்து, சிறிது நேரம் வைத்திருந்தால் நீர் தெளிந்து நிற்கும். அதில் ஒரு எலுமிச்சையைப் பிழிந்து கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும். இதை அதி காலையில் வெறும் வயிற்றில் அருந்தி வர பித்தம், குடல் அலற்சி, வாந்தி, பசியின்மை யாவும் அகலும். ஒவ்வொரு நாளும் புதிதாகப் பானத்தை தயாரித்தல் வேண்டும். அத்துடன் ஏழு நாட்கள் பருகினால் போதுமானது.

சிறிய வெங்காயச் சாறு 100 மில்லி கிராம், எலுமிச்சைச் சாறு 100 மில்லி கிராம் இஞ்சிச்சாறு 50 மில்லி கிராம் கலந்து குடித்தால் வாந்தி வருவது உடனே நிற்கும்.

ஜீரண சக்தியை அதிகப் படுத்தவல்ல இஞ்சி உற்சாகத்தை ஊட்டும் அற்புதமான மருந்துப் பொருளாகும். இஞ்சி குடல், இரைப்பை முதலிய உறுப்புக்களில் உள்ள மாசை வெளியாக்கும்

இஞ்சி பித்தத்தைச் சமனிலைப்படுத்துவதில் சிறந்த தாகும். இஞ்சித் துண்டுகளைத் தேனில் ஊறப் போட்டு அதைக் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நரை, திரை, மூப்பு எதுவுமின்றி ஆரோக்கிய த்துடன் வாழலாம்.

இஞ்சியை மைய அரைத்து நெல்லிக்காய் அளவு காலை மாலை பாலில் கலந்து குடித்து வந்தால் இருமல், இளைப்பு, குன்மம், மயக்கம், ஓடுவாயு தீரும், பசி உண்டாகும்

.

இஞ்சியை மென்று உமிழ் நீரை விழுங்கினால் தொண்டைக் கரகரப்பு நீங்கும். இஞ்சியை அரைத்துப் பிழிந்து இரண்டு தேக்கரண்டி அளவு சாறெடுத்து ஒரு முட்டையின் மஞ்சள்

கருவைக் கலந்து, நெய் விட்டு சுண்டும்வரைக் கிளறிப் பதமாக்கி வைத்துக்கொண்டு வாரமொருமுறை உண்டு வர வேண்டும். இதனால் இரைப்பை, ஈரல் முதலியன வலுப்படும். ஞாபகசக்தி உண்டாகும்.

இஞ்சிச் சாற்றில், தேன், குங்குமப்பூ, ஏலக்காய், ஜாதிக்காய், கிராம்பு போன்றவற்றை வகைக்கு 5 கிராம் வீதம் தூளாக்கிக் கலந்து சுண்டக் காய்ச்சிப் பாகு பதத்தில் வைத்துக் கொண்டு நாள்தோறும் இரவு வேளையில் இதனைச் சுண்டைக் காய் அளவு உண்டு வர பித்தவாந்தி, பித்தமயக்கம், வாய்க்கசப்பு, தலைவலி யாவும் குணமாகும்.

சுக்கு, மல்லியை இடித்து வைத்துக்கொண்டு காப்பி போல் தயாரித்துக் குடித்துவந்தால் நோய்கள் யாவும் தூரநிற்கும். இஞ்சி, சித்தரத்தை இரண்டையும் இடித்து நான்கு டம்ளர் தண்ணீர் ஊற்றி இரண்டு டம்ளராகச் சுண்டக் காய்ச்சி பனங்கற்கண்டு அல்லது கற்கண்டு சேர்த்துப் பருகிவர தீராததாகம் தீரும்.

இஞ்சி, எலுமிச்சை சாறெடுத்துக் காலை வேளை வெறும் வயிற்றில் பருகிவர உடல் பருமன் குறையும்.

இஞ்சிச் சாறு 200 கிராம், பசும்பால் 100 கிராம், நல்லெண்ணெய் 300 மில்லி லீற்றர் மூன்றையும் கலந்து கொதிக்கவைத்து நீர் வற்றியதும் எடுத்து வைத்துக் கொண்டு வாரந்தோறும் தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் தலைப்பாரம், தலை வலி, கண் எரிச்சல், சளி, தும்மல் யாவும் குணமாகும்.

சுத்தமான தேங்காய் எண்ணெயில் 300 கிராம், அரைத்த இஞ்சியையும், 300 கிராம் சூடத்தையும் கலந்து காய்ச்சிவடிகட்டி எடுத்து வைத்துக் கொண்டு மூட்டுவலி, கால், கை குடைச்சல் போன்றவற்றிற்குத் தடவி வந்தால் நோவு குறையும்.

இஞ்சியை இடித்துச் சாறு எடுக்க வேண்டும். அதனை ஒரு மணிநேரம் வைத்திருந்தால் தெளிந்து விடும். தெளிந்த இஞ்சி நீரில் தேன் கலந்து 1 மேசைக் கரண்டி அளவு எலுமிச்சைச் சாறு சேர்த்து சிறுவர்களுக்குக் கொடுத்து வர நெஞ்சுச்சளி, கபம், வாந்தி யாவும் குணமாகும்.

சுக்கை இடித்துத் தூளாக்கி நீரில் கலந்து சிறிது நேரம் வைக்க வேண்டும். அதிலிருந்து கிடைக்கும் தெளிந்த நீரோடு சுத்தமான மழை நீரைக் கலந்து

கொள்ள வேண்டும். அத்துடன் தாய்ப் பாலைக் கலந்து கண்களில் விட்டுவர கண்களில் ஏற்படும் அரிப்பு, திரைப்படலம் சர்க்கரை வியாதியால் ஏற்படும் சவ்வு வளர்ச்சி (கேட்ரக்ட்ஸ்) யாவும் குணமாகும். கண் பார்வை பிரகாசமாக இருக்கும்.

பனி நீரைச் சேகரித்து அத்துடன் தெளிந்த இஞ்சி நீரைச் சேர்த்து பனங்கற்கண்டு கலந்துகுடித்துவர தொண்டைக் கரகரப்பு நீங்கும்.

இஞ்சியை மெல்லிய தாக நறுக்கி சீனிப்பாகில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இதனை அவ்வப் போது குழந்தைகளும், பெரியவர்களும் சாப்பிடலாம். இதனால் பித்தம், தலை மயக்கம் நீங்கும். தூரப் பயணங்கள் செல்வோர் அனைவரும் கையில் எடுத்துச் செல்வது நலமாகும். வாகனத்தில் செல்லும்பொழுது ஏற்படும் தலைச்சுற்றல், வாந்தி போன்ற வற்றைத் தவிர்க்கலாம்.
இஞ்சி காய்ந்தால் சுக்கு

இஞ்சிக்கு உள்ள வேறு பெயர்கள் அருக்கன், அமிர்தம், ஊரகம், உபகுல்லம், சுக்கு, ஆர்தரகம், விடமூடிய சொண்டி, சுதகம், சௌபர்ணம், சஞ்சீவி, நவ்சூறு, நாகரம், நற்கிழங்கு, சௌவர்ணம், கடுபத்திரம் வேர்க்கொம்பு கண்டி வில்வ பேஷணம், மூலவேர், மதுலிகம், மகா ஔடதம் என விளம்புவதெல்லாம் இஞ்சிக் கிழங்கு என்றறி.

---

உலகிலேயே அதிக
விலையுள்ள பூ
குங்குமப் பூ

---

கீரை வகைகளில்
முருங்கைக்
கீரையில்
தான் கல்சியம்,
புரதத்தின்
கலோரி அதிகம்.

# மங்கையர் வாசம்

## அழகுக்கு அழகு சேர்க்க



**கமலா ஜெகதீஸ்வரன்**

இந்த மாத இதழில் அழகுக்கு அழகு சேர்க்க Eyebrow ஐ சற்றுப் பார்ப்போமாயின் முகத்திற்கு அழகு கூட்டுவதில் Eyebrow இன் பங்கு முக்கியமானது. மூக்கு, தாடை போன்றவற்றின் Shape ஐ மாற்றுவது கடினம். ஆனால் Eyebrow இன் Shape ஐ மாற்றி அழகு கொள்ளலாம் அல்லவா. Face இன் அழகு சுமாராக உள்ளவர்கள் கூட Eyebrow ஐ நன்கு மெருகூட்டி அழகுபடுத்திக் கொள்ளலாம். இதனால் Face இன் அழகை மேலும் அழகூட்டும். முகத்தை பொறுத்தளவில் மூக்கு Shape இல்லாமலும், கண் எடுப்பாக இல்லாமலும் உள்ளவர்கள், ஏன் நீண்ட முகத்தை உள்ளவர்களும் தங்கள் புருவ அழகை மெருகேற்றினால் அக்குறைபாடுகள் மறைக்கப்பட்டு அவர்களின் முகம் அழகாய்த் தோன்றும். Eyebrow வை பார்த்தீர்கள் என்றால் அடர்ந்த Eyebrow, ஒன்றோடு ஒன்று Join பண்ணியதான Eyebrow அடர்த்தி குறைந்த மெல்லியதான Eyebrow, நீண்ட Eyebrow, Short ஆன Eyebrow இப்படிச் சிலவகையான Eyebrow உள்ளன.

1. Eyebrow அடர்த்தி (Thick) இல்லாது இருந்தால் Brown colour Eyebrow Pencil ஐ பயன்படுத்தி Slight ய் பயன்படுத்த வேண்டும். அப்படி செய்தால் Eyebrow thick ஆக இருப்பது போல் இருக்கும். பின்பு black pencil ஆல் Natural colour apply பண்ணி பின்பு brush ஆல் shape செய்யவும்.

2. அடுத்து அடர்த்தியாக (thick ஆக) இருந்தால் Eyebrow brush இல் சிறிதளவு hairspray கலந்து Eyebrow சீவி shape செய்யவும்

3. Eyebrow thick ஆக இருப்பதற்கு daily cast apply பண்ணி வர Eyebrow நன்கு பலனைத் தரும்.


4. Daily இரவில் Eyebrow இற்கு olive oil apply பண்ணி வந்தால் Eyebrow soft ஆகவும் இருக்கும்.

கண்ணில் Eyetext apply பண்ணுவதற்குமுன் கண்களுக்குள், 2,3 drops rose water விட்டு சில நிமிடங்கள் விட்டு வந்தால் கண்கள்..... brightness ஆகவும் இருக்கும்.

*இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் மலரும் எனக் கூறி விடைபெறும்*

*–தமலாஜெகதீஷ்வரன்–*

*Bobblika Bridal*
*& Hairs Styling*



ஒருவர்: அண்ணே உங்கடை Back home எது?
மற்றவர்: சிறீலங்கா
ஒருவர் : உங்கள் மனைவி Back home எது?
மற்றவர்: ஜெர்மனி
ஒருவர்: உங்க பிள்ளைகள்
மற்றவர்: ஒன்று ஜெர்மனி, மற்றறையது லண்டன் மூணாவது கனடா.
ஒருவர்: அப்ப நீங்கள் நாடோடிக் கூட்டம் அப்படித்தானே.

உங்கள் தரமான ஆக்கங்களை மண்வாசத்திற்கு, தபால் மூலமோ அல்லதுமின்னஞ்சல் வழியாகவோ அனுப்பி வைத்தால், மண்வாசத்தில் காலக்கிரமத்தில் அவை பிரசுரமாகும்


மண்வாசத்துடனான தொடர்புகட்கு:

**MANNVAASAM**

*18, Mondeo Drive # 639 ,*
*Scarborough, ON M1P 5C8*
*Tel: 416 - 987 - 3167*
*647 - 866 - 3167*
*e - mail: Mannvaasam@yahoo.ca*

# பெண்கள் மணிமுடிகள்

எழிலரசன்

## வலன்டினா தெரஸ்கோவா



விண்வெளியில் பறந்த முதல் பெண்மணி என்று புகழ் பெற்ற வலன்டினா தெரஸ்கோவா. 1937ல் ரஷ்சியாவில் உள்ள கிராமம் ஒன்றில் பிறந்தார். இவருடைய தந்தை டிராக்டர் டிரைவர்.

வலன்டினா குழந்தை யாக இருந்த போது, உலகப் போரில் அவருடைய தந்தை பலியானார். இதனால் வலன்டி னாவும் அவருடைய தாயாரும் மில் ஒன்றில் வேலை பார்த்தனர் .வலன்டினா தனது 22 ஆவது வயதில் விமானத்தில் பறந்து சாகசங்கள் புரிவதில் பயிற்சி பெற்றார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் விமானத்தில் இருந்து பரசூட்டில் 126 முறை குதித்து சாதனை புரிந்தார்.

பின்னர் விண் வெளியில் பறப்பதற்கு பயிற்சி பெற்றார். 1963 யூன் 16ம் திகதி விண்வெளி ஓடத்தில் வலன்டினா புறப்பட்டுச் சென்று பூமியை வலம் வந்தார். 3 நாட்களில் 48 முறை பூமியைச் சுற்றினார். அவர் பறந்த மொத்த தூரம் 12 லட்சத்து 25 ஆயிரம் மைல்.

வலன்டினாவின் சாதனை யைப் பாராட்டி ரஷிய அரசாங்கம் பல பரிசுகளையும் விருதுகளை யும் வழங்கியது.

1963ல் ஆன்டிரிங்திகே சாலோவ் என்ற விண்வெளி வீரரை வலன்டினா மணந்தார். அடுத்த ஆண்டில் இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது அந்தக் குழந்தையின் பெயர் எலேனா.

வலன்டினா மீண்டும் விண் வெளிப்பயணம் மேற் கொள்ளவில்லை. அரசாங்கம் அமைத்த பல்வேறு கமிட்டி களிலும் அமைப்புக்களிலும் உயர் பொறுப்புக்களை அவர் வகித்தார்.

# புகழ் பெற்ற மன்னர்கள்

சேர, சோழ, பாண்டிய மன்னர்களில் பலர் வீர, தீரச் செயல்களாலும் உயரிய பண்புகளாலும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் சிலரை இங்கு காண்போம்.

## சேரர்

300 க்கும் மேற்பட்ட சேர மன்னர்களின் பெயர்கள் சங்க இலக்கியங்களில் காணப் படுகின்றன. ஆனால் அவர்கள் வாழ்ந்த காலம் பற்றியும், வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் திட்டவட்டமாக அறிய முடியவில்லை.

உதியஞ்சேரல் என்ற சேரமன்னன், பாரதப் போரில் கலந்து கொண்டு கவுரவப் படையினருக்கு உணவு அளித்தார். அதனால் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்று அவர் அழைக்கப்பட்டார்.

## நெடுஞ்சேரலாதன்

உதியஞ்சேரலாதனின் மகன் நெடுஞ்சேரலாதன். "இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன்" குடவர்கோமான் நெடுஞ்சேரலாதன் என்றும் அழைக்கப்பட்டார்.

இவர் இமயம் வரையில் படையெடுத்துச் சென்று, இமயத்தில் தன் கொடியைப் பொறித்ததால் இமயவரம்பன் என்னும் அடைமொழியைப் பெற்றார்.

இவர் காலத்தில் தமிழகம் முழுமையும் இவருடைய ஆட்சியின் கீழ் இருந்தது. போரில் யவன அரசனைத் தோற்கடித்து கையைப் பின் கட்டாகக் கட்டி இழுத்து வந்தார் என்று வரலாறு கூறுகிறது.

மாற்று அரசர்களிடம் இருந்து விலை உயர்ந்த ஆபரணங்களையும், வைரங்களையும் திறையாகப் பெற்று தன் நாட்டினருக்கு வழங்கினார்.

இவருக்கும், தற்சோனைக்கும் பிறந்தவர்கள் சேரன், செங்குட்டுவனும், இளங்கோ வடிகளும் ஆவார்கள்.

## சேரன் செங்குட்டுவன்

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை செய்வதற்காக இமயமலையிலிருந்து கல் எடுத்து வருவதற்காக வட நாடு சென்றார். இவருடைய படைத் தளபதியின் பெயர் வில்லவன் கோதை.

கங்கைக் கரையை அடைந்த செங்குட்டுவனை கனக விஜயர் தலைமையில் வட நாட்டு அரசர்கள் எதிர்த்துத் தாக்கினர்.

இரு தரப்பினருக்கும் இடையே கடும் போர் நிகழ்ந்தது.

போர் நிகழ்ந்த நேரம் மொத்தத்தில் 18 நாழிகைதான் (அதாவது 7 மணிநேரம் ) போரில் செங்குட்டுவன் வெற்றி பெற்றார். கனக-விஜயர் சிறைபிடிக்கப் பட்டனர். மற்றும் 52 பேர்களும் கைதாயினர். போரில் தோற்ற ஏனைய அரசர்கள் துறவிக் கோலம் பூண்டு தப்பி ஓடினர்.

இமயமலையில் கண்ணகிக்கு கல் எடுத்தார் செங்குட்டுவன். அதைக் கனகவிஜயர் தலையில் சுமந்து எடுத்து வந்தனர். கங்கையில் அக்கல் நீராட்டப்பட்டது.

தமிழகம் திரும்பிய செங்குட்டுவன் அறவேள்வி ஒன்று நடத்தினார் அப்போது தன்நாட்டுச் சிறையில் இருந்த கைதிகளை எல்லாம் விடுதலை செய்தார். கனக-விஜயரும் விடுதலை செய்யப்பட்டனர். அதன் பின் அவர்களைத் தன் விருந்தினராக நடத்தினார் செங்குட்டுவன்.

கண்ணகிக்கு கோவில் கட்டி வழிபாடு செய்தார். அந்த விழாவில் தமிழ்நாட்டு அரசர்களுடன் பிறநாட்டு அரசர்களும் கலந்து கொண்டனர். விடுதலை அடைந்த கனகவிஜயரும் கலந்து கொண்டனர்.

செங்குட்டுவன் வட நாட்டில் போர் புரிந்த காலம் 32 மாதங்களாகும்.

## சோழர்

சோழ மன்னர்களில் முக்கிய மானவர் கரிகாலன் (கி.பி 190) குழந்தையாக இருந்த போது நெருப்புச் சுட்டுக் கறுப்பாகியதால் "கரிகாலன்" என்ற பெயர் வந்தது. இவருடன் நடந்த போரில் பாண்டியனும், சேரனும் தோல்வி அடைந்தனர்.

சேரனின் முதுகில் காயம் ஏற்பட்டதால் அவன் வடக்கிருந்து உயிர் துறந்தான்.

வடக்கு நோக்கி அமர் ந்து உணவு உண்ணாமல் இருந்து உயிா் நீப்பது வடக் கிருத்தல் எனப்படும்.

ஒன்பது சிற்றரசர்களும் கரிகாலனுடன் போரிட்டுத் தோற்றனர்.

கரிகாலன் இலங்கை மீது படையெடுத்து 12 ஆயிரம் சிங்களரைச் சிறைப்பிடித்து வந்தார். காவிரியின் கரையை உயர்த்தவும், கல்லணையைக் கட்டவும் இந்தச் சிங்களர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

## பாண்டியர்

காலத்தால் முற்பட்ட பாண்டியர்களில் வடிவம்பல நின்ற பாண்டியன் நீண்ட காலம் ஆட்சி நடத்தினான்.

இவர் வழியில் வந்த மற்றுமொரு புகழ்பெற்ற மன்னர்

முதுகுடுமிப்பெருவழுதி யாகங்கள் பல புரிந்தவர். இவரை வேள்விக் குடிச்செப்பேடுகள் வெகுவாகப் போற்றுகின்றன.

**பாண்டியன் நெடுஞ் செழியன்**

அடுத்து ஆட்சிக்கு வந்த சிறந்த மன்னர். இவர் சோழ, சேர மன்னர்களையும், ஐந்து வேளிர்களையும் போரில் தோற்கடித்தார்

இவர் ஆரியப்படையை வென்றதால் "ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்" என்று வரலாற்றில் குறிப்பிடப்படுகிறார். நிரபராதியான கோவலனைக் கொன்று பிறகு கண்ணகியால் உண்மையறிந்து உயிர் துறந்தவர் இவர்தான்.

மூவேந்தர்களின் கீழே குறுநில மன்னர்கள் ஆட்சி நடத்தினர். இவர்கள் "வேளிர்" என்று அழைக்கப்பட்டனர். பாரி, காரி, ஓரி, அதியமான் ஆகியோர் இத்தகைய வேளிர்களே.

## இருண்ட காலம்

கி.பி மூன்றாம் நூற்றா ண்டில் தமிழ் நாட்டில் பஞ்சம் நிலவியது. இந்தப்பஞ்சம் 12 ஆண்டு காலம் நீடித்தது. இதனால் சங்கம் முடிவுக்கு வந்தது.

இக்காலத்தில் "களப்பிர்" என்ற அயல் நாட்டவர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து தமிழகத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். களப்பிரர்கள் யார், எங்கிருந்து வந்தவர்கள் என்று தெரியவில்லை. இவர்கள் அயல் மொழி பேசினார்கள். இவர்கள் காலத்தில் தமிழகத்தில் கொலைகளும், கொள்ளைகளும் மிகுந்திருந்தன.

சுமார் 300 ஆண்டு காலம் களப்பிரர் ஆட்சி நடத்தினர். இவர்கள் ஆண்ட காலத்தை தமிழ்நாட்டின் 'இருண்டகாலம்' என்று கூறலாம்.

"தீமையிலும் நன்மை உண்டு" என்பது போல் இவர்கள் காலத்தில் தமிழுக்கு ஒரு நன்மை ஏற்பட்டது. களப்பி ரர்கள் தமிழுக்கு முக்கியம் கொடுக்காமல் பிராகிருதம், பாலி ஆகிய மொழிகளை வளர்க்க முயன்றனர். இவர்கள் முதலில் புத்த மதத்தில் இருந்து பின்னர் சமண மதத் திற்கு மாறினார்கள். சமணர்கள் தமிழ்நாட்டில் சமண சமயத்தை வளர்க்க தமிழில் போதனை நடத்தவேண்டியிருந்தது.

சமணக்கொள்கைகளை வளர்ப்பதற்காக மதுரையில் வச்சிரத்தி என்ற சமணத் துறவி 'திரமின சங்கம்' (திராவிடச் சங்கம்) என்ற அமைப்பை கி.பி 470ல் நிறுவினார். சமணக் கொள்கைகளை வளர்க்கும்

நூல்களை எழுதுவது இந்த அமைப்பின் நோக்கம் எனினும் சமணத்தைப் பரப்ப அவர்கள் தமிழ் நூல்களை எழுத வேண்டியதாயிற்று இக்கால கட்டத்தில் தான் சிலப் பதிகாரம். மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய ஐம்பெரும் காப்பியங்க ளும் மேலும் பல நூல்களும் உருவாக்கப்பட்டன.

கி.பி 575ல் களப்பிரரிட மிருந்து ஆட்சியை சிம்மவிஷ்ணு மீட்டார். பின்னர் கி.பி 710ம் ஆண்டு வரை பல்லவர்கள் ஆண்டனர். இவர்களில் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இராஜசிம்மன், இரண்டாம் பரமேசுவரவரமன் ஆகியோர் முக்கியமானவர்கள்.

--முற்றும்--

---

ஒரு கைதி: நீ ஏன் ஜெயிலுக்கு வந்தே?

மற்ற கைதி: மனைவியை ஏசினேன் 911 என்னை உள்ளேபோட்டுட்டான்.

நீ ஏன் உள்ள வந்தே?

நான் பெத்த பிள்ளையைக் கண்டிச்சன் 911 உள்ளேபோட்டிருச்சு

---

ஒருவர்: கனடா வந்து எத்தனை வருஷம்

மற்றவர்: இருபதுவருடமாகிறது

ஒருவர்: நல்லா உழைச்சன் – இப்ப கஷ்டப்படுகிறன்

மற்றவர்: ஏன் அப்படி?

ஒருவர்: ஒருஅக்கா, இரண்டு தம்பி, ஒரு தங்கை எல்லாரையும் லோன் எடுத்துக் கூப்பிட்டு, இப்ப எனக்கு கல்யாணமும்இல்லை. எல்லாரும் கை விட்டிட்டினம்.

---

உலகில் இரண்டு பெரிய விருதுகளான நோபல் பரிசையும் ஆஸ்கார் விருதையும் பெற்ற ஒரே மனிதர், ஜார்ஜ் பெர்னாட்ஷா. இவர் 1925 ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசையும்,1938 ஆம் ஆண்டு சிறந்த தழுவல் திரைக்கதைக்கான ஆஸ்கார் விருதையும் பெற்றார்.




# பழங்கால சாம்ராஜ்யங்கள்

நதிதீரங்களில் நிம்மதி யாக வாழ்ந்துகொண்டிருந்தவர்களுக்குள் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டன. ஒரு இனத்திற்கும் இன்னொரு இனத்திற்கும் ஒரு கூட்டத்திற்கும் மற்றொரு கூட்டத்திற்குமிடையே சண்டைகள் நடந்தன.

அக்காலத்தில் அரசனோ சட்டங்களோ இல்லை. எனவே தங்களைப்பாதுகாத்துக் கொள்ள ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு கூட்டமும் தங்களுக்கு ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்க வேண்டியநிலை ஏற்பட்டது. அவனுக்கு விருப்பமான பொருட்களை காணிக்கையாகச் செலுத்தினர். அவன் அவர்களைப் பாதுகாத்தான்.

இப்படித் தலைவர்களா கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களிடம் கட்டுப்பாட்டை வளர்க்கச் சில வழிமுறைகளை சட்டதிட்டங்களை வகுத்தனர்.

இனங்கள் இடையேயும், குழுக்கள் இடையேயும் போர்கள் நடந்தன. அதில் வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்களின் பகுதிகளை தங்களுடன் இணைத்துக்கொண்டனர்.வெற்றி பெற்றவர்கள் மன்னர்கள் ஆனார்கள். இவ்வாறாக உலகில் பல்வேறு பகுதிகளில் பல சாம்ராஜ்யங்கள் உருவாயின.

## எகிப்தியப் பேரரசு

வரலாற்றிலேயே முதன் முதலாக காணப்படும் சாம்ராஜ்யம் எகிப்திய பேரரசு ஆகும்.

நைல் நதி தீரத்தில் குடியேறிய எகிப்தியர்கள், உலக நாகரிகத்துக்கு முன்னோடிகளாக விளங்கினர். எனவே அங்கு தான் ஒரு சாம்ராஜ்யம் உருவாகி மன்னர் ஆட்சி தொடங்கியது. மெனிஸ் மன்னர் எகிப்து பேரரசை நிறுவினார் மெம்பிஸ் அவரது தலைநகரமாகும்.

அவருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் "பிரமிடு வம்சத்தினர்" என்று அழைக்கப் படுகின்றனர். கி.மு. 2900 முதல் 2750 வரை

பிரமிடுகளைக் கட்டியவர்கள் இவர்கள் தான்.

கி. மு 2160 ல், எகிப்திய சாம்ராஜ்யம் விரிவுபடுத்தப்பட்டது. மூன்றாம் அமினடெப் என்ற அரசரின் காலத்தில் நைல் நதியின் குறுக்கே அணை கட்டப்பட்டது.

இக்காலத்தில் சமட்டிக் இனத்தைச் சேர்ந்த 'ஹைகசோஸ்'' என்று அழைக்கப்பட்ட அரேபியர்கள் எகிப்து மீது படைஎடுத்தனர்.

இவர்கள் முரட்டுக் குணம் படைத்த நாடோடிகள். இவர்களுடைய தாக்குதலை எகிப்தியர்களால் சமாளிக்க முடியவில்லை. அவர்கள் சுமார்500ஆண்டுகள் எகிப்தியர்களை அடக்கி ஆண்டார்கள்.

அடிமைகள் போல் வாழ்ந்த எகிப்தியர்கள், தீப்ஸ் மன்னன் ஆமோஸ் தலைமை யில் பொங்கிஎழுந்து அரேபியர் களை விரட்டிஅடித்து மீண்டும் எக்ப்திய பேரரசை அமைத் தார்கள்.

அதன்பின் ஆட்சி நடத்திய எகிப்திய அரசர்களில் கி.மு 1375 முதல் 1358 வரை அரசாண்ட அக்னாட்டன் முக்கியமானவர். அவர் அக்காலத்தில் வல்லமை யோடு விளங்கிய பூசாரிகளை விரட்டிஅடித்தார். பல கோவில்களை மூடினார். சூரியன் தான் கடவுள் சூரியனைத் தவிர வேறு எந்தக் கடவுளையும் வணங்கக் கூடாது. என்று கட்டளையிட்டார்.

அமைதி, நேர்மை, எளிமை, விசுவாசம் முதலிய பண்புகளை அவர் வலியுறுத்தினார். அறநெறிகளைக் கடைப் பிடித்த முதலாவது அரசர் என்று இவரைக் குறிப்பிடலாம்.

பின்னர் எகிப்தை பல மன்னர்கள் ஆண்டனர். அசிரியர், பாரசீகர். கிரேக்கர், ரோமானியர் படையெடுப்பால் எகிப்தின் பலம் குறைந்தது. கி.மு 525 ல் எகிப்தை பாரசீகாகள் கைப்பற்றினர். இதற்கு 200 ஆண்டுகளுக்கு பின்னர் எகிப்தை மகா அலெக்சாண்டர் கைப்பற்றினார். அத்துடன் எகிப்திய பேரரசு முடிவுற்றது.

## மெசப்பொட்டோமிய நாகரிகங்கள்

இன்றைய ஈராக் நாட்டின் பழங்காலப் பெயர் மெசப்பொட்டோமியோ "இரண்டு ஆறுகளுக்கிடையே உள்ள நாடு" என்பது இதன் பொருள். யூப்பிரட்டிஸ், டைக்கிரீஸ் ஆகிய நதிகள் இங்கே பாய்கின்றன. கடலில் கலப்பதற்கு முன் இந்த இரு நதிகளும் ஒன்று சேர்கின்றன. இந்த ஆறுகளின் இடைப்பட்ட சமவெளி மிகவும் செழிப்பானது.

இங்கு சுமேரிய, பாபிலேனிய, அசிரிய நாகரிகங்கள் தோன்றின. இப்பகுதியில் தான் ஆதி மனிதன் தோன்றினான். என்று சில ஆராட்சியாளர்கள் கருது கிறார்கள். மெசப்பொட்டொமி யாவின் வடகிழக்குப் பகுதியில் இருந்து வந்து அங்கு குடியேறியவர்கள் சுமேரியர்கள். இவர்கள் மலை ஜாதிமக்கள். சதுப்பு நிலங்களைச் சமன் செய்து, கால்வாய்கள் வெட்டி, விவசாயம் செய்ததனர். நகரங்கள் ஏற்படுத்தினர். இவர்கள் காலத்தில் சிற்றரசுகள் ஏற்பட்டன.

அக்கால மக்கள் சகுனம் பார்த்தல், குறி சொல் சொல்லுதல் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனா இவர்களிடம் விஞ்ஞான முன்னேற்றம் காணப்பட்டது.12 மணி நேரம் பகல். 12 மணி நேரம் இரவு என்றும் 12 மாதங்களைக் கொண்டது ஒரு ஆண்டு என்றும் கணக்கிட்டனர். சூரிய சந்திர கிரகணங்கள் பற்றியும் இவர்கள் ஆராய்துள்ளனர். மக்கள் வாழ்க் கையை கிரகங்கள் பாதிப்பதாக இவர்கள் நம்பினார்கள்.

சக்கரங்களைக் கண்டு பிடித்தவர்கள் இவர்கள்தான். சக்கரங்கள் மாட்டிய தேர்களை இவர்கள் பயன்படுத்தினார்கள். வெண்கலத்தைக் கண்டு பிடித்த வர்கள் இவர்களே.



ரோமாபுரியில் 2000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்த 2 இலட்சம் பேர் உட்காரக்கூடிய ஓர் விளையாட்டரங்கு

சுமேரியாவில், கி.மு 2700ம் ஆண்டில் நூலகங்கள் இருந்த தற்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஒரு நூலகத்தில் 30 ஆயிரம் மண் பலகைகள் கண்டு பிடிக்கப்பட் டுள்ளன. அவற்றில் கவிதைகள், நாட்டுப்புற பாடல்கள், புராணங்கள் முதலியவை எழுதப்பட்டுள்ளன. வலமிருந்து இடமாகவும் பின் இடமிருந்து வலமாகவும் எழுதியுள்ளனர்.

## பாபிலோனியா

மெசப்பொட்டோமியா நாகரிகங்களில் தொன்மையானது. பாபிலோனிய நாகரிகமாகும். சுமேரியர்கள் சிறு சிறு அரசுகளைத்தான் அமைத்திருந் தனர். அதனால் வெளியார் படை யெடுத்து வந்தபோது அவர்களால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லை.

கி. மு 2900 ம் ஆண்டில் செமட்டிக் இனத்தவர் படை

யெடுத்து வந்து சுமேரியர்களைத் தாக்கி அழித்தனர். வெற்றி பெற்ற செமடிக் இனத்தவர். பாபிலோன் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டனர்.

பாபிலோனியாவை ஆண்ட அரசர்களில் முக்கியமானவர் ஹமுராபி (கி.மு1943-1905) இவர் காலத்தில் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. வழக்குகள் விசாரிக்கப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டன. மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டன. பள்ளிகளில் வானியல், மருத்துவம் அகியவை கற்பிக்கப்பட்டன.

சிறப்புமிக்க மன்னரான ஹமுராபிக்குக் பிறகு பாபிலோனிய ஆட்சி வீழ்ச்சி யடையத் தொடங்கியது. மொசபொட்டோமிய நாகரிகங்களில் ஒன்று அசிரிய நாகரிகம்.

கி.மு 3500 ல் டைகிரிஸ் நதி தீரத்தில் நிலைகொண்டிருந் ந்த அசிரியர்கள் பாபிலோனியர் களால் அடக்கி வைக்கப் பட்டிருந்தனர். பாபிலோனியர்கள் பலம் இழந்த பின் ஆட்சியை அசிரியர்கள் கைப்பற்றிக் கொண்டனர். சிரியா, பாபிலோன், டமாஸ்கஸ், கமேரியா ஆகிய பகுதிகளில் அவர்கள் ஆட்சி நடத்தினர்.



**பிரமிடுகள்**

பாபிலோனுக்கு 200 மைல் வடக்கே டைகிரிஸ் நதிக் கரையில் உள்ள அசுர் இவர்களுடைய தலைநகரம்.

இவர்கள் ஆட்சியின் போது காலாற்படை, தேர்ப்படை ஆகியவை இருந்தன. இரும்பால் செய்யப்பட்ட ஆயுதங்களும். தேர்களும் கோட்டைகளைத் தகர்க்கும் வண்டிகளும் இவர் கள் படையில் இருந்தன.

இவர்கள் காலத்தில் அழகான பெரிய கட்டிடங்கள் கட்டப்பட்டன.

## கிரேக்க நாகரிகம்

ஐரோப்பாவில் மத்திய தரை கடல் பகுதிக்குள் ஊடுருவி பரவியுள்ள பாறை தீபகற்பமும் தீவுகளும் கிரேக்கம் ஆகும்.

அந்த நாட்டு மக்களை கிரேக்கர்கள் என்றும் ஹெல்லர்

கள் என்றும் அழைப்பார்கள். இவர்கள் மத்திய தெற்கு கிழக்கு ஐரோப்பியாவிலிருந்து வந்து குடியேறிறவர்கள்.

கிரேக்க நாட்டின் பெரும் கவிஞர் ஹோமர் எழுதிய "ஒடிசி" "இலியட்" ஆகிய காவியங்கள் மூலம் அக்காலக் கிரேக்கர்கள் பற்றி அறிய முடிகிறது. அவர்கள் முரட்டுக் கூட்டத்தினர். விவசாயம் செய்ய முடியாததால் கடலில் செல்லும் கூட்டமாக மாறினர். இவர்கள் பல்வேறு இனத்தை சேர்ந்தவர்கள் ஆயினும் பொதுவான மதம் கடவுள் வழிபாடு மொழிப்பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தனர்.

மலைகள் சூழ்ந்த சமவெளிப் பகுதிகளில் குடியேறிய கிரேக்கர்கள் நாளடைவில் மாளிகைகள் கட்டினர். பாதுகாவலாக அரண்கள் அமைத்தனர்.

அரம்பத்தில் 150 நகர அரசுகள் உருவாககின. சிற்றரசர்களிடையே ஒற்றுமை இல்லை. ஒருவருக்கொருவர் போட்டியும் பொறாமையும் கொண்டனர். போர்களில் ஈடுபட்டனர். மற்ரவர்களை வெற்றி கொள்வதில் பெருமை கொண்டனர்.

கிரேக்கத்தின் ஒவ் வொரு பகுதிகளிலும் மன்னராட்சி பிரபுக்கள் ஆட்சி சர்வாதிகார ஆட்சி என்று வெவ்வேறான ஆட்சிகள் நடந்தன.

கிரேக்கத்தின் புகழ் பெற்ற எதென்ஸ் நகரில் தொடக்க காலத்தில் மன்னராட்சியே நடந்தது. நாளடைவில் அதிகாரம் பிரபுக்கள் வசம் சென்றது. ஆட்சியில்எராளமான வரிகள் விதிக்கப்பட்டு கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டன. பல்வேறு ஆட்சிமுறை களுக்கு கிரேக்கம் தான் அடித்தளம் அமைத்தது என்று கூறலாம்.

ஒற்றுமையின்மையாலும் பெரும் போர்களால் நாட்டின் செல்வம் விரையம் ஆனதாலும் கிரேக்கத்தின் நகர அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக மறைந்தன.

கிரேக்க வரலாற்றில் பொற்காலம் படைத்தவர் பெரிக்கிளிஸ். இவர் சிறந்த மேதை. பேச்சாளர். அரசியல் வாதி. தளபதியாக இருந்து நிர்வாக சபையின் தலைவர் ஆனார்.

---

உலகில் நிக்கல் உலோகம் பெருமளவு கிடைக்கும் நாடு கனடா.

உலகின் சக்கரைக் கிண்ணம் என்று அழைக்கப்படும் நாடு கியூபா.




என எண்ணுகிறேன் என்றான் இளைய இராவணன். அவன் பேசிக் கொண்டு போவதைக் கேட்ட மரகதவல்லி விருட்டென எழுந்து கொண்டாள். அவளின் முகத்தில் பொய்க்கோபத்தின் அறிகுறி இருந்தது. இதை உணர்ந்த இளைய இராவணன் மெதுவாக வட்டப் பாறையில் இருந்து எழுந்து மரகத வல்லியின் மென் கரத்தைப் பற்றினான்.இதை விரும்பிய வளான மரகதவல்லி உங்கள் இலட்சியத்தில் என் பங்கு எவ்வளவு என்பதை கூறாமல் புதிர் போடுகிறீர்களே! என்றாள். அப்போது எங்கிருந்தோ வந்த குத்துவாள் மரகதவல்லியின் இடது புயத்தை பதம் பார்த்தது. மின் வெட்டும் நேரத்தில் நடந்து விட்ட இந்த சம்பவத்தால் இளைய இராவணனும் மரகத வல்லியும் தடுமாறி விட்டார்கள். சடாரென மரகதவல்லியை பாறை மறைவுக்கு இழுத்த இளைய இராவணன் தனது மேலங்கியில் ஒரு பகுதியைக் கிழித்து எடுத்து உப்பு நீரில் நனைத்து எடுத்து குத்து வாளை அகற்றிக் கட்டுப் போட்டான். சற்று ஆழமாக குத்துவாள் அவளின் தோட்பட்டையில் ஏறியிருந்தது. இளைய இராவணனின் வைத்தியம் அவளின் காய வேதனையை முற்றாக குறைத்து விட்டது. இருந்தும் அவனின் தொடையில் சாய்ந்து கொண்டாள். இளைய இராவணனின் மனம் எங்கோ ஒடியது.

சிவனடியாரின் கரும் புரவி தெற்குத் திசையில் புழுதியைக் கிளப்பியபடி பாய்ந்து கொண்டது. அவரின் மனம் கடந்த காலத்தை நோக்கி ஒடிக் கொண்டிருந்தது. மாந்தை நகரம் வழமை போல் கலகலப்பாக இருந்தபோது மாந்தை வாஞ்சி நாதன் தன் பட்டத்தரசி குவேனந்தியுடன் நிர்வாகத்தை திறம்பட நடத்தி வந்த நேரத்தில் வடபகுதி யாழ்நகர் நாகதேவன்

ஆட்சியிலும், தம்பலம் கதிர் காமம் வரை கோணேசவர்மன் ஆட்சியிலும் கொடி கட்டிப் பறந்த காலமாக இருந்தது. மூவேந்தர் களும் முரண்பாடான கருத்துக் களை மனதில் தீவிரமாக வளர்த்துக் கொண்ட காலமது. மனதளவில் குரோதங்களை வளர்த்து முன்னோர்களான இராவணனின் ஒரு குடைக்கீழ் இருந்த ஆட்சியை உடைத்து பலம் இழந்த மூன்று இராட்சியங் களைக் கட்டியெ ழுப்பிப் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து குரோதத்தை மென் மேலும் வளர்த்தனரே அன்றி ஒன்றிணைந்து வாழ முற்பட வில்லை. ஆனால் வடபகுதி நாக தேவனின் மகளைத் தம்பலத்து இளவரசன் கோணேசவர்மன் காந்தரூப விவாகம் செய்தமை யால் நாகதேவனின் ஆட்சியும் தம்பலத்து ஆட்சியும் மனப்பூர் வமாக ஒன்றாக இணைந்து கொண்டன. வடபகுதி நாக தேவனும், தம்பலத்து கோணேச வர்மனும் இணைந்தது மாந்தை மன்னன் வாஞ்சிநாதனுக்குப் பயத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது. பெரும்பகுதி நிலப்பரப்பாலும், மக்கள் தொகையாலும் பலத்துடன் விளங்கியது வட கிழக்கு ஆட்சி. இராவணனைப் பகைத்து ஆரியருடன் இணைந்தவன்தான் விபீஸணா். ஆரிய ஆதிக்கத்தால் ஈழப் பெரு நிலப்பரப்பு அழிக்கப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்டது. இராவணன் இறந்ததும், தம்பி விபீஸணன் ஆட்சி ஏற்பதை மக்கள் வெறுத்தனர். இதை உணர்ந்த விபீஸணர் மாந்தையை இராச தானியாக்கி ஆரியரின் மேற் பார்வையில் ஆட்சி செய்த போது வடக்கும் கிழக்கும் நாகராஜன் என்ற இராவணனின் வழித் தோன்றலில் சிறு அரசுகளாக வளரத்தொடங்கின. நாளடைவில் நாகதேவன் வடக்கிலும் கோணேசவர்மன் கிழக்கிலும் தங்கள் ஆட்சிகளை வலுப்படுத்தி இலங்கையர்க்கோன் இராவணனின் கனவை நனவாக்கி ஒரு திராவிட சாம்ராஜயத்தைக் கட்டியெழுப்பக் கங்கணம் கட்டினார்.

குதிரையின் ஓட்டத்துக்குச் சிவனடியாரின் மன ஓட்டம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது மாந்தை திராவிட இனம் காட்டிக் கொடுக்கும் கூட்டமாக வளர்ந் ததை எண்ணி வெட்கப்பட்டார். பல அப்பட்டமான எவ்வளவோ உண்மைகளைச் சிவனடியார் தன் நேரடி அனுபவத்தால் இப்போது உணருகின்றார்.

இருபது வருடங்களுக்கு முன்னர் மாந்தையில் நடந்த சம்பவங்கள் எல்லாம் சிவனடியா ருக்கு ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகம் வந்தன. மாந்தையின்

மன்னன் மாறவன் நோயின் காரணமாகப் படுக்கையில் வீழ்ந்தான். அவனுக்கு ஆண் வாரிசு இல்லை. இதனால் மாறவனின் ஒரு வாரிசான இளவரசி குவேனந்தி அரசுரிமையைப் பெற்றாள். மிடுக்கும் ஆண்களைப் போன்ற கம்பீரமும் கொண்டவள் தான் குவேனந்தி. பிடிவாதமும் அவசரபுத்தியும் உடையவளான குவேனந்தி மாந்தையின் அரசபொறுப்பை ஏற்றபோது ஆரியர்கள் வட இந்தியாவில் இருந்து வாழ்த்துக்களும் பரிசுப் பொருட்களும் அனுப்பியிருந்தார்கள். அந்த நேரத்தில் அரச படையில் முன்னணி வீரனாக இருந்த வாஞ்சிநாதன் என்ற இளைஞன் குவேநந்தியைக் காதலித்தான். குவேநந்தியும் வாஞசிநாதனை நன்றாக விரும்பினாள். ஆனால் வட இந்திய ஆரியர் வாஞ்சிநாதன் இளவரசி குவேநந்தியின் காதலை விரும்பாமல் அவளைத் திசை திருப்பி ஆரிய இளவரசனுக்கு மணம் முடிக்க திட்டம் தீட்டினர். ஆனால் வாஞ்சிநாதன் குவேநந்தியின் தொடர்பு, குவேநந்தியின் வயிற்றில் சிசுவை வளர வைத்தது. இதனால் குவேநந்தி, வாஞ்சிநாதன் திருமணம் மாந்தையில் நிறைவேறியது.

இந்த நேரத்தில் வடபகுதி நாகதேவனுக்கும், தம்பலம் கோணேசவர்மனுக்கும் மணவழியால் அரசுகள் இணைந்து இருந்தன. நாக தேவனின் மகள் காஞ்சனா தேவியைக் கோணேசவர்மன் காந்தருப விவாகம் செய்து கொண்டான். இந்த நேரத்தில் தான் குவேநந்தி மாறவன் இறக்க. மாந்தைக்கு இராணியானாள். கோணேசவர்மனின் தளபதியும், நண்பனுமாக இருந்தவன் தான் வாஞ்சிநாதன். நண்பர்கள் இருவரும் மாந்தை நிலவரம் பற்றி ஒரு இறுதித் தீர்மானத்துக்கு வந்தபோது கோணேசவர்மனிடம் விடைபெற்றுப் புரவியில் ஏறிய வாஞ்சிநாதன், மனதில் பெரியதொரு திட்டத்தைச் சுமந்தபடி மாந்தையை நோக்கி புயல் வேகத்தில் பாய்ந்தான்.

அன்று மாந்தை திருக்கேதீஸ்வர ஆலயம் சிவராத்திரி விழாக் கோலம் பூண்டு இருந்தது. மக்கள் எங்கும் குதூகலமாக இருந்தனர். இரவு நித்திரை விழிப்பு. பலவகை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இளைஞர்கள் தங்கள் வீரங்களைக் காட்டி மக்களை வியக்கவைக்கத் துடித்துக் கொண்டுநின்றனர். இளம் பெண்கள் தமக்கு பிடித்த வீரர்களுக்கு மாலையிட்டுக் கணவர்களாக ஆக்கும் ஆவலில் பருவத்துடிப்போடு நின்றனர். மறவ இளைஞர்கள்

தங்கள் வீரப்பிரதாபங்களைப் பிரதி பலித்து மக்கள் மத்தியிலும், பெண்கள் மத்தியிலும் பாரட்டுப் பெறுவதில் முன்னின்றனர்.

அன்று அமாவாசை. நேரத்தோடு இருள் பரவிக் கொண்டிருந்தது. திருக்கேதீஸ்வரத்தில் தீவட்டிப் பந்தங்கள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. எங்குபார்த் தாலும் ஒரே கோலாகலமாக இருந்தது. மக்களின் குதூ கலமும், வீர நிகழ்ச்சியைப் பார்க்கப்போகும் ஆவலும் ஒவ்வொருவர் மனதிலும் பொங்கி வழிவதை அவர்களின் முக பாவங்களிலும், கண்களின் புத்தொழிகளிலும் காணக் கூடியதாக இருந்தது. வீரப்பிரதாபங்களை வழங்கும் அரங்கு பலமுள்ள முள் வேலியால் தடுக்கப் பட்டிருந்தது. இடம்பிடிப்பதற்காக மக்கள் ஆண்களும் பெண்களுமாக, மைதானத்தைச் சுற்றி தரையில் வீற்றிருந்தார்கள். குதிரைகள் கனைக்கும் சத்தங்களும், காளைமாடுகள் திமிறும் சத்தங்களும் கேட்டன. இந்தக் கண்கொள்ளாக் காட்சியைத் தூரத்தே நின்ற வாஞ்சிநாதன் என்ற இளைஞன் புன்முறுவல் பூத்தபடி இரசித்துக் கொண்டிருந்தான். தூரத்தே பல்லக்கில் மாந்தை இளவரசி வந்து கொண்டிருந்தாள். பல்லக்கின் மூடு திரையை விலக்கியபடி மக்களைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கைகளை அசைத்த மாந்தை இளவரசி குவேனந்தி, உப்பரிகை போல் கட்டப்பட்ட இடத்தில் தன் தோழிகளுடன் உட்கார்ந்தாள்.

## அங்கம் - 8

ஒவ்வொரு நிகழ்ச்சியாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பமாக. வெள்ளைக் காளைகள் மைதானத்திற்குள் நுழைந்தன. இளைஞர்கள் மைதானத்திற்குள் பாய்ந்து காளைகளை மடக்கி அடிபணிய வைக்க முயன்று கொண்டிருந்தனர். காளை மாடுகள் திமிறியடித்து இளைஞர்களை விரட்டியடிக்கும் நோக்கோடு சத்தமிட்டபடி புழுதியைக் காலால் வாரி இறைத்தும், தம் கூரிய கொம்பை நிலத்தில் குத்தியும் அட்டகாசம் செய்தன. இளைஞர்களும் விட்டபாடில்லை. உடலில் பட்ட தழும்புகளில் இரத்தம் கசிவதைக் கூட பரவாய் பண்ணாமல் காளைகளுடன் போராடினார்கள். இளம் பெண்களின் குதூகலம் இளைஞர்களை உற்சாகப்படுத்தியதிலும் பார்க்க இளைஞர்களின் வீரச் செயல்கள் இளம் பெண்களை குதூகலம் அடையச் செய்தன எனலாம்.

இந்த வீரச் செயல்களை வட இந்திய ஆரியர்களும் பார்த்துக் கொண்டிருந்தனர். இலங்கைத் தீவின் வடபகுதியும், கிழக்குப் பகுதியும் திராவிட இனத்தவரின் கையில் பலமாக இருப்பதை வட இந்திய ஆரியர்கள் உணர்ந்தார்கள்.

மாந்தை மட்டும் ஆரியர்கள்களுடன் நட்புறவு கொண்டிருப்பதையும், ஏனைய இரண்டு இராச்சியங்களும் தமக்கு எதிராளிகள் என்பதையும் உணர்ந்தனர். இலங்கையர்கோன் இராவணன் அழிக்கப்பட்டு, அவன் தம்பி விபீஸணன் காலத்தில் இருந்து ஆரிய கலாச்சாரத்தைப் புகுத்திய இவர்கள் மாந்தையை இப்போது தமது கைப்பொம்மையாக வைத்திருந்தனர். இதற்கு மாந்தை இராசதானியும் ஆரியருக்குத் துணை போவதாக அமைந்தது.

வயதில் முதிர்ந்தவரானாலும், துணிவும், நிதானமும் கொண்டவரான நாகதேவன். திராவிட முன்னைய நாயகன் இராவணனின் நேரடித் வழித்தோன்றலாவார்.

ஆரியர்களின் அழிவுக்கு இலக்கான இலங்காபுரியை மீண்டும் கட்டியெழுப்பி புத்துயிர் கொடுக்கவே நாகதேவன் முயன்று கொண்டிருந்தார். இதற்கு வீரம் மட்டுமல்ல சாணக்கியமும் தேவைப்பட்டது. அரசியல் சதுரங்கக் காய்களை நிதானமாக நகர்த்தும் போது அதில் ஏற்படக்கூடிய இலாப நட்டங்களைக் கணக்கில் போட்ட நாகதேவன் இலங்கையின் பல பாகங்களிலும் தன் ஒற்றர்களை ஒருவருக்கு ஒருவர் தெரியாமல் ஊடுருவ விட்டிருந்தார் என்றால் நாகதேவனின் சாணக்கியத்தை என்னவென்று சொல்வது!

மாந்தை இளைஞர்களின் வீரச் செயல்களைக் கவனித்துக் கொண்டு வந்த ஆரிய இளைஞா களுக்குப் பொறுமை இளந்தது போல் இருந்தது. தாமும வீர சாகசம் செய்ய எண்ணிய படி இருந்தனர். அனால் களத்தில் இறங்கவில்லை. அதற்கு காரணம் இருக்கத்தான் செய்தது. தங்கள் தலைவன் கட்டளையை அவர்களால் மீற முடியவில்லை. அத்தோடு அவர்கள் தலைவன் கட்டி விட்ட புனைக்கதைகள் மனதில் நீங்காத நினைவாக மிதந்து கொண்டு வந்தன. அந்த நினைவு ஆரிய இளைஞர்களை உள்ளூர பயம் கொள்ள வைத்தது.

தொடர்ச்சி அடுத்த இதழில்..........

# சமூகக் காப்புறுதி இலக்கம்


கனடாவில் தொழில் வாய்ப்புப் பெறுவதற்குச் சமூகக் காப்புறுதி இலக்கம் (SIN) தேவை. தொழில் செய்யும் நோக்கம் இல்லாவிடினும் இந்த இலக்கம் அவசியமானது. குடும்பமானியம் பெறுவதற்கோ, வங்கியில் கணக்கு ஆரம்பிப் பதற்கோ, அல்லது வேறெந்த சேவைகளைப் பெறு வதற்கும் இவ்விலக்கம் ஒரு பிரதான அடையாள அட்டை யாக உதவுகிறது.

உங்கள் சமூகக் காப்புறுதி இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, மிக அண் மையில் உள்ள கனடா வேலை வாய்ப்பு நிலையத்திற்குச் செல்லுங்கள். இவ் வேலை வாய்ப்பு நிலையங்களின் தொலைபேசி இலக்கங்கள் தொலைபேசிப் புத்தகத்தின் நீலப்பக்கங்களில் நிரற்படுத் தப்பட்டுள்ளன. "Government of Canada Employment & Immigration Canada, Employment Centre" என்ற தலைப்பின் கீழ் காணலாம். அங்கே செல்லும் போது உங்கள் கடவுச் சீட்டுடன் உங்கள் குடிவரவு நிலையைக் காட்டும் பத்திரங்களையும் எடுத்துச் செல்லுங்கள். இவற்றை விட இன்னுமொரு அடையாள அட்டை கொண்டு செல்லுங்கள். இந்த அட்டை ஆங்கில மொழியில் அல்லது பிரெஞ்சு மொழியில் இருந்தால் நல்லது. உங்கள் விண்ணப்பப் பத்தி ரத்தை நிரப்புவதற்கு அங்குள்ள உத்தியோகத்தர்கள் உதவி புரிவார்கள். உங்கள் சமூகக்காப்புறுதி இலக்கத்தைக் கொண்ட பிளாஸ்ரிக் அட்டை ஒன்று தபால் மூலம் அனுப்பப்படும். இதனைப் பெற்றுக்கொண்டதற்கு அடை யாளமாக நீங்கள் பாதுகாப்பாக வைப்பதற்கென ஒரு கடதாசி அட்டையும் அனுப்பப்படும். பிளாஸ்ரிக் அட்டையில் உடனே கையொப்பமிட்டுக் கடதாசி அட்டையை கவனமாக வைத் திருங்கள். பிளாஸ்ரிக் அட்டையை இழந்தால் அதே இலக்கத்துடன் இன்னொரு பிளாஸ்ரிக் அட்டையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இரண்டாவது அட்டையைப் பெறுவதற்குக் கட்டணம் செலுத்தவேண்டும். ஒன்றுக்குக் கூடுதலான இலக்கம் வைத்தி ருப்பது சட்டத்திற்கு விரோத மானது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

# Social Insurance Number

To work in Canada, you must have a social insurance number (SIN). Even if you are not planning to work, you should have one. A Sin is important identification when you apply for family allowance, open a bank account or use other services.

To get your Social Insurance Number, go to the nearest Canada Employment Centre. The Centres are listed in the blue pages of the telephone book under "Government of Canada, Employment and Immigration Canada, Employment Centres". Take your passport with you and the papers showing your immigrant status. Also take some other iden tification, preferably a document written in English or French. The people at the Centre will help you fill out the application form. By mail, you will receive a plastic card with your social insurance number on it and a paper card to keep as a record. Sign the plastic card immediately, and keep the paper card in a safe place. If you lose your plastic card, you will have to get a replacement card with the same number. There is a fee for getting a replacement card. Remember that it is illegal to have more than one social insurance number.


வீடு வாங்க விற்க....
இந்த மண்ணில் உங்களுக்கும் ஓர் இல்லம் அமைய
Dr. Nada. G. Nadarajah
B.V.Sc.
Sales Representative
HOMELIFE
HIGHER STANDARDS
அழையுங்கள்:
Res : (905) 472 - 8703
Bus : (416) 293 - 5093 (24hr Pager)
Fax : (416)293 - 5237
5200 Finch Ave.E, Suite 206
Scarborugh, ON M1S 4Z4


Cake & Party
Links
உங்கள் சகல வைபவங்களுக்கும் தேவையான கேக் வகைகளை
ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
அன்பளிப்புப் பொருட்கள் ,Rubbermaid products, stationary items & party items
Cake pans & Ornaments வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.
Electronics & Cosmetic Items
Cakes & Decoration Classes
ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நீங்களும் இணைந்து கொள்ளலாம்.
Get A Membership & Receive :
Access to rentals
5% off on all purchases
Receive monthly special offers
& promotions
LAWRENCE AVE.
McCowan Rd
MARKHAM RD.
EGLINTON AVE.
2807 EGLINTON AVENUE EAST, SCARBOROUGH
TEL : 416-269-5465
website: www.cakeparty.ca | email: info@cakeparty.ca

# KESAVAN LAW OFFICE



**Real Estate**
**Business Law**
**Immigration Law**
**Family Law**
**Last Wills**
**Power of Attorney**
**Affidavits**

சட்டம் சம்பந்தமான
சகல தேவைகளுக்கும்

## கேசவன் சட்ட நிறுவனம்

இலவச ஆரம்ப ஆலோசனை
மாலை, வார இறுதி நாட்களில் சந்திக்கலாம்

**THANGAVEL M. KESAVAN**
**Barrister & Solicitor**

**5200 Finch Ave.East, Unit 302**
**Scarborough, ON. M1S 4Z5**
**(Middlefield & Finch)**
TEL : (416) 754 - 9843
FAX : (416) 754 - 2362

www.kesavanlawoffice.com
www.lawyers.com/kesavanlaw

## Commercial Real Estate Specialist



**ROYAL LEPAGE**

Credit Valley Real Estate
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER

**Uthayan Nadarajah**
Broker

**Cel: (416) 727 - 9945**

**Bus: (905) 793-5000** **Fax: (905) 793-5020**

**250 Consumers Rd, Unit #703, Toronto, ON M2J 4V6**

**Unadarajah@trebnet.com**




புளிப்புச் சுவையுடைய கீரை இந்த சூப்பிற்கு மிகவும் உகந்தது. இந்தக் கீரையில் நல்ல உணவுச் சத்துக்கள் அடங்கியுள்ளது. இக்கீரையை இரண்டோ மூன்றோ காய் கறிகளுடன் சேர்த்து சூப் செய்தால் தான் நன்றாக இருக்கும். வாதநோய் போன்ற பல நோய்களுக்கு இந்த சூப் உகந்தது.

## தேவையான பொருட்கள்

புளிப்புத் தன்மையுள்ள கீரை கைப்பிடியளவு / கரட்இரண்டு / பீன்ஸ் பத்து கிராம் / தக்காளி (பெரியது) இரண்டு / வெங்காயம் (பெரியது) இரண்டு உள்ளீ இரண்டு பற்கள் / வெண்ணெய் ஒரு தேக்கரண்டி மிளகு சிறிதளவு / இஞ்சி சிறிய துண்டு / கோதுமை மா அல்லது சோளமா ஒரு மேசைக்கரண்டி / உப்பு தேவையான அளவு

கீரை, கரட், பீன்ஸ் ஆகியவற்றை சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். வெங்காயத்தையும் இஞ்சியையும் பொடியாக வெட்டிக் கொள்ளவும்.

அடுப்பில் பாத்திரத்தை வைத்து வெண்ணெயைப் போட்டு வெண்ணெய் உருகியதும் வெங்காயம் உள்ளி இரண்டையும், போட்டு வதக்கவும். இவற்றுடன் கீரை, கரட், பீன்ஸ் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாக அவியவிடவும். நன்றாக கரைந்து அவிந்த மரக்கறியை மிக்சியில் போட்டு அரைத்து எடுத்து மாவுடன் சேர்த்து இரண்டு லீட்டர் தண்ணீரில் கரைத்து நன்றாக கொதிக்கவிடவும். அடுப்பிலிருந்து இறக்கும் போது மிளகு, உப்புப்பொடியைச் சேர்த்துக்கொள்ளலாம். மேலும் சுவையூட்ட அவித்து நன்றாக அரைத்த துவரம்பருப்பு சிறிதளவு சேர்க்கலாம் இது நல்ல வாசனையைக் கொடுக்கும்.

# சாமி அப்பாத்துரை

தரணி எங்கும் தமிழ் வளர்க்கும் இப்பெரியவர் இன்று நேற்றல்ல. 1961ம் ஆண்டு நிகழ்ந்த சத்தியாக் கிரகத்தில் மாணவனாக இணைந்து கொண்டது முதல், இன்றுவரை தமிழையும், சைவ த்தையும் தன் இருகண்க ளெனக் கருதி, அவற்றின் வளர்ச்சிக்காகப் பெரும் பணி யாற்றி வருகின்றார்.

இளைஞர் பேரவையை அமைத்து. தமிழ்ப் பணியாற்றி. 'உரிமைக் குரல்' என்ற நூலை அக்காலத்தில் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திரு.திருச்செல்வம் மூலம் வெளியீடு செய்து வைத்தார்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்த போது விவாத மேடை பட்டிமன்றம் ஆகியவற்றில் முன்னணிப் பேச்சாளராகத் திகழ்ந்தார்.

இளமைக் காலத்தில் விக்ரோறியாக கல்லூரியில் கல்வி பயின்றபோது. தனது பதினேழாவது வயதிலேயே 'அறிஞர்' பட்டம் பெற்று தனக்கும், தன்னைப் பெற்ற வருக்கும் தன் இனத்திற்கும் பெரு மை சேர்த்தார். தன் நாவன் மையால், அமைச்சரிட மிருந்து இரண்டு தடவைகள் தங்கப் பதக்கம் பெற்றார்
.

சாமி அப்பாத்துரை அவர்கள் கிழக்கு ஆபிரிக்காவில் இருந்தபோது ஆபிரிக்கா நாடுகள் சபை ஒழுங்கு செய்த தென்னா பிரிக்காவைப் பற்றிய பேச்சு 5.30 மணி வரை நீடித்தது. ஆபிரிக்க மொழியில் பேசும் ஆற்றல் மிக்கவர். இவரது ஆக்கங்கள் சுதந்திரன் ஈழநாடு வீரகேசரி என்பவற்றை அலங்கரித்துள்ளன.

ஆபிரிக்க குறுநில மன்னர்கள் விழாவினை ஏற்பாடு செய்து 'ருக்கும்போ' என்னும் பட்டம் அளித்துக் கௌரவித் தார்கள். ஆபிரிக்க நாட்டில் ஏறத்தாழ ஆறாயிரத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு அதிபராக இருந்தவர் என்ற பெருமைக்குரிவர்.

திரு.சாமி அப்பாத்துரை அவர்கள் பேச்சாற்றல் உடையவர் மட்டுமல்ல, எழுத்தாற்றல் உடையவர் என்பதையும் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். இவரது முதலாவது படைப்பாக 'சங்கானைப் பட்டணம்' அமைகிறது. 1968 இல் வெளி வந்த இப்புத்தகம் பல்கலைக் கழக ஆய்வு நூலாக உள்ளது. இவை தவிர 'உரிமைக் குரல்', "புலம் பெயர்ந்த தமிழன்" 'தரணி எங்கும் தமிழ் வளர்ப்போம்.' என்பனவும் இவரது பெயரை எழுத்துலகில் நிலைநாட்டியுள்ளது.

வெகுவிரைவில் இவர் உருவாக்கிய The Global Nomads in Canada என்ற (கனடாவில் சர்வதேச நாடோடிகள்) இறுவட்டு வெளியிடப்படவுள்ளது.

தமிழில் 30 க்கு மேற்பட்ட பட்டங்களை தனதாக்கிக் கொண்டவர். மகாராணியின் தங்கப்பதக்கம் இவரது பொதுநல சேவை யைக் கொரவிக் குமுகமாக வழங்கப்பட்டது. ஒட்டாவா குடிவரவு - குடியகல்வு அமைச்சும் பட்டங்கள் தந்து இவரது பணியை பாராட்டியுள்ளது. லெப்ரினன்ற் கவர்ணர் விருது இவருக்குக் கிடைத்துள்ளது.

மேலும், இவர் பொலீஸ் திணைக்கள தெற்காசிய இணைப்பு உறுப்பினராகவும் இருந்து மக்களுக்கு பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

RR கிரியேஷன் நிறுவனம் இவருக்குத் தங்கபதக்கம் வழங்கிக் கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றது.

---

பூமியில் இருந்து தனி
உலோகமாக வெட்டி
எடுக்கப்படும் இரு
உலோகங்கள் தங்கமும்
வெள்ளியும் ஆகும

# தாய் நாட்டின் தலை நகரம்

## மருதானை

ச.க.ஆறுமுகசாமி

கொழும்பு புறக்கோட்டையை அடுத்து தென்பால் நீண்ட பாரிய நிலப்பரப்பில் விரிந்து பரந்து இருப்பதுதான் மருதானை என்று அழைக்கப்படும் கொழும்பு - 10 ஆகும்.

கொம்பனி வீதியை மேற்கு எல்லையாகவும் கோட்டை புறக்கோட்டை, புறக்கடை (HULTSDORF) ஐ வடக்காகவும் தெமெட்டக் கொடை பொறளையை கிழக்காகவும் கொள்ளுப்பிட்டி கறுவாத் தோட்டத்தை தென்பால் எல்லை களாகக் கொண்டது கொழும்பு பத்தாகும் (10)

தலை நகரின் இதயமாக கருதப்படும் மருதானயைில் பாரம்பரியமாக சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் சிறப்பாக ஒற்றுமை யாக வாழ்ந்து வருகின்றார்கள்.

கலை கலாச்சாரங்களை பேணி பாதுகாத்து வருகின்றார்கள். ஒற்றுமையாக வாழந்து வருகின்றார்கள்.

சிறப்பாக இருந்த பல கல்லூரிகளான சகிராக் கல்லூரி சென் யோசேப் கல்லூரி, ஆனந்தாக் கல்லூரி, நலாந்த கல்லூரி ஆகியனவும் மருதானை நிலப்பரப்பில் தான் உள்ளன. மிகவும் பழைமையும் முதலாவது தொழில் நுட்பக் கல்லூரியும் மருதானை தாயகமாக கொண்டுள்ளது என்பதும் பெருமைக்குரியதாகும்.

தொடரூந்து சேவையின் தலைமைக் காரியாலயமும் தலை மையும் மருதானையில் தான் அமைந்துள்ளது. சகல தொடர் ஊந்துகள் எல்லாம் மருதானையை மையமாகக் கொண்டு தான் இயங்குகின்றன. கட்டுப்பாட்டு நிலையமும் மருதானையே. அது மட்டுமல்ல தொடரூந்துகள் இளைப்பாறும் இடமும் மருதானையே. ஊழியர் களுக்கான விடுதிகளும் மருதானையை சாந்தேயுள்ளன. மருதானை தொடரூந்து நிலையம் எப்பொழுதும் சன சந்தடி நிறைந்ததாகவே இருப்பதினால் வர்த்தக வளர்ச்சியில் ஒரு பாரிய பரிமாணம் தெரியத் தான் செய்கின்றது.

மருதானை தொழில் நுட்பக் கல்லூரிக்கு ஒரு பாரம்பரியமுண்டு. இலங்கையில் முதல் தொழில்

நுட்பக்கல்லூரி இது தான். இதன் பின்தான் இதனை அடித்ளமாகக் கொண்டு தான் தொழில் நுட்பக் கல்லூரிகள் தோன்றியதெனலாம்.

மருதானைப் பிரிவு இங்கு இருந்து தான் ஆரம்பமாகிறது. தொழில்நுட்பச் சந்தியிலிருந்து விஸ்தரிக்க்பபட்ட அந்த அகண்ட வீதியில் நாம் கால் பதிக்கிறோம். இந்த வீதி அண்மையில் தான் விஸ்தரித்து அழகுபடுத்தப்பட்டி ருக்கிறது. பாதசாரிகளின் நலன் கருதிமரங்கள் நாட்டப்பட்டி ருக்கிறது சீர்த்திருத்தப்பட்டி ருக்கிறது. வீதியில் வானங்களில் நெரிசல் அதிகம். அந்த வீதிகக்கு மருதானை வீதியெனப் பெயரிடப் பட்டு அது நீண்டு பொறளைச் சந்திவரை வளந்திருக்கிறது.

நாம் இப்பொழுது அந்த வீதியில் மருதானை புகையிரத (தொடருந்து) நிலையத்தை நோக்கிச் செல்கிறோம். வீதியின் வலது பக்கம் ஒரு மலை மேடு அதன் மேற்பக்கமாக புகையிரத ஊழியர்களுக்கான விடுதிகளும் இடது பக்கம் நிழல் மரங்கள் நாட்டபபட்டிருக்கும் பக்கவாட்டில் வர்த்தக நிலையங்களும் சென்றல் படமாளிகையும் தனிமன் மருத்துவமனையும் சிறந்த புகைப்படப்பிடிப்பு நிலையமும், சிறந்த சிற்றூண்டிக் கடைகளும் மனதிற்கு பிடிப்பாக அமைந்து ள்ளன.

நாம் தற்பொழுது அந்தப் பாரிய சந்திக்கு வந்து விட்டோம். எம்பிஸ்டன் படமாளிகை மிகவும் எழில் மிகு காட்சியாக நம்மை எதிர்கொள்கின்றது. சென்ற காலங்களில் சிறந்த படங்களை முதலில் வெளியிட்டு மக்களின் கவனத்தை ஈர்த்து இருந்தது. சந்தியில் பாரிய கடடவுட்டுக்கள் கட்டப்பட்டிருந்த அந்த சந்தி இப்பொழுது கழையிழந்து காட்சி தருகின்றது. ஆனாலும் தற்போது அந்த அம்சங்கள் மலைநாட்டில் பயணம் செய்வது போன்ற பிரமை ஏற்படுத்தத் தான் செய்கின்றது. தற்போதைய மராமரத்துப் பகுதியார் வீதியை நவீனப் படுத்தியுள்ளமை நம்மையெல்லாம் பெருமை கொள்ள செய்யாமலும் இல்லை. எல்பிஸ்டன் படமாளிகை இப்பொழுது திரையரங்காக இல்லாமல் கலையரங்காக புதுமையுடன் பொலிவுடன் விளங்குகின்றது. பொதுவாக சிறந்த கலை நிகழ்ச்சிகள் எல்லாம் அந்தக் கலையரங்கில் தான் நடைபெறுகின்றன.

மருதானைச் சந்தியில் மேம் பாலமும், பாலமும் அமைக்கப் பட்டிருப்பது பிரயாணி களுக்கு மிகவும் வசிதியாக உள்ளது.

வீதியைக் கடப்பதற்கு மேம்பாலங்களை பாவிப் பதற்கான ஏற்பாடுகள் செய்யப்

பட்டுள்ளன அதேவேளை புகையிரதத் திற்காக இருப்புப் பாதை வீதியின் கீழ் அதற்கென தனியாக எவ்வித தடையுமின்றி அமைக்கப்பட்டுள்ளன. மருதானைச் சந்திக்கு நாலா பாகத்திலிருந்தும் வாகனங்கள் வந்து கொண்டிருப்பதனால் சந்தியின் போக்குவரத்தை மிகவும் சிறப்பாக நெறிமுறைப் படுத்தியுள்ளார்கள். சந்தியிலிருந்து இடது பக்கம் செல்லும் வீதியானது பஞ்சிகாவத்தைக் கும். கொட்டாஞ் சேனைக்கும் செல்கின்றது.


பஞ்சிகாவத்தை பழைய இரும்புச் சாமான்களுக்குப் பிரபலமானவை. அத்தோடு சிறந்த வாகன பாட்ஸ் கடைகளும் உள்ளன.

பஞ்சிகாவத்தை சந்தியிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் வீதியானது மாளிகாவத்தைக்குச் செல்கின்றது. மாளிகாவத்தை வளம் படுத்தப்பட்ட புதிய குடியிருப்பு. நவீன முறையில் ஒழுங்காக அமைக்கப்பட்ட குடியிருப்பு. தற்பொழுதெல்லாம் மருதானைக்கு மவுசை மாளிகாவத்தை குடியிருப்பு கொடுக்கின்றது.

மாளிகாவத்தையில் புதிய செயலகம் உள்ளது. அங்கே பதிவு மத்திய பிரிவும் ஓய்வூதியத் திணைக்களமும் சிறப்பாக செயல்படுகின்றது. சந்தைத் தொகுதியும் மற்றும் காவல் நிலையமும் உள்ளது. மாளிகாவத்தையில் அரச இயந்திரம் ஒழுங்காக இயங்குவதாகச் சொல்லிக கொள்கிறார்கள்.

இனி நாம் மருதானை சந்தியிலிருந்து பின் நோக்கிச் சென்றால் இடது பக்கத்தில் மருதானை புகையிரத நிலையம் காட்சி தருகின்றது நாட்டின் சகல இருப்பு பாதையில் ஓடுகின்ற தொடருந்துகளை (புகையிரதம்) எல்லாம் கட்டுப் படுத்தும் கட்டுப்பாட்டு தலைமையகம் மருதானை நிலையமாகும். இங்கிருந்து தான் சகல செயல்பாடுகளும் நிறைவேற்றப்படுகின்றன. தலைமை புகையிரத நிலையம்.

அதனைத் தொடர்ந்து மருதானை காவல் நிலையம் (Police station) அதனைச் தொடர்ந்து சிறந்த சைவக் கொட்டல் வலது பக்கமாக கொழும்பு சகிராக்கல்லூரியும் டீன்ஸ் (Deans) வீதியும் டீன்ஸ்வீதியின் அந்தத்தில் இலங்கையின் பாரிய கண் ஆஸ்பத்திரியும் தொடர்ந்து தேசிய வைத்தியசாலையும் உள்ளன. மேற்படி வீதியில் தான் வைத்திய கல்லூரியும், மருந்து வைப்பகமும் (Medical store) உள்ளது. டீன்ஸ் வீதியில்



மருதானை சந்தைத் தொகுதிக் கட்டிடமும் நிமிர்ந்து நிற்கிறது.

இப்பொழுது நாம் மீண்டும் மருதானை வீதிக்கு வருவோம். பல கடைத் தொகுதிகளையும், கடைகளையும், தனியார் ஸ்தாபனங்களையும் இருமருகிலும் தன்னகத்தே கொண்டுள்ள மருதானை வீதியில் தான். ஆனந்தா கல்லூரியும் உள்ளது. பிரபல படப்பிடிப்பு நிலையமான "Donald" பெசனால் வீதியில் வலது புறமாக உள்ளது.

மருதானையில் பட மாளிகைகளும், சிறந்த கல்லூரிகளும் இருப்பது மருதானைக்கு பெருமை சேர்க்கிறது.

சகல சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட மருதானையை கடந்து பொறளைச் சந்தியை அடைகின்றேன்.

*மீண்டும் சந்திப்போம்*

## நபிகளின் சில பொன் மொழிகள்

ஒருவரிடம் இல்லாத குணங்களை, அவரிடம் இருப்பதாகச் சொல்லிப் புகழாதீர்கள்.

பாவமான கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டியதில்லை.

நல்லதைச் செய்வதாகவே இருந்தாலும், நிதானித்துத்தான் செய்யவேண்டும்.

உண்மையான நட்பு என்பது ஆரோக்கியம் போன்றது. அதை இழந்துவிடும் வரை நாம் அதன் மதிப்பை உணர்வதில்லை.

செல்வவளம் என்பது அதிகச் செல்வத்தைப் பெறுவதல்ல, போதுமென்ற மனதைப் பெறுவதே உண்மையான செல்வம்.

# ஐக்கிய வழி

ஐக்கிய வழி தனது பெயரைப் போலவே ஐக்கியத்தையும் வழியையும் காட்டி நிற்கிறது. இது ஒரு தன்னலம் அற்ற இலாப நோக்கற்ற சேவை ஒன்றையே தாரக மந்திரமாக கொண்டு இயங்கி வருகிறது. வாழ வழியற்ற எவருக்கும் அது உதவிக்கரம் நீட்டி நிற்கிறது. பெண்கள், ஆண்கள், மொழி, மதம், நிறம், நாடு, என்ற பாகுபாடின்றி சேவையை நல்கி வரும் இந்த நிறுவனம் உதவி நாடி நிற்போருக்கு ஒரு கலங்கரை விளக்கு என்பதில் ஐயம் இல்லை.

ஐக்கிய வழி நல்கும் சில சேவைகளில் இருப்பிட வசதி அளித்தல், முதியோருக்கான போக்குவரத்து வசதிகள், கணணி, குடும்பபிரச்சனையால் வாழ வழியற்று நிற்கும் அபலைகளுக்கு இருப்பிடவசதி , உணவுவசதி, ஆலோசனை முதலியவற்றை வழங்கி அவர்களும், அவர்கள் குழந்தைகளும் வசதியாக வாழ்வதற்கு உதவுதல், எங்கெங்கு ஒரு மனித உயிர் வாழ வழியற்று நிற்கிறதோ அங்கு உதவிக்கரம் நீட்டி நிற்கிறது ஐக்கியவழி.

இந்த நிறுவனம் இயங்குவதற்கு எங்கிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறது என்று ஆராய முற்பட்டால் அவர்கள் துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள் மூலமாக பொதுமக்களிடம் இருந்து பணம் திரட்டுகிறார்கள். பல நிறுவனங்களில் வேலை பார்பவர்கள் தங்கள் சம்பள காசோலை தரப்படுவதற்கு முதலே ஐக்கிய வழிக்கு நன்கொடைப் பணத்தைக் கொடுத்து மிகுதியைப் பெற்றுக் கொள்ளகூடியதாக இந்த நிறுவனத்துடன் ஒழுங்குகள் செய்து கொள்ளுகிறார்கள். இதன் மூலம் மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை ஐக்கிய வழிக்குப் போய்ச சேருகிறது. ஒருவர் $10 மேல் நன்கொடை கொடுத்தால் அவர் அதனை வருமான வரியில் இருந்து கழிவு பெற்றுக் கொள்ளலாம். இது போன்ற வழிகளால் அளப்பரிய சேவை ஆற்றிவரும் ஐக்கிய வழி நீடூழீ நெடு வாழ்ந்து......

| வைகாசி மாதம் | | மேடம் | இடபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருட்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | செலவு | போட்டி | சினம் | வெற்றி | கவலை | ஆக்கம் | ஓய்வ | உற்சாகம் | நன்மை | மேன்மை | உழைப்பு | கவலைதீரல் |
| | 2 | வெற்றி | நலம் | சுகம் | அமைதி | பயம் | ஆர்வம் | முயற்சி | தனம் | தாமதம் | ஆக்கம் | பொறுமை | உழைபபு |
| | 3 | நஸ்டம் | பிரீதி | பயம் | நலம் | ஆதரவு | உயர்வு | ஆக்கம் | பீடை | ஆதாயம் | வரவு | மேன்மை | முயற்சி |
| | 4 | வரவு | நட்பு | புகழ் | சுகம் | பிரயாசை | அமைதி | லாபம் | சாதனை | ஆர்வம் | உயர்வு | முயற்சி | மேன்மை |
| | 5 | மகிழ்ச்சி | வெற்றி | மேன்மை | நஸ்டம் | ஆதரவு | பொறுமை | ஊக்கம் | நலம் | பொறுமை | ஆக்கம் | முயற்சி | சாதனை |
| | 6 | நலம் | வெற்றி | சுகம் | ஜெயம் | பொறுமை | மகிழ்ச்சி | புகழ் | உயர்வு | ஆதரவு | உற்சாகம் | சாந்தம் | நன்மை |
| | 7 | செலவு | சுபம் | வரவு | சுகம் | பாரட்டு | பகை | முயற்சி | தெளிவு | ஆதாயம் | பக்தி | உழைப்பு | தாமதம் |
| | 8 | ஆதாயம் | ஆதரவு | தோல்வி | போட்டி | இலாபம் | பெருமை | பயம் | நற்செயல் | மகிழ்ச்சி | கீர்த்தி | ஆதரவு | வாழ்வு |
| | 9 | ஜெயம் | பிரீதி | சுகம் | உயர்வு | நட்பு | அமைதி | புகழ் | ஆதரவு | பெருமை | சுபம் | செலவு | கீர்த்தி |
| | 10 | பொறுமை | இன்பம் | அமைதி | போட்டி | ஆதரவு | உற்சாகம் | நட்பு | பெருமை | ஆக்கம் | புகழ் | அனுகூலம் | புகழ் |
| | 11 | லாபம் | நலம் | சுகம் | தனம் | ஆர்வம் | வரவு | ஊக்கம் | விருத்தி | போட்டி | முயற்சி | இன்பம் | மகிழ்ச்சி |
| | 12 | மேன்மை | நிம்மதி | வெற்றி | பூசை | செலவு | சுகம் | நன்மை | பொறுமை | வரவு | சுபம் | ஆதரவு | போட்டி |

கேட்டு வாங்கிப் படியுங்கள் !
மண் வாசம்

| வைகாசி மாதம் | மேடம் | இடபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருட்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | முயற்சி | புகழ் | ஆசை | நேர்மை | நற்செய்தி | நன்மை | உயர்வு | லாபம் | செலவு | வெற்றி | தாமதம் | உழைப்பு |
| 14 | பக்தி | நன்மை | பரிசு | சிந்தனை | உற்சாகம் | அனகூலம் | வெற்றி | உயர்வு | குழப்பம் | நற்செய்தி | புகழ் | உதவி |
| 15 | பக்தி | நன்மை | சிந்தனை | பரிவு | உற்சாகம் | அனுகூலம் | வெற்றி | உயர்வ | குழப்பம் | நற்செயதி | உதவி | புகழ் |
| 16 | நற்செய்தி | போட்டி | சகம் | ஆதரவு | அமைதி | புகழ் | இன்பம் | அச்சம் | நன்மை | வெற்றி | லாபம் | சுபம் |
| 17 | வெற்றி | ஏமாற்றம் | அமைதி | முயற்சி | நன்மை | புகழ் | அச்சம் | நிம்மதி | அனுகூலம் | விவேகம் | ஆர்வம் | உயர்வு |
| 18 | புகழ் | வெற்றி | அசதி | தனம் | அச்சம் | அமைதி | செலவு | தோல்வி | லாபம் | பகை | போட்டி | பெருமை |
| 19 | மேன்மை | போட்டி | புகழ் | ஊக்கம் | விருத்தி | கோபம் | ஆதரவு | நன்மை | செலவு | சிந்தனை | அச்சம் | பரிசு |
| 20 | சாந்தம் | கவலை | நன்மை | பாசம் | வரவு | ஆர்வம் | முயற்சி | தனம் | அச்சம் | பக்தி | வரவு | வெற்றி |
| 21 | நற்செயல் | ஊக்கம் | செலவு | நிம்மதி | அமைதி | தொல்லை | பிரிதீ | உதவி | ஆதரவு | வெற்றி | உயர்வு | நலம் |
| 22 | அன்பு | அமைதி | ஆக்கம் | அனுகூலம் | பிரயாசை | வெற்றி | உற்சாகம் | கவலை | புகழ் | நிம்மதி | சுகம் | இனபம் |
| 23 | தனம் | போட்டி | ஆசை | விவேகம் | ஆக்கம் | பாராட்டு | அன்பு | வெலவு | நற்செயல் | வரவு | புகழ் | சுகம் |
| 24 | நன்மை | அச்சம் | தனம் | வெற்றி | பிரயாசை | சினம் | முயற்சி | சுகம் | போட்டி | நலம் | உற்சாகம் | கோபம் |

கேட்டு வாங்கிப் படியுங்கள் !
மண் வாசம்

| வைகாசி மாதம் | | மேடம் | இடபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருட்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 25 | அச்சம் | தாமதம் | பிரிதீ | சுகம் | ஏமாற்றம் | நற்செயல் | பயம் | சுபம் | பரிசு | நன்மை | ஆக்கம் | செலவு |
| | 26 | எதிர்ப்பு | தடங்கல் | மகிழ்ச்சி | அனுகூலம் | சுகம் | வெற்றி | புகழ் | நற்செய்தி | அன்பு | வரவு | போட்டி | மேன்மை |
| | 27 | பொறுமை | புகழ் | அன்பு | மகிழ்ச்சி | நற்செயல் | அச்சம் | இஇன்பம் | எதிர்ப்பு | விவேகம் | பகை | ஊக்கம் | நிம்மதி |
| | 28 | பாராட்டு | ஆசை | நன்மை | உதவி | தனம் | அன்பு | ஆதரவு | வெற்றி | சினம் | நிறைவு | தடங்கல் | சுகம் |
| | 29 | வெற்றி | பரிவு | பொறுமை | கவலை | நன்மை | வரவு | ஆக்கம் | நட்பு | தோல்வி | பிரிதீ | நலம் | ஜெயம் |
| | 30 | சாந்தம் | உயர்வு | வெற்றி | நேர்மை | பொறுமை | உதவி | தனம் | முயற்சி | களிப்பு | அசதி | பயம் | செலவு |
| | 31 | வரவு | நலம் | அனுகூலம் | பரிவு | நன்மை | தனம் | அன்பு | பணிவு | ஆக்கம் | நற்செயல் | அமைதி | சாதனை |

Protouch
For your Graphic
Designing Needs
416-691-1165

"மண்வாசத்திற்காக"

பிரபல தென்னிந்திய ஜோதிடர் திரு சங்கர சாஸ்திரியார் அவர்கள் தொகுத்து வழங்கும், தின சாஸ்த்திர பலாபலன்கள், பன்னிரு இராசிகட்கும் தரப்பட்டுள்ளன. நாளாந்தம் உங்கள் பலன்களை அனுசரித்து நடந்து பயன் பெறுவீர்களாக. –ஆசிரியர்




**1 .பாலா - டொன்மில்ஸ்**

கேள்வி :- Mr.சுள்ளான்! மனிதனுக்கு கடவுள் நம்பிக்கை தேவைதானா?

பதில் :- கட்டாயம் தேவை. அவன் இல்லாமல் அணுவும் அசையாது.கடவுள் மனங்களில்தான். குழந்தையில்,அன்பு இருப்பவர்களிடம் கூட இருப்பார். நம்பிக்கை வைத்தவர்கள் கைவிடப்படமாட்டார்கள்.

**2. சோமு - மிட்டண்ட் - சோமு**

கேள்வி :- சுள்ளானே! கனடா உமக்கு பிடித்த நாடா?

பதில் :- உண்மை உள்ளவர்களுக்கு பிடித்த நாடு. நாடு எமக்கு என்ன செய்தது என்று எண்ணாமல் நீ அதற்கு என்ன செய்தாய் என்று நினை. நன்றி உண்டானால் நன்மைபெறலாம்

**3. கமலா- 14th அவனியூ**

கேள்வி :- சுள்ளான் அண்ணா! தத்துவங்களை உங்கள் மண்வாசத்தில் நிறைய இருக்கு.

பதில் :- தத்துவத்தில் இரண்டு தத்துவம் உண்டு. ஒன்று வரட்டுத் தத்துவம், மற்றையது உண்மைத்தத்துவம். மனிதன் மனிதனாக வாழ உண்மைத் தத்துவம் தான் தேவை.

**4.அஷ்வினி- மொண்டியோ**

கேள்வி :-சுள்ளான்! பழமொழி என்றால் குறளா?

பதில் :-இல்லை மகளே இரண்டு வரிகள் உள்ளதெல்லாம் குறளல்ல. குறள்கள் எல்லாம் பழமொழியல்ல. உதாரணமாக "எட்டாப் பழத்துக்கு கொட்டாவி விட்டென்ன" இது பழமொழி.. கிடைக்காத பொருளுக்கு ஆசைப்பட்டு பிரயோசனம் இல்லை என்பது இதன் பொருள். இது குறள் அல்ல. ஆனால் "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" கிடைக்காததையும் கிடைக்கப்பண்ணலாம்.

**5.பரஞ்சோதி - வெள்ளவத்தை**

கேள்வி :-சுள்ளானே, மண்வாசம் International மகசீனா?

பதில் : உண்மை. சந்தேகமே வேண்டாம். ஐரோப்பிய உங்கள் நண்பர்களை,இலங்கை உறவினரைக் கேளுங்கள். அங்கும் மண்வாசம் புகழ் பரப்புகிறது. முயற்சி திருவினையாக்கும் என்பது உண்மை.

6. **ஆர்லன் - ஜெர்மனி - ரஞ்சன்**

கேள்வி :- மிஸ்டர் சுள்ளான் பொய் பேசுவதில் தப்பில்லையே?

பதில் :- தேவையில்லாமல் பொய் பேச வேண்டாம். அது நன்மைக்கு எனில் பொய் கூறலாம்..

7. **முஞ்சன் - சிவஞானம்**

கேள்வி : கனடா ஓ.சீ.பேப்பரை அறிமுகப்படுத்தியதால் அது தொற்று நோய் போல ஜெர்மனிக்கும் தாவி விட்டதே?

பதில் : நீங்கள் அன்னத்தைப்போல் இருங்கள். இது வியாபாரத் தந்திரம்

8. **தயா - சைத்தோல், லண்டன்**

கேள்வி : இந்த உலகம் ஒரு பங்கானல் மக்கள் எத்தனை பங்கு சுள்ளான்?

பதில் : கிட்டத்தட்ட கால் பங்குதான் மக்கள். மீதி முக்கால் கடல், காடு, பாலைவனம், மலை இப்படியே கூறலாம். சந்திரனில் குடியேற்றம் தேவையில்லைத்தானே

9. **சீவரத்தினம் - லாசப்பல்**

கேள்வி : சுள்ளானே பிரான்சில் உள்ள புதுமைகள் என்ன?

பதில் : ஆதியில் பிரான்சில் பிரபுத்துவ ஆட்சி நடந்தது. இதனால் பஸ்தீஸ் சிறைச்சாலை உருவானது. புரட்சியாளரால் அது உடைக்கப்பட்டது. இப்போது ஈபில் ரவரும், லூத் மாதா கோவிலும் பிரான்சை மிளிரச் செய்கிறது.

10. **கிப்பிளிங் - வேதா**

கேள்வி : சுள்ளான் கலைஞர்கள் யார்?

பதில் : கலைஞர்கள் தீர்க்க தரிசனம் உள்ளவர்கள். நடந்ததை, நடக்கப்போவதை விளங்கிய உரைகற்கள். இது இவர்களுக்குக் கிடைத்த கொடை. தனக்குத்தானே பட்டம் சூட்டாதவர்கள். திறமையில் புடம் போட்ட தங்கங்கள். இப்படிப் பல.

---

சுள்ளான் கேள்வி – பதில் நீங்கள் தொடர்பு கொள்ள முகவரி

சுள்ளான் கேள்வி – பதில்

மண்வாச இலக்கிய மலர்

51, Annina - Creecent

Markham - ONT

L3R 456

T.P: 905 - 305 - 0762

# தம்பர் குடும்பம் கனடாவிலை

சட்டம்: அங்க மாப்பிள்ளை எடுத்தால் மற்றப் பிள்ளை களைக் கரை சேர்க்க முடியாதெல்லே.

தம்பர்: உங்களைப் போல ஆட்கள் இப்படியான விசயத்தில முன்னுக்கு நிண்டால் எல்லாம் சரிவரும். பயப்படா தீங்கோ. குறிப்பைத் தாங்கோ.

சரசு: பயப்படாதீங்கோ வாத்தியார். எந்தக் குடும்பத்திலதான் பிரச்சனை இல்லை. துணிஞ்சு இறங்குங்கோ. வழி பிறக்கும். சந்தர்ப்பத்தை விட்டால் பிறகு கவலைப்பட வேண்டிவரும்.

சட்டம்: சரி அவேன்ர குறிப்பை வேண்டுங்கோ பாப்பம். நீங்கள் சொல்லுற போது நான் மறுக்கக் கூடாது. எல்லாம் கடவுள்தான். அது சரி தம்பர் படலைக்க விசில் கேட்குது. உங்களுக்கு கடிதம் வந்திருக்குப் போல இருக்குது.

தம்பர்: தெய்வானை ஓடிப்போய்ப் பார். பிள்ளை கனடாவில இருந்து கடிதம் போட்டிருப்பாள்.

சரசு: (கடிதம் வாங்கி வருதல் - உடைத்தல்) இது இங்கிலீசுக் கடிதம். வாத்தியார் இதைப் பாருங்கோ...

சட்டம்: இது இங்கிலீசுக் கடிதம். நான் தமிழ் வாத்தியார். எனக்கு இது புரியாது.

தம்பர்: பரவாயில்லை. என்ரை மகன் இங்கிலீசு படிச்சிருக்கான். அவனைக் கொண்டு வாசிப்பம்.

சட்டம்: அதுவும் நல்லதுதான். போகக்கிடையில என்ரை மூத்த மகளின்ரை அலுவலைப் பாருங்கோ. சரி வந்தால் கனடா அனுப்புவம். நான் போட்டுப் பிறகு வாறன்.

சரசு: தம்பியைக் காணல்ல. பாத்து வாங்கோ. என்ன கடிதமோ தெரியல்லை.

மகன்: அப்பு சயிக்கிள் ஓட்டப் போனனான். அதை நல்ல விலை கேக்கினம் விப்பமோ.

சரசு: தம்பி கடிதம் வந்திருக்கு. நீ படிப்பாய் தானே. பாத்துச் சொல் மோனை.

மகன்: எங்க கடிதம். கொண்டு வாங்கோ (மாறி மாறிப் பார்த்தல்) அப்பு இந்தக் கடிதம் தனித்தனி இங்கிலீசில எழுதி வந்திருக்கு. நான் தொடுத்து எழுதினால்தான் வாசிப்பன்.

தம்பர்: எடே எழுத்துக் கூட்டி வாசிச்சுப் பாரேண்டா...

மகன்: அப்பு இங்கிலீசில இரண்டு இங்கிலீசு இருக்கு. ஒண்டு தனித்தனி இங்கிலீசு. அடுத்தது, தொடுத்து எழுதிற இங்கிலீசு. நான் தொடுத்து எழுதிற இங்கிலீசு தான் படிச்சனான்.

தம்பர்: இங்கிலீசிலையும் இரண்டு இங்கிலீசு எண்டு இப்பதான் அறிகிறன். என்னை ஏன்ரா குழப்புகிறாய்.

மகன்: நான் குழப்பல்ல அப்பு. இங்கிலீசு எண்டால் இப்பிடித்தான்.

தம்பர்: என்னடா விசையாகப் பேசுறாய். வாசிக்கப் பயப்படுகிறாய்.

மகன்: அப்பு எனக்குத் தெரியாது. விசையான இங்கிலீசுதான் கமத்தில படிச்சனான். ஆறுதலாகப் படிச்ச ஆட்களிட்ட கேடபம்.

தம்பர்: உந்த வள்ளியம்மையிட்ட போனால் தான் கேட்கலாம். உன்னை நம்பிப் பிரயோசனம் இல்லை.

சரசு: தம்பியையும் கூட்டிக் கொண்டு போங்கோ. வடிவா வாசித்து, விபரமாகக் கேட்டு வாங்கோ. தம்பி நீயும் கொப்பரோட போய் விபரத்தை அறிஞ்சு வா.

மகன்: சரி அம்மா.

தம்பர்: எனக்கொரு எடுபிடி. வாடா... போய் வருவம். (போய் வருகிறார்கள்)

மகன்: அம்மா எங்களுக்குக் கனடா போகப் பொன்சர் வந்திட்டுது.

தம்பர்: பொடிப்பிள்ளையின்ர புளுகைப்பார்...

சரசு: சந்தோஷம் தானே. இப்பிடிக் கெதியாக வரும் எண்டு நான் நினைச்சு இருக்கவில்லை.

மகன்: அக்கா உள்ளுக்கை விழுந்து கஷ்டப்பட்டுக் கெதியாக அனுப்பிப் போட்டா.

தம்பர்: ஒரு கிழமைக்க கொழும்பு போக வேணும். அப்படியே கனடா போக வேண்டியது தான்.

சரசு: பிள்ளைக்கு ஒரு பல காரமும் சுடல்லை. எப்படிப் போறது.

தம்பர்: இப்ப அவசரப்படாத. கொழும்பு போய்ப் பாப்பம்.

மகன்: அப்பு உடுப்பு எடுக்க வேணும்.

தம்பர்: உங்களுக்கு எது அவசரம், எது அவசரம் இல்லை எண்டு விளங்க வில்லை. ஊருக்கை எவ்வளவு காசை வட்டிக்குக் கொடுத்துப் போட்டன். எல்லாம் ஒரு கிழமைக்குள் வசூல் பண்ணவேணும். இப்படி திடீரெனப் பொன்சர் வரும் எண்டு நான் எதிர் பார்க்கவில்லை. பாப்பம். வட்டி இல்லாட்டியும் முதலைக் கைப்பற்ற வேணும்.

காட்சி 6

சரசு: ஏன் இந்த மனுஷன் வாய் திறக்காத வா என் பின்னால எண்டு பாயுறார். தம்பி வாடா கெதியாக என்ன நடக்குது எண்டு பாப்பம்.

மகன்: இவர் போற போக்கைப் பாத்தால் கனடாவுக்கு நடந்தே போய் விடுவார் போல இருக்கு.

தம்பர்: ஸ்... ஸ்... ஒண்டும் கதைக்கப்படாது. சத்தம் போடாமல் வாங்கோ...

சரசு: ஊரில புறப்பட்ட மனுஷன் கிளாலி, வவுனியா, கொழும்பும் வந்தாச்சு. சாப்பாடு இல்லை. ஒரே தண்ணிச் சாப்பாடுதான். எல்லாரும் வயித்தை எக்கி எக்கிக் கொழும்பும் வந்திட்டம்.

தம்பர்: அப்பாடா... இப்பதான் நிம்மதி.... வடிவாச் சாப்பிடுங்கோ. குளியுங்கோ. படுங்கோ. என்ன ஏது எண்டு என்னைக் கேட்கக் கூடாது.

சரசு: தம்பி எனக்கும் ஒண்டும் புரியல்லை. பொறுத்துப் பாப்பம்.

மகன்: அம்மா அக்காவோட போனில ஒருக்கால் கதைச்சால் என்ன.

சரசு: மனுஷன் ஒரு நிலைக்கு வரட்டும். எனக்கும் பிள்ளையோட கதைக்க வேணும். சந்தர்ப்பம் பாத்துத்தான் கதைக்க வேணும்.

அடுத்த இதழில்
தொடரும்.........




PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO - 13. TEL: 2330195



"பொய்மை பல்லக்கில் போனாலும்-உலகத்தில்
உண்மை காலத்தால் காணப்படும்"
On high, with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
Special gift for all occations
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
PRO MAR
Awards & Promotions Ltd
www.promarawards.com
416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5